CONNEMARA PUBLIC LIB
3 1 MAY 1977
MADRAS

# தமிழ்நாட்டு
# நிர்வாக அறிக்கை
## 1972–73

TAMIL NATTU NIRVAKA ARIKKA
1972-73:CU
RUOCOM

( 1-4-1972 முதல் 31-3-1973 வரை )

( சுருக்கம் )

TAMILNADU

©
தமிழ்நாடு அரசு
1977

தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுபொருள்–அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டது.

1977

3 I MAY 1977
MADRAS

## பொருளடக்கம்

முகவுரை

அத்தியாயம் 1—1972-73 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்ச்சிகள்.

அத்தியாயம் 2—நிர்வாகத்துறை

அத்தியாயம் 3—சட்டமன்றத்துறை

அத்தியாயம் 4—நீதித்துறை

அத்தியாயம் 5—நிதித்துறை

அத்தியாயம் 6—பொது நிர்வாகம்

அத்தியாயம் 7—அரசுப்பணிகள்

அத்தியாயம் 8—காவல்துறை, சிறைச்சாலைகள், தீயணைப்புப் பணிகள்

அத்தியாயம் 9—பொதுச் சுகாதாரமும், மருத்துவமும்

அத்தியாயம் 10—வேளாண்மை, கால்நடை வளர்ப்பு கூட்டுறவு.

அத்தியாயம் 11—கல்வி, நூலகம், அரும்பொருட் காட்சியகம், ஆவணக்காப்பகம்.

அத்தியாயம் 12—பாசனமும், மின்விசையும்

அத்தியாயம் 13—போக்குவரத்து

அத்தியாயம் 14—பொதுப்பணிகள், வீட்டுவசதி

அத்தியாயம் 15—இயற்கை வளங்கள்

அத்தியாயம் 16—தொழில்கள், வாணிபம், தொழிலாளர் நலன்.

அத்தியாயம் 17—ஊராட்சி— உள்ளாட்சி நிர்வாகம்

அத்தியாயம் 18—சமூகப் பணிகள்

அத்தியாயம் 19—தேர்தல்கள்

அத்தியாயம் 20—பல்வகை

# முகவுரை.

1972–73 ஆம் நிதியாண்டில் இம்மாநில ஆட்சி குறித்த இவ்வறிக்கை தமிழ நாடு அரசுத் துறைகளின் நிர்வாகச் செயல் முறைகளின் முக்கியக் கூறுகளைப் பற்றி விரிவாக விளக்குகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டுகளுக்குரிய ஒப்பு நோக்குப் புள்ளி விவரங்களிலிருந்து இம் மாநிலத்தின் நிதி நிலை சீராக வளர்ந்து வந்திருப்பது தெரியவரும் :—

| | 1971–72 | 1972–73 |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| மொத்த வருவாய் .. | 40,034.34 | 43,808.11 |
| மொத்தச் செலவு .. | 39,384.39 | 41,703.99 |
| | (+) 649.95 | (+) 2,104.12 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1—4—1972 அன்று அரசிடம் இருந்த ரொக்க இருப்பு. | 1,421.00 |
| 31—3—1973 அன்று இருந்த ரொக்க இருப்பு. | 2,308.16 |

தமிழ் நாடு முழுவதற்குமாக 1972–73 ஆம் ஆண்டில் பெய்த மழையானது இயல்பான மழை அளவைக் காட்டிலும் 3.0 சத வீதம் அதிகமாகும். இம்மாநிலத்தில், இராமநாதபுரம் மாவட்டம் நீங்கலாக, ஏனைய எல்லா மாவட்டங்களிலும் இவ்வாண்டில் பயிர் விளைச்சல் இயல்பாக இருந்தது. இம்மாநிலத்தில் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கெடுத்தோடியது. குறிப்பாக தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வடஆர்க்காடு, செங்கற்பட்டு, தருமபுரி, சென்னை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெரும் வெள்ளச் சேதமும் ஏற்பட்டது. 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளிலிருந்து 6 ஆம் நாள் வரையில் வீசிய புயற் காற்றினால், தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகள் கடும் சேதத்திற்கு உள்ளாயின. நிவாரணப் பணிகளுக்காகவும், பழுது பார்க்கும் பணிகளுக்காகவும் மாநில அரசு, இவ்வாண்டில் ரூ. 7.27 கோடி செலவிட அனுமதியளித்துள்ளது.

இந்த அறிக்கையின் பல்வேறு அத்தியாயங்களில், அரசின் பல்வேறு துறைகள் ஆற்றிய சாதனைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் முக்கிய நிகழ்ச்சிகளை 1 ஆம் அத்தியாயத்தில் காணலாம். மொத்தத்தில், 1972–73 ஆம் ஆண்டு பல வழிகளில் குறிப்பிடத்தக்க சிறந்த ஆண்டாகும். தமிழ் நாடு முதலமைச்சரின் பிறந்த நாளைக் கொண்டாடுமுகத்தான் அவரது பிறந்த நாளான ஜூன் திங்கள் 3 ஆம் நாளோடு ஒன்றிய வகையில் '' முதல்வர் கலைஞர், கருணாநிதி கண்ணொளி வழங்கும் இலவசத் திட்டம் '' என்கிற மாபெரும் திட்டப் பணியைத் தொடங்கியமை இவ்வாண்டு நிர்வாக அறிக்கையின் ஒரு முக்கிய கூறாகும்.

தமிழ் நாடு பால் வள நிறுவனத்தை அமைத்தது; நிலமற்ற ஏழைகளுக்கு 47,923 நிலப்பட்டாக்கள் வழங்கியது, தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடிசைப் பகுதி மாற்றுப் பணியை தொடர்ந்து நடத்தியது, தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி பல்வேறு நிறுவனங்கள், பொறுப்புக் கழகங்கள் ஆகியவற்றிற்கு உச்ச வரம்பு கட்டியது, பயணிப் பேருந்துப் போக்குவரத்தை நாட்டு உடைமையாக்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தியது ஆகியவை அரசின் முக்கியச் சாதனைகளில் குறிப்பிடத் தக்கன. இம்மாநிலம், அதன் மேம்பாட்டுப் பணிகள் அனைத்திலும், குறிப்பாக, திட்டப் பணிகளையும், சமூக நலப் பணிகளையும் செயல் படுத்துவதில் சீராகவும், மன நிறைவளிக்கும் வகையிலும் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வந்தது. எனவே, இம்மாநிலம் அடுத்துவரும் ஆண்டுகளில் நம்பிக்கையோடு துணிச்சலான மாபெரும் திட்டங்களை நிறைவேற்றத் தன்னம்பிக்கையுடன் எடுத்துக்கொள்ள இயலும்.

தலைமைச் செயலகம்,
சென்னை-9,
9—10—1975.

ப. சபாநாயகம்,
அரசுத் தலைமைச் செயலாளர்.

# அத்தியாயம் 1.

## 1972-73 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்ச்சிகள்.

**வேளாண்மை :—**

இம்மாநில மக்களில் பெரும் பகுதியினர் வேளாண்மையினையே நம்பி உள்ளனர். மக்கள் தொகையில் 61 சதவீதத்தினர் விவசாயிகளாகவும், விவசாயத் தொழிலாளர்களாகவும் இருக்கின்றனர். உணவு உற்பத்தியில் இம்மாநிலம் தன்னிறைவு பெற்றிருந்தது. (1) சிறு பாசன வாயில்கள் பலவற்றைப் பழுது பார்த்ததாலும், புதுப்பித்ததாலும் கூடுதலான பாசனவசதி ஏற்பட்டது, (2) ஒரு போக சாகுபடி நிலங்கள் பலவற்றை இரு போக சாகுபடி நிலங்களாக மாற்றியது, (3) பெரும் பகுதி நிலத்தினை அதிக விளைச்சல் தரும் பயிர் ரகங்கள் திட்டத்தின்கீழ்க் கொண்டு வந்ததுடன் மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஐ. ஆர். 8 சாகுபடியைச் சிறப்பாக ஊக்குவித்தது, (4) பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை அரசு மேற்கொண்டது ஆகியவை உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணங்களாகும்.

**கால்நடை வளர்ப்பு :—**

1972-73 ஆம் ஆண்டில், கால் நடைப்பண்ணைகள் ஆறும், செம்மறியாட்டுப் பண்ணைகள் இரண்டும், கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்றும், பால்வற்றிப்போன பசுக்களை வளர்க்கும் பண்ணை ஒன்றும் இம் மாநிலத்தில் செயல்பட்டு வந்தன. இந்தக் கால் நடைப் பண்ணை ஆறிலும் மொத்தத்தில் 9,83,765 கிலோ கிராம் பால் கிடைத்தது. ஓசூர் மாவட்டக் கால் நடைப் பண்ணையில் ஒன்றும், காட்டுப் பாக்கத்தில் ஒன்றும், கப்பலூரில் ஒன்றுமாக குஞ்சு பொரிக்கும் மூன்று பெரிய நிலையங்கள் இருந்தன. குஞ்சு பொரிக்கும் ஒவ்வொரு நிலையத்திலும் திங்கள் ஒன்றுக்கு 20,000 குஞ்சுகளைப் பொரிக்கச் செய்யும் வகையில் இலக்கிடப்பட்டது. ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கால்நடை பண்ணைகளிலும் சின்ன சேலம், சாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள செம்மறியாட்டுப் பண்ணைகளிலும் பால்வற்றிப்போன பசுக்களை வளர்க்கும் அலமாதிப் பண்ணையிலும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் உள்ளன. இம்மாநிலத்தில் 532 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து நூற்றுத் தொண்ணூற்றைந்து மருந்தகப் பொருள்கள் ஆய்வு செய்யப்பட்டன. கால்நடை மருத்துவ நிலையப் பணியாளர்கள் மொத்தம், 45,32,022 கால்

நடை நேர்வுகளுக்குச் சிகிச்சையளித்துள்ளனர். 4,787,977 கால்நடைகளுக்கு அம்மை நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டது. 513,827 கால்நடைகள் காயடிக்கப்பட்டன. கொள்ளை நோய் பரவியுள்ளதாகப் பெறப்பட்ட அறிவிப்புகள் 629. அவ்வாறு கொள்ளை நோய் பரவியிருந்த பகுதிகளில், கொள்ளை நோய்களின் அபாயத்திலிருந்து 2,370,436 கால்நடைகள் பாதுகாக்கப்பட்டன.

கூட்டுறவு:

கூட்டுறவு இயக்கம் தமிழ் நாட்டில் எல்லாக் கிராமங்களிலும் பரவியுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் கூட்டுறவு என்பதன் கீழ், மாநிலத்திட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 93.81 இலட்சமாகும். இவ்வாண்டில் நலிவுற்ற சங்கங்களுக்குப் புத்துயிரளிக்கும் திட்டத்தின் கீழ், தனித்தியங்கவல்ல 200 கூட்டுறவுச் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாக உதவித் தொகை வழங்கப்பட்டது. கூட்டுறவு மத்திய வங்கிகள் இவ்வாண்டு 25 கிளைகளைத் தொடங்கியுள்ளன.

பாற்பண்ணையும் பால் வழங்கலும் :

சென்னை மாநகரில் 267 பால் விற்பனை நிலையங்கள் மூலமாக, நாளொன்றுக்குச் சராசரியாக 82,415 லிட்டர் பால் வழங்கப்பட்டது. மதுரையில் 70 பால் விற்பனை நிலையங்களின் மூலம் சராசரியாக 23,046 லிட்டர் பால் வழங்கப்பட்டது.

நிலமற்ற ஏழைகளுக்கு நிலங்களை ஒப்படை செய்தல் :—

இவ்வாண்டில் 85,013·46 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் வேளாண்மையின்பொருட்டு நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்டன. இக்கால அளவில் 47,923 பட்டாக்கள் வழங்கப்பட்டன. குடியிருப்பு வீடுகள் கட்டிக்கொள்வதன் மூலம் ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருந்த 62,982 நேர்வுகள் முறைப்படுத்தப்பட்டு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

உணவுப்பொருள் வழங்கல் :

உணவுப் பொருள் போக்குவரத்தின் மீதிருந்த கட்டுப்பாடு 1970-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் நீக்கப்பட்டதற்குப் பின்னர் உணவுப் பொருள் வாணிபத்தை அரசு ஓரளவு மேற்கொண்டது. வணிகர்களின் மீதான லெவி கொள்முதலின் மூலம் நெல்/அரிசி கொள்முதல் ஓரளவு செய்யப்பட்டது. சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் திங்கள் ஒன்றுக்கு 300 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வருமானம் உடைய பிரிவினருக்கு மலிவு விலையில் அரிசி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையோர வட்டங்களில்

அரசின் இருப்பில் இருந்து அரிசி பங்கீடு செய்யப்பட்டது. தனியார் வாணிபம் அப்பகுதிகளில் பெருமளவில் கள்ளக்கடத்தல் நடைபெறக் காரணமாக இருந்ததாகத் தெரியவந்ததால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் மொத்தம் 72,638 டன் அரிசி பங்கீடு செய்யப்பட்டது.

**உணவு உற்பத்தி :**

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கென புதிய கிணறுகள் தோண்டுவதற்கு உதவித் தொகை வழங்கும் திட்டம், இரசாயன உரப்பங்கீட்டுத் திட்டம், மும்முர எருவடும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவ்வாண்டில் 994 கிணறுகள் தோண்டி முடிக்கப்பட்டன. இதனால் 994 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி ஏற்பட்டது. 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து நிலவள வங்கிகளும், நிறுவன நிதி வழங்கும் ஏனைய நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு நிதி வசதி அளிக்கின்றன. இரசாயன உரப்பங்கீட்டுத் திட்டத்தின் கீழ், 1.79 இலட்சம் டன் அளவிற்கு நைட்ரஜன் உரம் வழங்கப்பட்டுள்ளது. தீவிர எருவிடும் திட்டத்தின் கீழ் கடனாக ரூ. 236·05 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் அதிக விளைச்சல் தரும் பயிர்வகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தொகையும் அடங்கும்.

**மக்கள் குறை கேட்புத் திட்டம் :—**

மனுநீதித் திட்டம் என்று புகழ் பெற்ற இத்திட்டம், 1969ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் பெறப்பட்ட மொத்த மனுக்கள் 83,075. இவற்றில் முடிவெடுக்கப்பட்ட மனுக்கள் 76,157. இது பெறப்பட்ட மனுக்களில் 92 சதவீதமாகும்.

**நிலச்சீர் திருத்தங்கள் :**

அனேக குத்தகைதாரர்கள் கடனாளிகளாகவும், பொருளாதார வகையில் வறியவர்களாகவும் இருக்கும் காரணத்தால், தமிழ் நாடு 1968-ஆம் ஆண்டு 16-ஆவது சட்டத்தால் கொடுக்கப்பட்ட கால அளவிற்குள் குத்தகை நிலுவைகளைக் கொடுத்துத் தீர்க்க முடியாதவர்களாக அவர்கள் இருப்பதை அரசு உணர்ந்தது. இதனால் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலான கால அளவிற்கான பழையகுத்தகைநிலுவைகளைத் தள்ளுபடிசெய்ய வகை செய்வதன் பொருட்டு தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் குத்தகை நிலுவைகள் (துயர் தணிப்புச்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 21/1972) இயற்றப்பட்டது. இப்படித் தள்ளுபடி செய்வதனால், பயிரிடும் குத்தகைக்காரர்கள் 1971-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாளன்று தொடங்கி

1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளன்று முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவையினை, இந்தச் சட்டம் தமிழ் நாடு அரசிதழில் வெளியாகும் நாளிலிருந்து ஆறு திங்கள் கால அளவிற்குள் செலுத்த வேண்டுமென அதில் குறிப்பிடப்பட்டது. இந்தச் சட்டம் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11-ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. அனுமதிக்கப்பட்ட கால அளவு 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ஆம் நாளன்று முடிவடைந்தது.

தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றாவது திருத்தச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 37/1972) வாயிலாக. சமய நிறுவனங்கள் சமயப் பொறுப்புக் கழகங்கள் நீங்கலானபல்வேறு நிறுவனங்கள், பொறுப்புக் கழகங்களுக்கென விதிக்கப்பட்ட உச்ச வரம்புகள் பின்வருமாறு :—

| | | ஸ்டாண்டர்டு ஏக்கர். |
|---|---|---|
| 1 | கல்லூரிகள் .. .. .. | 40 |
| 2 | உயர்நிலைப் பள்ளி .. .. .. | 20 |
| 3 | தொடக்கப் பள்ளி அல்லது உயர் தொடக்கப் பள்ளி. | 10 |
| 4 | மாணவர் விடுதி .. .. .. | 25 |
| 5 | பஸ் தொழில் பயிற்சிப் பள்ளி .. .. | 25 |
| 6 | வேளாண்மைப் பள்ளி .. .. | 25 |
| 7 | அனாதை இல்லம் .. .. .. | 25 |
| 8 | பிற பொறுப்புக் கழகங்கள் .. .. | 5 |

மேலும் இந்தச் சட்டம் செயலுக்கு வந்ததிற்கு பின்னர், அதாவது 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து இந்த நிறுவனங்களால் வேளாண்மை நிலங்கள் கையகப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

குத்தகைக்காரர்களின் நலனைப் பாதுகாப்பதன் பொருட்டு குத்தகை உரிமை ஆவணத்தை முழுமையானதாகவும் உறுதியாக நம்பத்தகுந்த வகையிலும் தயாரிப்பது மிக அவசியமென அரசு கருதியது, எனவே தமிழ்நாடு 1969 ஆம் அண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணச் சட்டம் அரசால் இயற்றப் பட்டது தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங் கள் குத்தகைக்கு உரிமை ஆவண (திருத்த) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 34/1972] வாயிலாக, குத்தகை காரரிட மிருந்து அல்லது நில உரிமையாளரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத சூழல்களில் சம்பந்தப்பட்ட அதிகாரி தானாக விசாரணை நடத்துவதற்கும் அந்த விசாரணையின் அடிப்படையில் குத்தகைக் காரர்களை பதிவு செய்வதற்கும் வகை செய்யப்பட்டது மேலும் இச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் களால் முடிவு செய்யப்பட்ட எப்பொருள் குறித்தும் விசாரணை வழக்கு நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு கிடையாதென்றும் இதில் வகைசெய்யப்பட்டது.

**மருத்துவத் துறை :**

இவ்வாண்டில், தொழிலாளர் நல அரசு காப்புறுதித் திட்டம் மனநிறைவளிக்கும் வகையில் தொடர்ந்து செயல்பட்டது. மொத்தத்தில் இதனால் 15,54,400 பேர் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சரின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாளிலிருந்து தொடங் கப்பட்ட முதல்வர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டம் என்கிற மாபெரும் திட்டத்தின் வாயிலாகக் குருடர்களுக்குப் பார்வை வழங்கி அந்த குருடர்களின் லட்சோப லட்சம் குடும்பங்களில் சூழ்ந்திருந்த இருள் அகற்றப்பட்டு மகிழ்ச்சி மிக்க வாழ்வு அளிக்கப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப் பட்ட பிறந்தநாள் அன்பளிப்புகள் இத்திட்டத்தை செவ்வனே செயல்படுத்த உதவியது.

**குடும்பநலத் திட்டம் :**

குடும்பநலத் திட்டம் குறித்து தமிழ்நாடு சிறப்புக்கவனம் செலுத்தி வருகிறது. கருத்தடை சிகிச்சையில் இம்மாநிலம் குறிப் பிடத்தக்க வகையில் பணியாற்றியுள்ளது. அதாவது, 2,67,515 ஆண்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும் ,32,762 பெண் களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது.

**சிரணி :**

சிரணி செயல்படத் தொடங்கி ஆறாண்டுகாலம் முடிவுற்றுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 45,524 சிரணித் தொண்டர்கள் உள்ளனர். இவ்வாண்டில் 1,267 பணிகள் இவர்களால் நிறைவேற்றப்பட்டன.

**சமூக நலன் :**

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அனைத்திந்தியப்பணித்தேர்வு எழுதும் வகையில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதன் பொருட்டு தனிப்பயிற்சி நிலையம் ஒன்று சென்னை மாநகரில் செயல்பட்டு வருகிறது. அதில் பயிற்சி பெற்று வந்த எட்டு மாணவர்களில் மூன்று மாணவர்கள் எழுத்து தேர்வில் முதல் வகுப்பில் தேறியுள்ளனர்.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் :**

1972-73ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்குள் 23 பகுதிகளில் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிவரையில் 4,910 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. இந்த குடியிருப்புகள் பெயரளவிலான (குறைவான) வாடகையில், அதாவது, திங்கள் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வீதத்தில் குடிசை வாழ்வோருக்கு கொடுக்கப்பட்டன. கட்டுபடியாகும் வாடகைவீதம் சுமார் ரூ. 45 ஆகும். குடிசைப் பகுதி மாற்றுவாரியம் குடியிருப்புக்களை குறைந்த வாடகையில் விடுவதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய இயலாவிட்டாலும் அதைக் குறைப்பதன் பொருட்டு கடை, அங்காடி முதலிய வருவாய் ஈட்டும் திட்டங்களை வகுத்துள்ளது.

**தமிழ்நாடு பால்வள நிறுவனம் :**

தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்னும் தனியானதோர் நிறுவனம் 1972 ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 1 ஆம் நாள் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம் சென்னை பாற்பண்ணை பால்வழங்குத் திட்டம் குறித்து இத்துறையின் வணிக நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளது.

**கைத்தறியும் துணித்தொழிலும் :**

தமிழ்நாட்டில் சுமார் இருபது லட்சம் பேர்களுக்கு வாழ்வளிக்கும் கைத்தறித்தொழில், பிற குடிசைத்தொழில்களைக்காட்டிலும் பெரிய அளவிலும் மிக முக்கியமானதாகவும் விளங்குகிறது. இத்தொழில் வரலாற்றுச் சிறப்புமிக்கது. நமது கைத்தறி துணி ரகங்கள் வெளிநாட்டு அங்காடிகளில் தனக்கென்று தனிப் புகழை நிலைநாட்டியுள்ளன. கைத்தறித்துணிகளை எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதோ அந்த நாடு

களுக்கு 1972-73 ஆம் ஆண்டில் சென்னைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான கைத்தறித் துணிகளின் மதிப்பு ரூ. 748·37 இலட்சமாகும்.

## அரசுப் பேருந்துப் போக்குவரத்து :

அரசுப் பேருந்துப் போக்குவரத்துத் துறையுடன் பல்வேறு பகுதிகளில் பேருந்து போக்குவரத்து அமைப்புகளைத் திறம் பட நிர்வகிக்கும் பொருட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை அமைத்ததன் வாயிலாக, இம்மாநிலத்தில் நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்தின் அமைப்புமுறை அரசால் மாற்றியமைக்கப் பட்டது. இவ்வாண்டில் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகம், மதுரையில் பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகம், பொள்ளாச்சியில் சேரன் போக்குவரத்துக் கழகம், கும்பகோணத் தில் சோழன் போக்குவரத்துக் கழகம், சேலத்தில் அண்ணா போக்கு வரத்துக் கழகம் ஆகிய ஐந்து போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டு, அவ்வப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் உள்ள பயணிப் பேருந்து போக்குவரத்துமுறை அனைத்தையும் ஐந்தாண்டு காலத்திற்குள் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அரசு முடிவு செய்தது. இதன் பொருட்டு, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயணிப் பேருந்து ஒப்பந்தப் பேருந்து (கையகப்படுத்தல்) அவ சரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்டது. இந்த அவ சரச் சட்டத்தின் விதித்துறைகளின்படி நீலகிரி மாவட்டத்தில் உள்ள பயணிப் பேருந்துகள் 1973ஆம் ஆண்டு ஜனவரித் திங் களில் கையகப்படுத்தப்பட்டு, சேரன் போக்குவரத்துக் கழகத் திற்கு மாற்றப்பட்டன. தற்போது இந்த அவசர சட்டத்திற்குப் பதிலாக தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டம் இயற்றப் பட்டுள்ளது.

## தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக்கழகம் :

முதன் முதலாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டு முயற்சியில் தென்னிந்திய பெட்ரோலிய-இராசயனத் தொழில் கழகம் (SPIC) பெரிய அளவில் ஏற்படுத்தப்பட்டது. இத்தொழிற்சாலை திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டது. தொடக்கநிலையில், நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியாவும், 1,600 டன் யூரியாவும், 600 டன் டை-அமோனியம் பாஸ்பேட்/என்.பி.கே உரமும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கென ரூ.74 கோடி செல வாகுமென மதிப்பீடு செய்யப்பட்டது. இதனால் சுமார் 1,100 பேர் நேரடி வேலைவாய்ப்புப் பெறலாம். மேலும், துணைத் தொழில்கள் பல ஏற்படவும் இது வாய்ப்பளிக்கும்.

## அத்தியாயம்

### நிர்வாகத்துறை.

நிர்வாகம் :

திரு. கோதார்தாஸ் காளிதாஸ் ஷா அவர்கள் தமிழ் நாட்டு ஆளுநராகத் தொடர்ந்து பதவிவகித்து வருகிறார்.

டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான அமைச்சரவை 1972-73 ஆம் நிதி ஆண்டு முழுவதும் தொடர்ந்து பதவி வகித்து வந்தது. இந்த அமைச்சரவையில் கீழ்காணும் அமைச்சர்கள் இருந்தனர்.

1. டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
2. திரு. க. அன்பழகன்
3. திரு. என். வி. நடராசன்
4. திருமதி. சத்தியவாணிமுத்து
5, திரு. ப. உ. சண்முகம்
6. திரு. செ. மாதவன்.
7. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
8. திரு. சி. பா. ஆதித்தனர்
7. திரு. மன்னை பி. நாராயணசாமி
10. திரு.க. இராசாராம்
11. திரு. ஓ. பி. இராமன்
12. திரு. எஸ். இராமசந்திரன்
13. திரு. எம். கண்ணப்பன்

ஆளுநர் அவர்கள், திரு ஏ. பி. தர்மலிங்கம் அவர்களை 2—9—72 ஆம் நாள் முதல் அமைச்சர் அவையில் மற்றோர் அமைச்சராக நியமித்தார். டாக்டர் மு. கருணாநிதி அவர்களை

முதலமைச்சராகவும் கீழ்க்கண்டவர்களை அமைச்சர்களாகவும் கொண்ட அமைச்சரவை அறிக்கை ஆண்டில் தொடர்ந்து பதவி வகித்து வந்தது :

1. டாக்டர். இரா. நெடுஞ்செழியன்
2. திரு. க. அன்பழகன்.
3. திரு. என். வி. நடராசன்.
4. திருமதி சத்தியவாணிமுத்து
5. திரு. ப. உ. சண்முகம்
6. திரு. செ. மாதவன்
7. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
8. திரு. சி. பா. ஆதித்தனர்
9. திரு. ஏ. பி. தர்மலிங்கம்
10. திரு. மன்னை. பி. நாராயணசாமி
11. திரு.கே. இராசாராம்
12. திரு. ஓ. பி. இராமன்
13. திரு. எஸ். இராமச்சந்திரன்
14. திரு. எம். கண்ணப்பன் அவர்கள்

ஆளுநர் அவர்களின் சுற்றுப்பயணங்களும் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளும்.

(அ) ஆளுநர் அவர்கள் மாநிலத்திற்குள் செய்த சுற்றுப்பயணங்கள் —இவ்வாண்டில் ஆளுநர் அவர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, வடஆர்க்காடு, நீலகிரி, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், தென்ஆர்க்காடு, செங்கற்பட்டு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தார்.

(ஆ) மாநிலத்திற்கு வெளியில் செய்த சுற்றுப்பயணங்கள்.—இவ்வாண்டில் ஆளுநர் அவர்கள் ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், கேரளா, டில்லி ஆகிய மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்தார்.

**சென்னை மாநகரில் ஆளுநர் அவர்கள் கலந்துகொண்ட முக்கிய நிகழ்ச்சிகள்.**— தமிழ்நாடு சுகாதாரத்தொண்டு நிறுவனத்தையும், அனைத்திந்திய அச்சு வார்ப்புத் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் 7 வது மாநாட்டையும் ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்தார். செவிலியர் கல்வியின் நூற்றாண்டு விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ஆம் நாள் நடந்த, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மேலவையின் நள்ளிரவு கூட்டத்தொடரினில் உரையாற்றினார். 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாளன்று காலை அவர் புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். அன்றைய அவரது பேச்சு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. குடியரசு நாளைக் கொண்டாடும் வகையில் 1973ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 26ஆம் நாளன்று நடந்த அணிவகுப்புமரியாதையை ஏற்றுக் கொண்டார்.

# அத்தியாயம் 3

## சட்டமன்றம்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக் கூட்டத்தொடர்கள் :— இவ்வாண்டில் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கூட்டத் தொடர்கள் 3 நடந்தன.

**ஆளுநர் அவர்களின் உரை :**

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சட்ட மன்றத்தின் இரண்டு அவைகளும் இணைந்த கூட்டத்தில் 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாளன்று உரையாற்றினார். ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு என். கணபதி கொண்டு வந்தார். 12–2–1973 ஆம் நாளன்று அதைப் பேரவை ஏற்றுக்கொண்டது

இரங்கல் தீர்மானங்களும், நீத்தார் நினைவுக் குறிப்புகளும்.— மூதறிஞர் ராஜாஜி, சட்டமன்ற உறுப்பினர் திரு பி. கோபால் ஆகியோரின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானங்களும் சட்ட மன்றப் பேரவை, மேலவையின் முன்னாள் உறுப்பினர் சிலரின் மறைவு பற்றிய 22 நீத்தார் நினைவுக் குறிப்புகளும் சட்ட மன்றப் பேரவையில் இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டன.

குழுக்கள்.—1973-74ஆம் ஆண்டுக்கு சட்டமன்றத்தைச் சேர்ந்த 9 குழுக்கள் அமைக்கப்பட்டன.

இக்கால அளவில் பல்வேறு குழுக்களின் தலைவர்கள் அவர்களது 23 அறிக்கைகளை பேரவையில் வைத்தனர். 1973-74ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட அறிக்கையினை முதலமைச்சர் அவர்கள் 26–2–1973 ஆம் நாளன்று பேரவையில் வைத்தார். வரவு-செலவுத்திட்டம் மீதான பொது விவாதம் ஏழு நாட்களுக்கு நடைபெற்றது.

4 அரசுத் தீர்மானங்களும். 24 அரசுப் பிரேரணைகளும் விவாதிக்கப்பட்டு பேரவையில் ஏற்கப்பட்டன. பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர பொருள் குறித்துப் பேரவை விதிகளைச் சேர்ந்த 41ஆவது விதியின்கீழ் அமைச்சர்களின் நாட்டத்தை ஈர்த்தபோது அமைச்சர்கள் 34 விவர அறிக்கைகள் அளித்தனர். பேரவை விதிகளைச் சேர்ந்த 82ஆவது விதியின்கீழ் அமைச்சர்கள்

தாமாகவே 18 விவர அறிக்கைகளை அளித்தனர். தனி உறுப்பினர்களால் சட்டமுன் வடிவு இரண்டும், தீர்மானங்கள் மூன்றும் கொண்டுவரப்பட்டு, பேரவையில் விவாதிக்கப்பட்டன. இக்கால அளவில் 46 சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டன. 8 சட்ட முன்வடிவுகள் இணை ஆய்வுகுழுவிற்கு அனுப்பப்பட்டன. நிறைவேற்றப்பட்ட 46 சட்டமுன் வடிவுகளில் 30 சட்ட முன் வடிவுகள் திருத்தச் சட்டவரைவுகளாகும். 16 மூலச்சட்ட முன் வடிவுகளாகும். ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாளன்று மதுரைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு 4 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22ஆம் நாளன்று சென்னை பல்கலைக்கழகப் பேரவைக்கு 6 உறுப்பினர்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**வினாக்கள்.**— இக்கால அளவில் சட்டமன்றப் பேரவையில் விடையளிக்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| உடுக்குறியிட்டவை : | 1,302 |
| குறுகிய காலவினாக்கள் : | 7 |

உடுக்குறியிடப்படாத 21 வினாக்களுக்குரிய விடைகள் பேரவையின் முன் வைக்கப்பட்டன. இந்திய விடுதலையின் 25 ஆவது ஆண்டைக் கொண்டாடும் பொருட்டு 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14ஆம் நாள் நள்ளிரவில் பேரவைமேலவையில் உள்ள தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற மண்டபத்தில் விழா நடத்தினார்கள்.

**அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**—இக்கால அவைமுன் வைக்கப்பட்ட 802 ஏடுகளின் அளவில் விவரம் பின் வருமாறு :—

| | |
|---|---|
| (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் : | 480 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய குறிப்புகள் | 322 |

1973ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் நிலவரப்படி சட்டமன்றப் பேரவையில் கட்சி உறுப்பினர் விவரம் பின்வருமாறு

| தொடர் எண்ணும், கட்சியின் பெயரும். | உறுப்பினர் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. திராவிட முன்னேற்றக் கழகம் .. .. | 175 |
| 2. ஸ்தாபன காங்கிரஸ் .. .. .. | 12 |
| 3. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் .. | 11 |

| தொடர் எண்ணும், கட்சியின் பெயரும். | உறுப்பினர் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி .. .. .. | 8 |
| 5. பார்வர்டு பிளாக் .. .. ... | 7 |
| 6. முஸ்லிம் லீக் .. .. .. | 6 |
| 7. சுதந்திரா .. .. .. | 6 |
| 8. ஆளுங் காங்கிரஸ் .. .. .. | 6 |
| 7. தமிழரசுக்கழகம் .. .. .. | 1 |
| 10. சுயேச்சையாளர்கள் .. .. | 1 |
| 11. நியமனம் செய்யப்பட்டவர்கள் .. ... | 1 |
| 12. காலியாக உள்ளது .. .. .. | 1 |
| மொத்தம் | 2:5 |

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை :

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு மேலவைத் தலைவர் உட்பட 63 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களில் 33 உறுப்பினர்கள் தி.மு. கழகத்தையும் 10 உறுப்பினர்கள் ஸ்தாபன காங்கிரசையும், 3 உறுப்பினர்கள் சுதந்திராக்கட்சியையும் 2 உறுப்பினர்கள் ஐக்கியமுண்ணனிக் கட்சியையும், 2 உறுப்பினர்கள் இந்திய யூனியன் முஸ்லிம்லீக் கட்சியையும், 2 உறுப்பினர்கள் தமிழரசுக் கழகத்தையும் 2 உறுப்பினர்கள் ஆளுங்காங்கிரஸ் கட்சியையும் ஒருவர் உழைப்பாளர் நல கட்சியையும், ஒருவர் பார்வர்டு பிளாக் கட்சியையும் சேர்ந்தவர்கள். ஆறு உறுப்பினர்கள் சுயேச்சையாளர்கள்.

இக் கால அளவில் மூன்று கூட்டத் தொடர்கள் நடைபெற்றன. இவ்வாண்டு முழுவதுமாக மேலவை 50 நாட்கள் நடைபெற்றன.

இரங்கல் தீர்மானங்களும், நீத்தார் நினைவுக் குறிப்புகளும் :

நான்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எட்டு நீத்தார் நினைவுக் குறிப்புகள் கொண்டுவரப்பட்டன.

சட்டமுன் வடிவுகள்.— சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 47 சட்டமுன் வடிவுகள் ஏற்பளிப்பு அல்லது பரிவுரை செய்வதன் பொருட்டு மேலவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. திருத்தம் அல்லது பரிவுரை ஏதுமின்றி அவை மேலவையால் நிறைவேற்றப்பட்டன.

**வினாக்கள்.**—மேலவைக்கு வரப்பெற்ற உடுக்குறியிட்ட 2,240 வினாக்கள், உடுக்குறியிடாத 87 வினாக்கள், 30 குறுகிய கால வினாக்கள் ஆகியவற்றில் உடுக்குறியிட்ட 1,186 வினாக்கள், குறுகிய கால வினாக்கள் 10 ஆகியவற்றிற்கு அனுமதி மறுக்கப்பட்டது. விளக்கம் பெறுவதற்காக 58 வினாக்கள் உறுப்பினர்களுக்கே திருப்பி அனுப்பப்பட்டன. அனுமதிக்கப்பட்ட வினாக்களில், மேலவையில் 778 உடுக்குறியிட்ட வினாக்களுக்கும் 5 குறுகிய கால வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டன. உடுக்குறியிடாத 146 வினாக்களுக்குரிய விடைகள் மேலவைமுன் வைக்கப் பட்டன.

சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42 (1) துணை விதியின் கீழ் அமைச்சர்கள் 26 விவர அறிக்கைகளை அளித்தனர். சட்டமன்ற மேலவை விதிகளின் 82 ஆவது விதியின்கீழ் 11 விவர அறிக்கைகளை அமைச்சர்கள் அளித்தனர்.

பதின்மூன்று ஒத்திவைப்புப் பிரேரணை மேலவையில் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவை எவற்றிற்கும் மேலவைத் தலைவர் இசைவளிக்க மறுத்துவிட்டார். சட்டப்படிக்கான 429 விதிகளும் ஆணைகளும், 279 அறிக்கைகளும், அறிவிப்புகளும், ஏனைய குறிப்புகளும் மேலவை முன் வைக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

# அத்தியாயம் 4.

## நீதித்துறை

சென்னை உயர் நீதிமன்றம் நீதித்துறையின் தலைமையிடமாகும். சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்தும் (முப்படை தொடர்பான சட்டத்தின்கீழ் செயல்படுவதற்கு அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் நீங்கலான பிற உரிமையியல், குற்றவியல், நடுவர் மன்றங்கள்) உயர் நீதிமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழும் மேற்பார்வையின் கீழும் தொடர்ந்து பணியாற்றின. அசல் தரப்பு வழக்குகளையும் மேல் முறையீட்டு வழக்குகளையும் விசாரணைசெய்வதற்கான அதிகாரம் உயர்நீதி மன்றத்திடம் உள்ளது. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளபடி சென்னை உயர் நீதி மன்றத்தில் (தலைமை நீதிபதி உட்பட) 18 நீதிபதிகள் இருந்தனர்.

உரிமை வழக்கு நீதிமன்றம் :

**மேல் முறையீட்டுத்தரப்பு.**—இவ்வாண்டில் உயர் நீதிமன்றத்தில் கீழ்க்காணும் பிரிவுகளில் வழக்கு தொடர்வது பெருகியுள்ளது.

ரிட்மனுக்கள், இரண்டாவது மேல் முறையீடுகள், பலவகை உரிமை வழக்கு மேல் முறையீடுகள், உரிமை வழக்கு மறு ஆய்வு மனுக்கள், வரி வழக்குகள், மனுக்கள், மற்ற நீதிமன்றங்களால் அனுப்பி வைக்கப்பட்ட வழக்குகள், பலவகை உரிமை வழக்கு மனுக்கள்.

கீழ்க்காணும் பிரிவுகளில் வழக்கு தொடர்வது குறைந்துள்ளது :—

மேல் முறையீடுகள், அசல் தரப்பு வழக்குகள், உரிமைப் பட்டயம் குறித்த மேல் முறையீடுகள். ரிட் மேல் முறையீடுகள், உரிமை வழக்குகள் தொடர்பான பல்வகை இரண்டாவது மேல் முறையீடுகள், வரி வழக்குகள், திருமண உரிமை வழக்குகள், தலைமை உயர் நீதிமன்றத்தின் மேலாய்வுக்கு அனுப்பப்படும் மனுக்கள், சிறப்பு நடுவர் மன்ற மேல் முறையீடுகள்.

**அசல் தரப்பு வழக்குகள்.**—உரிமை வழக்குகள், திருமண உரிமை பற்றிய அசல் தரப்பு வழக்குகள், நொடிப்பு நிலை மனுக்கள், ஆகியவற்றைத் தாக்கல் செய்வது கூடியுள்ளது.

உயில் பற்றிய அசல் தரப்பு வழக்குகள், அசல் தரப்பு மனுக்கள், நிறைவேற்றல் மனுக்கள் ஆகியவற்றைத் தாக்கல் செய்வது குறைந்துள்ளது.

உரிமை வழக்கு நீதிமன்றங்கள்—சென்னை மாநகர உரிமை வழக்கு நீதிமன்றம்.—சென்னை மாநகர உரிமை வழக்கு நீதிமன்றத்தில வழக்குகள் தாக்கல் செய்வது கூடியுள்ளபோதிலும், மேல் முறையீடுகள் சிறு வழக்குகள் தாக்கல் செய்வது குறைந்துள்ளது.

**சென்னை சிறு வழக்கு நீதிமன்றம்:**

கீழ்க்காணும் வழக்குப் பிரிவுகளில் வழக்கு தொடர்வது கூடியுள்ளது :—

உரிமை வழக்குகள், பல்வகை மனுக்கள், புதிய விசாரணை குறித்த மனுக்கள் நகராட்சி வரி குறித்த மேல் முறையீடுகள், நகரமைப்புத் திட்டம் குறித்த மேல் முறையீடுகள், ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் மேல் முறையீடுகள், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் மேல் முறையீடுகள், 387, 388 ஆவது பிரிவுகளின் கீழ் நகராட்சி மனுக்கள்.

நிறைவேற்றல் மனுக்கள் தாக்கல் செய்வது குறைந்துள்ளது.

குற்ற வழக்கு நீதிமன்றம்.—இம்மாநிலத்தில் 14 செஷன்ஸ் (மாவட்ட) நீதிமன்றங்கள் உள்ளன. 14 நீதிமன்றங்களிலுமாக மொத்தம் 1,772 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 1,665 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆண்டு இறுதியில் 555 வழக்குகள் தீர்ப்பு வழங்கப்படாமல் இருந்தன. இராமநாதபுரம் தருமபுரி, தஞ்சாவூர் கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் சென்னை மாநகரிலும் செஷன்ஸ் வழக்குகள் தாக்கல் செய்வது குறைந்திருந்தது. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் கிழக்கு, கோயம்புத்தூர் மேற்கு, கன்னியாகுமரி, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் செஷன்ஸ் வழக்குகள் தாக்கல் செய்வது கூடியுள்ளது.

மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.—மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் 10,19,013 வழக்குகள் தொடரப்பட்டன. 10,07,854 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் 54,913

வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்படாமல் இருந்தன. தொடரப்பட்ட 11,46,633 வழக்குகளில், கடும் குற்ற வழக்குகள் மதுவிலக்குக் குற்ற வழக்குகள், காடு குறித்த குற்ற வழக்குகள் பற்றிய விவரங்கள் முறையே வருமாறு :—

| | |
|---|---|
| கடுங்குற்ற வழக்குகள் .. .. .. | 5,020 |
| மதுவிலக்குக் குற்ற வழக்குகள் .. .. | 19,519 |
| காடுகுறித்த குற்ற வழக்குகள் .. .. | 12,810 |

# அத்தியாயம் 5.

## நிதித்துறை

**மாநில அரசு நிதி :**

1971—72 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் ரூ. 4,00,34·34 இலட்சமும், செலவு ரூ. 3,93,84·39 இலட்சமும் ஆகும். எனவே உபரி வருவாய் ரூ. 6,49·95 இலட்சமாகும்.

அரசு வாணிகத் திட்ட மூலதனச் செலவு நீங்கலாக, மொத்த மூலதனச் செலவு ரூ. 42,41·17 இலட்சமாகும்.

அரசு வாணிகத் திட்டங்கள், எதிர்பாராச் செலவு நிதிக்கான நிதி ஒதுக்கீடு நீங்கலாக மூலதனச் செலவுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 4,049·94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1971—72 ஆம் ஆண்டில், அரசு வாணிகத் திட்டங்கள், எதிர்பாராச் செலவு நிதிக்கான நிதி ஒதுக்கீடு நீங்கலான செலவு ரூ. 4,241·17இலட்சமாகும். இவ்வாண்டில் திருத்த மதிப்பீட்டில் ரூ. 4,229·83 லட்சத்திற்கு வகை செய்யப்பட்டிருந்து மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்னும் தலைப்பின்கீழ் மொத்தம் ரூ. 3,205·90 இலட்சம் வழங்கப்பட்டது. தமிழ் நாடு அரசிடம் 1—4—1971, 31—3—1972 ஆகிய நாட்களில் முறையே ரூ. 583·00 இலட்சமும் ரூ. 1,421 இலட்சமும் ரொக்க இருப்புத் தொகைகள் இருந்தன.

**சிறப்பு நிதிகள் :**

31—3—1972 நிலவரப்படி, பஞ்ச நிவாரண நிதியில் எஞ்சியிருந்த இருப்பு ரூ. 24·15 இலட்சமாகும். இத்தொகையில் ரூ. 3·39 இலட்சம் ரொக்கமும் ரூ. 20·76 இலட்சம் (வாங்கும் விலை) அரசுக் கடன் ஆவணங்களும் அடங்கும்.

31—3—1972 நிலவரப்படி ஜமீன்தாரி ஒழிப்பு நிதியில் எஞ்சியிருந்த தொகை ரூ. 87·13 இலட்சமாகும். இதில் ரூ. 37·65 இலட்சம் ரொக்கமும் ரூ. 49·48 இலட்சமும் (வாங்கும் விலை) அரசுக் கடன் ஆவணங்களும் அடங்கும்.

இவ்வாண்டில், தமிழ்நாடு அரசு பொது மக்களிடமிருந்து ரூ. 2,147 03 இலட்சம் ரூபாய் கடன் திரட்டியுள்ளது. நில உச்சவரம்பு இழப்பீட்டுப் பத்திரங்கள் கொடுத்த வகையிலான ரூ. 35·14 இலட்சம் ரூபாய் இதில் அடங்காது. இவ்வாண்டில் நில உச்சவரம்பு இழப்பீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தது உட்பட பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன் தொகையில் மொத்தம் கொடுத்துத் தீர்த்த தொகை ரூ. 876·56 இலட்சமாகும். பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன் காரணமாக பொறுப்பில் ஏற்பட்ட நிகர உயர்வு ரூ. 1,305·61 இலட்சமாகும். பல்வேறு வளர்ச்சி திட்டங்களும், ஏனைய திட்டங்களும் குறித்த வகையில் செலவிற்கு நிதி வழங்க இந்திய அரசிடமிருந்து மொத்தம் ரூ. 83·49 கோடி ரூபாய் கடன் பெறப்பட்டது.

## கருவூலங்கள், கணக்குகள் துறை இயக்குனர் அலுவலகம்.

கருவூலங்கள்—கணக்குகள் துறையில் கீழ்க்காணும் பிரிவுகள் உள்ளன :—

1. கருவூலங்கள்—கணக்குகள் துறை இயக்குநர் அலுவலகம்.

2. மாவட்டக் கருவூலங்கள்—துணைக் கருவூலங்கள்.

3. சம்பளம்—கணக்கு அதிகாரிகள் (வடக்கு, தெற்கு).

4. தேசியப் பாதுகாப்பு நிதி நிர்வாகப் பிரிவு.

5. முத்திரைத்தாள் அலுவலகம்.

6. தமிழ்நாடு அரசுத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் (உதவித்தொகை வழங்கப்பெறும்) வருங்கால வைப்பு நிதி நிர்வாகப் பிரிவு.

7. 'விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றின் திருத்தங்களைக் கவனிக்கும் பிரிவு.

தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யத்தில் வங்கிப்பணிகள் ஆற்றுத துணைக் கருவூலமொன்று 24—1—1973 அன்று தொடங்கப்பட்டது. கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, தருமபுரி, மதுரை, காஞ்சீபுரம், கோயம்புத்தூர், சிவகெங்கை ஆகிய இடங்களில் வங்கித் தொழில் செய்யும் துணைக் கருவூலங்கள் வங்கிப் பணிகளை ஆற்றுத கருவூலங்களாக 23—2—1973 முதற் கொண்டு மாற்றப்பட்டன. வங்கித் தொழில் செய்து வந்த கருவூலங்கள் அனைத்தும் இந்திய ஸ்டேட் வங்கி மேற்பார்வைப் பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதாக அச்சுறுத்தியதன் விளைவாக ஏற்பட்ட நெருக்கடி

நிலைமையைச் சமாளிப்பதற்காக வங்கிப் பணிகளை ஆற்றாத கருவூலங்களாக 1973 பிப்ரவரியில் ஒரு குறுகிய கால அளவிற்கு மாற்றப்பட்டன. மாவட்டக் கருவூலங்கள் அனைத்தும் 27—2—1973 முதல் 3—3—1973 வரை வங்கிப் பணிகளை ஆற்றாத துணைக் கருவூலங்களாகச் செயல்பட்டன. வங்கித் தொழில் செய்யும் துணைக் கருவூலங்கள் அனைத்தும் 27—2—1973 முதல் 10—3—1973 வரை வங்கிப் பணிகளை ஆற்றாத துணைக் கருவூலங்களாக செயல்பட்டன.

இவ்வாண்டு இம்மாநிலத்தில் 135 துணைக்கருவூலங்களும், 13 மாவட்டக் கருவூலங்களும் இருந்தன. 1972 ஆம் ஆண்டுக்கான தற்காலிகத் திட்டப்படி, சம்பளம்—கணக்கு அலுவலகம், மத்தியக் காசுக் கழகம் உட்பட துணைக் கருவூலங்கள், மாவட்டக் கருவூலங்கள் அனைத்தும் ஆய்வுக் குழுக்களினால் ஆய்வு செய்யப்பட்டன.

## சிறு சேமிப்பு.

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு சேமிப்பு இயக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும், நாட்டை வளப்படுத்துவதற்கான பல்வேறு ஆக்கப் பணிகளுக்கும், சிறு சேமிப்பு வசூல் தொகைகள் மூலம் நிதிகள் கிடைக்கின்றன.

1972–73 ஆம் ஆண்டில் பல்வேறு அரசுக் கடன் ஆவணங்களின் கீழ் செய்யப்பட்ட மொத்த, நிகர வசூல்கள் குறித்த விவரம் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) மொத்த வசூல் .. .. .. | 5,985·24 |
| (2) நிகர வசூல் .. .. .. | 1,682·89 |

1971–72 ஆம் ஆண்டில், வளரும் மாத சேமிப்புத் திட்டம், குறித்த கால தொடர் வைப்புத் திட்டம், ஆகியவற்றின்கீழ் ரூ. 496·96 இலட்சம் வசூலாகி இருந்தது. 1972–73 ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 685·08 இலட்சமாக உயர்ந்தது. தற்போது சம்பளப் பட்டியல் சேமிப்புத் தொகுதிகள் ரூ. 6,605 இருக்கின்றன. இவற்றில் ரூ. 38·12 இலட்சம் மாத வருமானம் கிட்டும் அளவுக்கு 5·49 இலட்சம் உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

## மாநில அரசுப் பரிசுச் சீட்டு.

இவ்வாண்டில் 12 குலுக்கல்கள் நடைபெற்றன. மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், மாநகரில் இயக்குநராலும் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற முகவர்

களின் மூலம் பரிசுச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மாநிலத்திற்கு வெளியே தமிழ்நாடு பரிசுச் சீட்டுக்களை விற்க இது வரை 132 முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பரிசுத் தொகை வகைகள் 10—11—1972 முதற்கொண்டு மேலும் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

| பரிசு. | | பரிசுகளின் எண்ணிக்கை. | ஒவ்வொரு பரிசுக்கும் உண்டான தொகை. | மொத்தப் பரிசுத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | ரூ. | ரூ. |
| முதல் பரிசு .. | .. | 1 | 1,00,000 | 1,00,000 |
| ஆறுதல் பரிசு .. | .. | 2 | 1,500 | 3,000 |
| இரண்டாவது பரிசு | .. | 2 | 10,000 | 20,000 |
| ஆறுதல் பரிசு .. | .. | 4 | 500 | 2,000 |
| மூன்றுவது பரிசு | .. | 75 | 1,000 | 75,000 |
| நான்காவது பரிசு | .. | 100 | 500 | 50,000 |
| ஐந்தாவது பரிசு | .. | 500 | 100 | 50,000 |
| ஆறுவது பரிசு .. | .. | 1,000 | 50 | 50,000 |
| மொத்தம் | .. | 1,684 | | 3,50,000 |

பாதுகாப்பு சிறப்பு நிதிக்காக 15—5—1972 அன்று நடைபெற்ற குலுக்கலுக்காக மூன்று வரிசைகள் வெளியிடப்பட்டுள்ளன. இக்குலுக்கலில் வழக்கமான பரிசுகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பரிசுகளும் இடம் பெற்றன :—

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| முதலாவது சிறப்புப் பரிசு ஒன்று | .. | 3,00,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசு ஒன்று | .. | 2,00,000 |
| மூன்றுவது சிறப்புப் பரிசு ஆறு | .. | 50,000 (ஒவ்வொன்றும்). |
| மொத்தம் | .. | 8,00,000 |

# அத்தியாயம் 6.

## பொது நிர்வாகம்.

பருவ நிலை :

வழக்கமாகப் பெய்யும் மழையைக் காட்டிலும் 1972—73ம் ஆண்டில் 3·00 சதவீதம் மழை கூடுதலாகப் பெய்தது.

பயிர் நிலைமை : இம்மாநிலத்தில், இராமநாதபுரம் மாவட்டம் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் பயிரின் நிலை இயல்பாகவே இருந்ததாகத் தெரியவந்தது.

புயல், வெள்ளம், பஞ்சம் :

வெள்ளமும், புயலும்:—1972ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து மிகக் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது. குறிப்பாக தென் ஆற்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், சேலம் திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தருமபுரி, சென்னை, நீலகிரி, ஆகிய மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டது. தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை, ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகள் 4—12—1972 முதல்6—12—1972 வரை புயலினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

எந்த அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை மதிப்பிட பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சி தலைவர்கள் கூட்ட மொன்று நடத்தப்பட்டது. இந்திய அரசின் நிதியுதவியை எதிர் பார்த்து மாநில அரசு ரூ. 4 கோடி வழங்கியது. 1972—73ல் துயர் தணிப்பு, பழுதுபார்த்தல் பணிகளுக்கென மாநில அரசு ரூ. 7·27 கோடி ஒதுக்கீடு செய்தது.

பஞ்ச நிவாரணம்:—இவ்வாண்டில் பஞ்சம் ஏதும் ஏற்பட வில்லை. 1972ல் தென்மேற்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக, இம்மாநிலத்தில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டன. வறட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றின. பாதிக்கப் பட்ட பகுதிகளில் நிலவரி நிலுவை, கடன்கள், வேளாண்மை, வருமான வரி ஆகியவை குறித்து அரசுக்குச் சேர வேண்டிய நிலுவைகளை வசூலிப்பது 31—12—1972 வரை ஒத்தி வைக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டது.

நிலவரி:—1972–73ஆம் ஆண்டில், 'நிலவரி வருவாய்' என்ற தலைப்பின்கீழ் கேட்பு, வசூல், நிலுவை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | நிலுவை. | நடப்பு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. இந்த ஆண்டிற்கான மொத்த கேட்பு (1-4-72 முதல் 31-3-72 வரை). | 5,29,75,013 | 14,82,40,914 |
| 2. (1) இவ்வாண்டில் வசூலான தொகை. | 1,97,68,425 | 13,24,38,528 |
| (2) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது தள்ளி போடப்பட்ட தொகை. | 1,04,83,369 | 2,21,453 |
| 3. மொத்த வசூல். | 3,02,51,794 | 13,26,59,981 |
| 4. 31-3-1973 நிலவரப்படி வசூலிக்கப்படத்தக்க நிகர நிலுவை. | 2,27,23,229 | 1,55,80,933 |
| 5. வசூலிக்கப்படத்தக்க நிகர நிலுவையின் சதவீதம். | 40 சதவீதம். | 11 சதவீதம். |

**செல்வச் சிறுர் காப்பு மன்றம் :**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிவகிரி எஸ்டேட், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மருங்காபுரி எஸ்டேட் நீங்கலாக செல்வச் சிறுர் காப்பு மன்றத்தின் கண்காணிப்பின்கீழ் உள்ள அனைத்து எஸ்டேட்களும், சம்பந்தப்பட்ட எஸ்டேட் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

**சிவகிரி எஸ்டேட் :**

பாதுகாப்பில் உள்ள சிறுர்களுக்கு சிவகிரி எஸ்டேட் இன்னும் மாற்றப்படவில்லை. 1973ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22ஆம் நாளன்று இது குறித்த மேல் முறையீட்டை சென்னை உயர்நீதி மன்றம் இறுதியாக முடிவு செய்துள்ளதைக் குறிப்பிட்டு சொந்த வைப்பீட்டுக் கணக்கில் உள்ள தொகையைத் திருப்பிக் கொடுக்குமாறு கடைசி நில உரிமையாளரின் தலைமகன் தற்

போது ஆட்சியாளருக்கு மனுக் கொடுத்துள்ளார். மேற்சொன்ன மேல் முறையீட்டின் மீது அளிக்கப்பட்ட தீர்ப்பின் அச்சுப்படி அரசு வழக்குரைஞரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மருங்காபுரி எஸ்டேட் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

இணக்கத் தீர்ப்பாணையின்படி சொத்துக்கள் அனைத்தும் அந்தந்தப் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சொத்துக்களின் பாதுகாப்புப் பொறுப்பிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவரை விடுவிப்பதற்கான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. சொத்துக்களின் காப்புப் பொறுப்பிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவரை விடுவிக்குமாறு கோரி நீதிமன்றத்தில் குறிப்பு ஒன்றைத் தாக்கல் செய்யுமாறு திருச்சிராப்பள்ளி, அரசு வழக்குரைஞருக்கு குறிப்பாணை எழுதப்பட்டுள்ளது.

முதுமைகால ஓய்வூதியம் :

முதுமைக்கால ஓய்வூதியம் கொடுக்கும் திட்டம் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல் பட்டது.

31–3–1973ஆம் நாள் வரையில் மொத்தம் 1,08,476 பேருக்கு இந்த ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டது. மரணம், பிற காரணங்களை முன்னிட்டு தகுதியற்றவர்களை நீக்கிவிட்ட பிறகு 31–3–1973ஆம் நாளன்று வரையிலான பட்டியலில் இருந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 42,727 ஆகும் இவ்வாண்டில் ஓய்வூதியமாகக் கொடுக்கப்பட்ட மொத்தத்தொகை 1,04,11,992.89 ஆகும்.

நிலமற்ற ஏழைகளுக்கு நில ஒப்படை செய்தல் :

இவ்வாண்டில் நிலமற்ற ஏழைகளுக்கு 85,013·46 ஏக்கர் பரப்பளவு நிலத்தை வேளாண்மையின் பொருட்டு ஒப்படை செய்து 47,923 பட்டாக்கள் வழங்கப்பட்டன. குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொள்வதன் மூலம் ஆக்கிரமிப்புச் செய்துகொண்ட 62,982 நேர்வுகள் முறைப்படுத்தப்பட்டு, அவை குறித்து வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

வேளாண்மை வருமான வரி :

தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி சட்டம், வேளாண்மை வருமான வரி ஆணையாளரால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவ்வாண்டில் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 210.58 லட்சமாகும்.

முத்திரைத்தாள் :

இவ்வாண்டில் முத்திரைத்தாள் துறை நிர்வாகம் தொடர்ந்து மன நிறைவுடன் செயல்பட்டது. பொது மக்களுக்கு முத்திரைத் தாள்களை முறையாக வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எல்லா வகை முத்திரைத் தாள்களின் இருப்புநிலை முற்றிலும் மனநிறைவளிக்கத்தக்கதாக இருந்தது. இந்த ஆண்டில் எந்த வகை முத்திரைத்தாள் இருப்பு நிலையிலும் பற்றாக்குறை ஏற்படவில்லை.

நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள், நீதித்துறை சாராத முத்திரைத்தாள்கள் ஆகியவற்றின் வாயிலாகக் கிடைத்த வருவாய் வருமாறு : நீதித்துறையைச் சார்ந்த முத்திரைத்தாள்கள் ரூ. 3,62,16,273.50. நீதித்துறை சாராத முத்திரைத்தாள்கள் 19,73,27,605.78. மொத்தம் ரூ. 23,35,43,879.28.

எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாடு :

நிலவரி ஏற்பாட்டு இயக்குநர் நிலவரி ஏற்பாட்டுத் துறையின் தலைவர் ஆவார். இவர், வருவாய்த்துறை வாரியத்தின் (எஸ்டேட்டுகளில் நிலவரி ஏற்பாடு) அலுவல்முறைச் செயலாளருமாவார். பல்வேறு சட்டங்களின்கீழ் நிலவரி ஏற்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துவது குறித்து 31-3-1973ஆம் நாள் வரையில் நிலவரி ஏற்பாட்டுக் குழுக்கள் எய்தியுள்ள முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| சட்டங்கள் | நிலவரி ஏற்பாடு செய்யப்படுவதற்கான பரப்பளவு. | | நிலவரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரப்பளவு. | | எஞ்சியுள்ளவை. | |
|---|---|---|---|---|---|---|
| | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு சதுர மைல்களில். | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு சதுர மைல்களில். | எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு சதுர மைல். |
| (1) | 2(அ) | 2(பி) | 3(அ) | 3(பி) | 4(அ) | 4(பி) |
| தமிழ்நாடு சட்டம் 26/1948. | 5,092 | 11,439·28 | 5,091 | 11,438·79 | 1 | 0·49 |
| தமிழ்நாடு சட்டம் 26/1963. | 2,107 | 1,611·59 | 1,999 | 1,282·12 | 108 | 329·47 |
| தமிழ்நாடு சட்டம் 27/1963. | 13 | 32·11 | 13 | 32·11 | .. | .. |
| தமிழ்நாடு சட்டம் 30/1963. | 13,578 | 1,554·28 | 13,571 | 1,550·24 | 7 | 4·04 |
| இணைக்கப்பட்ட புதுக்கோட்டை பகுதியில் மறு நிலவரி ஏற்பாட்டுப்பணி. | | | | | | |
| தமிழ்நாடு சட்டம் 30/1964. | 74 | 505·92 | 73 | 500·00 | 1 | 5·92 |
| வருவாய்த்துறை மேற்கொண்டு எடுக்கும் நடவடிக்கைகள். | 624 | 1,800·20 | 543 | 1,464·54 | 81 | 335·66 |

பல்வேறு சட்டங்களின் கீழ் இதுவரை வைப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகை, இடைக்காலத் தொகை பற்றியவிவரங்கள் கிழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | இழப்பீடு. | இடைக்காலத் தொகை. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| 31–3–1972ஆம் நாள் வரையில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை. | 7,00,35,894·32 | 2,18,57,530·63 |
| இந்த ஆண்டில் 1–4–1972 முதல் 31–3–1973 வரை வைப்பீடு செய்யப்பட்ட தொகை. | 3,55,144·18 | 67,142·25 |
| மொத்தம் .. | 7,03,91,038·50 | 2,19,24,672·88 |

1972-73 ஆம் ஆண்டிலும், 1973 ஆம் ஆண்டு மார்ச் முடியவும் நிலவரி ஏற்பாட்டு இயக்குநர் அலுவலகத்தாலும், நிலவரி ஏற்பாட்டுக் குழுக்களாலும் செய்யப்பட்ட பணியாளர் குறித்த செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1972–73 ஆம் ஆண்டில். | 1–4–1969 முதல் 1973 ஆம் ஆண்டு மார்ச் முடிய. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| நிலவரி ஏற்பாட்டு இயக்குநர் அலுவலகம் .. | 4,08,284·92 | 14,03,832·04 |
| நிலவரி ஏற்பாட்டுக் குழுக்கள் .. .. .. | 85,27,720·40 | 1,53,56,968·63 |

## மாவட்டச் செய்திக் களஞ்சியங்கள் :

செய்திக் களஞ்சியங்களை மறு ஆய்வு செய்து திரும்ப எழுதும் திட்டமானது, மததிய-மாநில அரசுகளின் கூட்டு ஆதரவு பெறும் தேசியத் திட்டங்களில் ஒன்றாகும். இவ்வாண்டில் இராமநாதபுர மாவட்ட செய்திக் களஞ்சியத்தை அச்சிடும் பணி முடிவுற்றது. நீலகிரி மாவட்ட செய்திக் களஞ்சியத்தை அச்சிடும் பணி மேற் கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ள மாவட்டங்களின் செய்திக் களஞ் சியங்களை மறு ஆய்வு செய்யும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.

## நில அளவையும் வருவாய் ஆவணங்களைப் பேணுதலும், பத்திரப்பதிவும்.

சென்னை வருவாய்த்துறை வாரியத்தின் நிலவரி எஸ்டேட்டு கள் நிலவரி ஏற்பாட்டு ஆணையாளர், நில அளவை நில ஆவணங் கள் துறையின் தலைவராவர். வருவாய்த்துறை வாரியத்தில் (எஸ்டேட்டுகளின் நிலவரி ஏற்பாடு) அலுவல் முறையில் செயலாள ராக இருக்கும் நில அளவை நிலவரி ஏற்பாட்டுத்துறை இயக்குநர் அதன் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு 26,27, 30-ஆவது சட்டங்களின் கீழ் அறிவிக்கப்பட்டு, எடுத்துக் கொள்ளப்பட்ட முறையே இருவார இனும் நிலங்கள் குத்தகைக் கிராம எஸ்டேட் நிலங்கள், சிறு இனும் எஸ்டேட்டுகள் ஆகியவை நில அளவை செய்யப்பட்டன. 31-3-73 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாடு சட்டங்கள் 26/1963, 27/1963 30/1963 ஆகியவற்றின் கீழுள்ள நில அளவைக்கான மொத்தப் பரப்பளவு, நிறுத்தி வைப்பு ஆணைகளின் கீழுள்ள நிலத்தின் பரப்பளவு, நிலவரி ஏற்பாட்டுத்துறைக்குச் சேர வேண்டிய ஆவண ங்கள் நிலவரி ஏற்பாட்டுத் துறைக்கு வழங்கப்பட வேண்டிய ஆவணங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :—

| விவரங்கள் | சட்டம் எண் 26/1963 | சட்டம் எண் 27/1963 | சட்டம் எண் 30/1963 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (பரப்பு சதுர மைல்களில்) | | |
| (அ) நில அளவைக்கான மொத்தப் பரப்பளவு .. | 1,312·25 | 21·59 | 162·14 |
| (இ) நிறுத்திவைப்பு ஆணைகளின் கீழுள்ள நிலத்தின் பரப்பளவு. | 35·35 | .. | .. |
| (உ) நிலவரி ஏற்பாட்டுத்துறைக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள். | 1,269·90 | 21·59 | 162·14 |
| (எ) நிலவரி ஏற்பாட்டுத்துறைக்குச் சேரவேண்டிய ஆவணங்கள். | 7·00 | .. | .. |

110E-4—3a

1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் வரையில் மெட்ரிக் முறையின்கீழ் நடத்தப்பட்ட பொது மறுநில அளவைப் பணியின் முன்னேற்றத்தைக் காட்டும் புள்ளி விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

இவ்வாண்டில் இத்துறைக்கான மொத்தச் செலவு ரு.2,52,01,208-64ஆகும்.

| மாவட்டம். | வட்டம். | மறுநில அளவைக்கான பரப்பளவு. | இடம் குறித்து முடிக்கப்பட்ட பரப்பளவு. | அளவை குறித்து முடிக்கப்பட்ட பரப்பளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (சதுர கிலோ மீட்டர்களில்.) | | |
| தென் ஆர்க்காடு .. | கடலூர் .. .. | 999·66 | 999·66 | 999·66 |
| | திண்டிவனம் .. | 159·41 | 159·41 | 159·41 |
| வட ஆர்க்காடு .. | வேலூர் .. .. .. | 1,024·40 | 354·69 | 84·63 |
| | திருவண்ணமலை .. | 921·40 | 401·75 | 264·56 |
| மதுரை .. .. | கோடைக்கானல் .. | 322·15 | 322·15 | 322·15 |
| நீலகிரி .. .. | குன்னூர் .. .. | 507·43 | 496·98 | 443·24 |
| | உதகமண்டலம் .. | 1,195·12 | 137·52 | 41·5 |
| | கூடலூர் .. .. | 722·25 | 227·40 | 101·07 |

**பத்திரப் பதிவு :**

31—3—1973 ஆம் நாள் நிலவரப்படி, இம் மாநிலத்தில் பத்திரப் பதிவு மாவட்டங்களின் எண்ணிக்கை தொடர்ந்து 21 ஆக இருந்து வந்தது. இந்த ஆண்டில் 3 இடங்களில் புதிதாகப் பத்திரப் பதிவு அலுவலகங்கள் தொடங்கப்பட்டன. இதனால் நமது மாநிலத்தில் உள்ள பத்திரப்பதிவு துணை அலுவலகங்களின் எண்ணிக்கை 395 ஆக உயர்ந்துள்ளது.

இவ்வாண்டு முடிவில் பத்திரப்பதிவு அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 416 ஆக இருந்தது.

இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், வழங்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழ்கள் முதலியவற்றின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (1) பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை. | 1,038,306 |
| (2) வழங்கப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் எண்ணிக்கை. | 325,460 |
| (3) வழங்கப்பட்ட சான்றொப்பமிட்ட நகல்களின் எண்ணிக்கை. | 133,547 |
| (4) வருவாய் .. .. .. | ..3.09 கோடி |
| (5) செலவு .. .. .. | ..1.20 கோடி |

**வன-ஊராட்சிகள் :**

இம் மாநிலத்தில் மதுரை மாவட்டத்தில் மட்டுமே வன ஊராட்சிகள் செயல்பட்டு வருகின்றன. மதுரை மேற்கு வளர்ச்சி மாவட்டத்தில், 1,469·44 ஏக்கர் நிலப்பரப்புடன் கூடிய இரண்டு வன ஊராட்சிகளும், மதுரை கிழக்கு வளர்ச்சி மாவட்டத்தில் 2,080·74 ஏக்கர் நிலப்பரப்புடன் கூடிய மூன்று வன ஊராட்சிகளும் உள்ளன.

மதுரை மேற்கு வளர்ச்சி மாவட்டத்தில் இரண்டு வன ஊராட்சிகளும், மதுரை கிழக்கு வளர்ச்சி மாவட்டத்தில் உள்ள புதூர் வன ஊராட்சியும் தற்போது செயல்படவில்லை. மதுரை கிழக்கு வளர்ச்சி மாவட்டத்தில் உள்ள எஞ்சிய பள்ளபட்டி, மூங்கில்பட்டி வன ஊராட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

**ஆயத்தீர்வை-மதுவிலக்கு :**

இவ்வாண்டில் இம் மாநிலத்தில் போதை தரும் மதுவைப் பொருத்தவரையில் மதுவிலக்குச் சட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்திற்குப் பதிலாக தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டம் செயலுக்கு வந்தது.

இவ்வாண்டில், புட்டிகளில் அடைக்கப்பட்ட மதுவினை வைத்திருக்க மது அருந்துபவர்களுக்கு அவற்றை விற்பனை செய்ய அல்லது வழங்க 895 எப். எல்.-1 உரிமதாரர்களும், 39 எப். எல். 2. உரிமதாரர்களும் (கிளப் உரிமங்கள்) நட்சத்திர ஓட்டல்களில் தங்கியிருப்பவர் பருக மது வழங்குவதன் பொருட்டு அந்த நட்சத்திர ஓட்டல்களில் வெளிநாட்டுச் சாராவிகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டுச் சாராவி வகைகள் ஆகியவற்றை வைத்திருப்பதற்கான எட்டு எப். எல். 3. உரிமதாரர்களும், நான்கு எப்.எல்.-3ஏ உரிமதாரர்களும் இருந்தனர்.

1972–73ஆம் ஆண்டில், இம் மாநிலத்தில் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் தொடர்பான சட்டங்களின் கீழ்த் தெரிவிக்கப்பட்ட குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 65,048 ஆகும். முந்திய ஆண்டில், அதாவது 1971–72 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்ட இத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை 1,46,545 ஆகும். முந்திய ஆண்டில் தெரிவிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கைக்கு மாறாக இந்த ஆண்டில் தெரிவிக்கப்பட்ட குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 48.7 சதவீதம் குறைந்துள்ளது.

**வணிக வரிகள் :**

1962 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் 1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரையிலான காலத்திலும் சென்ற ஆண்டில் அதற்கு நிகரான காலத்திலும் பல்வேறு சட்டங்களின் கீழ் கிடைத்த மொத்த வருவாய் விவரம்கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1972–73 ல் பெறப்பட்ட தொகை .. .. .. | 12,690·01 |
| 1971–72-ல் பெறப்பட்ட தொகை .. .. | 11,081·99 |
| அதிகரிப்பு சதவீதம் .. .. .. | 14·51 சதவீதம் |

**தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்—**

ஆய்வு ஆண்டுக் காலத்தில் கீழ்க்காணும் சட்டங்களின் கீழ் வரி விதிப்புத் திட்டத்தில் மாறுதல் ஏதுமில்லை.

தமிழ்நாடு, 1939ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.

தமிழ்நாடு, 1961-ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.

தமிழ்நாடு, 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கேளிக்கை—குதிரைப் பந்தய (திருத்தச்) சட்டம்.

அறிக்கை ஆண்டில், வணிக வரிச் சட்டங்களனைத்தின் நிர்வாகம் செவ்வனே நடைபெற்றது.

**தமிழ்நாடு விற்பனைவரி, மேல் முறையீட்டு நடுவர் மன்றம்.—**

சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இந்த ஆண்டில் தமிழ் நாட்டில் நடுவர் மன்ற குழுக்கள் மொத்தம் நான்கு இருந்தன. முக்கிய நடுவர் நீதி மன்றம், தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் கீழும், திருவாங்கூர், கொச்சி 1950-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் கீழும், இரண்டாவது மேல் முறையீடுகளை முடிவு செய்வதற்கான நடுவர் மன்றமாகவும் உள்ளது. இது, தமிழ் நாடு முழுவதும் விசாரணை அதிகாரம் பெற்றுள்ளது.

இந்த ஆண்டில் நான்கு நடுவர் மன்றக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பணி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | மேல் முறையீடுகள். | மறு விசாரணை விண்ணப்பங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| முடிவு செய்யப்பட வேண்டியவைகளின் மொத்த எண்ணிக்கை. | 4,108 | 45 |
| முடிவு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை | 2,281 | 22 |
| 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி அன்று முடிவு செய்யாமலிருந்தவற்றின் எண்ணிக்கை. | 1,827 | 23 |

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டம், திருவாங்கூர்-கொச்சி 1950 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டம் :—

| | |
|---|---|
| முடிவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை. | 183 |
| முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 587 |
| 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்று முடிவுறுமல் உள்ள எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 196 |

வணிக வரித்துறையின் மேல் முறையீட்டு உதவி ஆணையாளர்கள்.—இம் மாநிலத்தில் மேல் முறையீட்டு உதவி ஆணையாளர்கள் 16 பேர் இருக்கின்றனர். அவர்களால் மேற்கொள்ளப் பட்ட பணி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| முடிவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை. | 18,505 |
| முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 12,148 |
| 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்று முடிவுறுமல் உள்ள எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 6,357 |

உணவுப்பொருள் வழங்குதுறை.— உணவுப் பொருள் வழங்கு துறையின் பணிகள் கீழ்க்கண்ட பிரிவுகளின்கீழ் வகை செய்யப் பட்டுள்ளன :—

1. நிர்வாகம்.
2. கணக்குகள்.
3. போக்குவரத்து.
4. பங்கீடு.

இத் துறை சட்ட, ஒழுங்கு முறை விதிகளுக்குப் பொறுப்பு வகிக்கையில், 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் வணிக நடவடிக்கைகளைக் கவனிக்கிறது.

1972–73ஆம் ஆண்டில் செய்த கொள்முதல்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| (1) | (2) (அரிசியாக டன்களில்.) |
| --- | --- |
| வணிகர் மீதான விதிமுறைக் கொள்முதல் .. | 1,06,652 |
| வெளி அங்காடிகளில் கொள்முதல் செய்தல் | 4,004 |
| குறுவையின்போது நேரடியாகக் கொள்முதல் செய்தல். | 15,628 |

**பங்கீடு செய்தல்**.—சென்னை மாநகரத்திலும், கோயம்புத்தூரிலும், திங்கள் ஒன்றுக்கு 300 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வருமானமுள்ளவர்களுக்குக் குறைந்த விலைகளில் அரிசி வழங்குவதற்கான திட்டமொன்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லையோர வட்டங்களில் தனியார் துறை வணிகர்கள் பெருமளவில் அரிசி கள்ளக் கடத்தலுக்குக் காரணமாக இருந்தமை தெரியவந்ததால் அரசானது தன் இருப்பிலுள்ள அரிசியை இப் பகுதியில் பங்கீடு செய்து வருகிறது. 1972–73 ஆம் ஆண்டில் பங்கீடு செய்த அரிசியின் மொத்த அளவு 72,638 டன் ஆகும்.

**தமிழ்நாடு கிடங்குக் கழகம்**.—இந்த ஆண்டில் 27 கிடங்கு நிலையங்கள் (இதில் சொந்தமாகக் கட்டப்பட்டவையும், வாடகைக்கு அமர்த்தப்பட்டவையும் அடங்கும்) இருந்தன. இவற்றின் மொத்த கொள் திறன் 82,769 மெட்ரிக் டன் ஆகும். இந்த ஆண்டில் இக் கிடங்குகளில் 1,77,430 மெட்ரிக் டன் சேர்க்கப்பட்டது. 1,13,852 மெட்ரிக் டன் எடுத்துச் செல்லப்பட்டது. ஆண்டு இறுதி இருப்பு 63,578 மெட்ரிக் டன் ஆகும். அறிக்கை ஆண்டில் அரசு 5·93 சத வீதம், வணிகர் 34·601 சத வீதம், கூட்டுறவுச் சங்கங்களும் அரசு நிறுவனங்களும் 34·01 சத வீதம், உழவர்கள் 2·26 சத வீதம் அளவிற்கு கிடங்கு வசதிகளைப் பயன்படுத்தின.

ரயத்துவாரி நில உரிமை:—இந்த ஆண்டில் கீழ்க்காணும் குடிவார உரிமைச் சட்டங்கள் தொடர்ந்து செயலிலிருந்தன.—

1. 1952 ஆம் ஆண்டு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் ;

2. தமிழ்நாடு, 1955 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாதுகாப்புச் சட்டம்.

3. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) சட்டம்.

4. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டம்.

5. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் குத்தகை நிலுவைகள் (நிவாரணச்) சட்டம்,

6. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் (நியாய வாரம் வழங்குதல்) சட்டம்.

7. 1958 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி கை ஏர் வாரம், மாட்டு வாரச் சட்டம்.

8. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) சட்டம்.

9. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) சட்டம்.

10. தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு குடிவார உரிமை குறித்து வேளாண்மை நிலப் பதிவேடுகள் சட்டம்.

11. தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு வேளாண்மை தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம்.

12. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோக தாரர்கள் (உடைமையுரிமை வழங்கல்) சட்டம்.

நகர்ப்புற நிலவரி:—தமிழ்நாடு 1966ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம், நகர்ப்புற நிலங்களின் மீது வரி விதிக்கக் கருதுகிறது. நிலுவைத் தொகை உட்பட மொத்த கேட்புத்

தொகையாக 730·83 இலட்சம் ரூபாயில் இந்த ஆண்டில் வசூலிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 131·09 இலட்சமாகும். இந்த ஆண்டில் நிர்வாகத்திற்குச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 24 இலட்சமாகும்.

**பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்கு நிவாரணமும், புதுவாழ்வும் அளித்தல்.**— 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிவரை தமிழ்நாட்டிற்கு 1,06,278 பர்மா அகதிகள் வந்துள்ளனர். 1964ஆம் ஆண்டு இந்திய ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தின் கீழ் ஸ்ரீலங்காவிலுள்ள குடியுரிமை பெறாத இந்திய வம்சாவளியினர் 5·26 இலட்சம் பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. 15 ஆண்டுக் கால அளவில் அவர்கள் தாயகம் திரும்ப வேண்டும். பர்மாவிலிருந்தும், ஸ்ரீலங்காவிலிருந்தும் தாயகம் திரும்பியவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் வருமாறு:—

| | |
|---|---|
| 1. வாணிகம் நடத்துவதற்காக 1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி முடிய கடன் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 45,745 |
| 2. 1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி முடிய அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட வணிகக் கடன் மொத்தத் தொகை. | ரூ. 4·21 கோடி. |
| 3. தற்காலிகத் தொழிலாளர்கள் நீங்கலாக 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிவரை வேலை வாய்ப்பு அளிக்கப்பட்ட (தற்காலிகத் தொழிலாளர் நீங்கலாக) அகதிகளின் எண்ணிக்கை. | 3,565 |
| 4. வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. | 1,320 |
| 5. அகதிகளை வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுத்தச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை. | ரூ. 31·40 இலட்சம். |
| 6. வழங்கப்பட்ட கல்விச் சலுகைகளின் எண்ணிக்கை. | 775 |
| 7. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிவரை அகதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பெட்டிக் கடைகளின்/கடைகளின் மொத்த எண்ணிக்கை. | 487 |

| | |
|---|---|
| 8. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை உள்ளாட்சி மன்றங்களால் கட்டப்பட்ட பெட்டிக் கடைகளின்/கடைகளின் மொத்த எண்ணிக்கை. | 623 |
| 9. பெட்டிக்கடைகள்/கடைகள் கட்டுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை வழங்கப்பட்ட கடன் தொகை. | ரூ. 7·47 இலட்சம். |

இலங்கை அகதிகள் (ஸ்ரீலங்கா அகதிகள்)—

| | |
|---|---|
| 1. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை வந்து சேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை. | 90,211 |
| 2. தனுஷ்கோடி கடற்பாலத்தின் மேற் பரப்பில் தளமிடுவதற்குச் செலவிடப்பட்ட தொகை. | ரூ. 23,24,766 |
| 3. இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்குச் சாலையமைக்கச் செலவிடப்பட்ட தொகை. | ரூ 20,85,116 |
| 4. மண்டபம், இடைத்தங்கல் முகாமில் வசதிகள் செய்து கொடுப்பதற்கும், கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கும் செலவிடப்பட்ட தொகை. | ரூ. 30,58,297 |
| 5. வாணிகம் நடத்துவதற்காக 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை வணிகக் கடன்கள் அனுமதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. | 3,326 |
| 6. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட வணிகக் கடன்களின் மொத்தத் தொகை. | ரூ. 68·47 இலட்சம். |
| 7. வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட அகதிகளின் எண்ணிக்கை, | 787 |
| 8. வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 680 |

9. வீட்டு வசதிக் கடன்கள் வழங்கப்பட்ட அகதிகளின் எண்ணிக்கை. 1,487

10. 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை கொடுக்கப்பட்ட வீட்டு வசதிக் கடன் மொத்தத் தொகை. ரூ. 22·01 இலட்சம்.

**மனுநீதித் திட்டம்.**—மக்கள் குறை கேட்புத் திட்டம் என்ற புகழ் பெற்ற மனுநீதித் திட்டம், 1969ம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. தனி ஒருவரது சொந்தக் குறைகளை விரைவாகத் தீர்க்க இத்திட்டம் உதவுகிறது. இக் குறைகளைச் சாதாரணமாகத் தீர்க்க வேண்டுமானல், அதற்கு நீண்ட காலம் ஆகக்கூடும். இந்த ஆண்டில் பெறப்பட்ட மனுக்களின் மொத்த எண்ணிக்கை 83,075 ஆகும். முடிவெடுக்கப் பட்ட மனுக்களின் எண்ணிக்கை 76,157 ஆகும். முடிவு எடுக்கப் பட்ட மனுக்கள் 92 சதவீதமாகும்.

# அத்தியாயம் 7.

## அரசுப் பணிகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.—1972–73ஆம் ஆண்டில், ''தொழில் நுட்பப் பதவி'' என்று வகை படுத்தப்பட்ட 24 வகை அரசிதழ்ப் பதவிகளுக்கு நேரடியாக ஆட்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். மொத்தம், 4,484 பேர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றன. 3,413 பேர் வாய் மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். 1,156 பேர் தெரிந்தெடுக்கப்பட்டனர். 1972–73ஆம் ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட காலி இடங்கள் குறித்த 1ஆம் தொகுதிப் பணிகளில் சேர்க்கப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்காக அவர்களுக்கு எழுத்து மூலமாக நடைபெறும் போட்டித் தேர்வு 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலும் 1973ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும் நடத்தப்பட்டது. 1,862 பேர்கள் எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி பதவகளில் நியமிக்கத் தகுதியான ஆட்களைத் தெரிந்தெடுப்பதற்காக, இந்தத் தேர்வுக் கழகம், விண்ணப்பித்த ஆட்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் எழுத்து மூலமாக நடைபெறும் சிறப்புப் போட்டித் தேர்வு ஒன்றை நடத்தியது. மேற்சொன்ன எழுத்துத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட 348 பேர்களில் 46 பேர்கள் வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். மூன்று பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையும், வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பதவிகள் வகை. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை. | எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | காலி இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2-ஆம் தொகுதிப் பணிகள். | 8,088 | 7,496 | வாய்மொழித் தேர்வு விரைவில் நடத்தப்படவிருக்கிறது. | 78 |
| 3-ஆம் தொகுதிப் பணிகள். | 4,283 | 3,563 | 325 | 42 |
| 4-ஆம் தொகுதிப் பணிகள். | 1,756 | 1,660 | வாய்மொழித் தேர்வு விதிக்கப்படவில்லை. | 105 |
| 5-ஆம் தொகுதிப் பணிகள். | 165 | 116 | 41 | 4 |
| 6-ஆம் தொகுதிப் பணிகள். | 435 | 401 | வாய்மொழித் தேர்வு விரைவில் நடத்தப்படவிருக்கிறது. | 20 |
| 7-ஆம் தொகுதிப் பணிகள். | 395 | 330 | ஷை | 10 |

இந்தத் தேர்வுக் கழகம் 1972ஆம் ஆண்டு மே திங்களிலும் 1972ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலும், சிறப்புத் தேர்வுகளையும் துறைத் தேர்வுகளையும் நடத்தியது. இந்தத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 1972ஆம் ஆண்டு மே திங்களில் 26,817 ஆகவும், 1972ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் 25,466 ஆகவும் இருந்தது.

மாவட்ட ஆட்சி உதவித் தலைவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், வனத்துறை அதிகாரிகளுக்கும் அரையாண்டுத் தேர்வும், மொழித் தேர்வுகளும், 1972ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலும் 1973ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும் நடத்தப்பட்டன. மேற்சொன்ன தேர்வுகளுக்கு அனுமதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 67, 60 ஆக இருந்தது. இந்த தேர்வுக் கழகம் டேராடூன் ராஷ்ட்ரீய இந்திய இராணுவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தகுதியான மாணவர்களைத் தேர்நதெடுப்பதற்காக 1972ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலும் 1973ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலும் எழுத்துத் தேர்வுகள் நடத்தியது.

மேல்முறையீடு மனுக்கள் அல்லது மறு ஆய்வு மனுக்கள், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக செய்த குறிப்புகள், பிறந்த நாளைத் திருத்துவது குறித்த குறிப்பீடுகள், அரசுப் பணியாளர்கள் எதிர் வழக்காடுவதற்கு செய்த செலவினைத் திருப்பிக் கொடுத்தல் ஆகியவை குறித்த 100 தேர்வுகள் பற்றி அரசுக்கு அந்தத் தேர்வுக் கழகம் ஆலோசனை வழங்கியது.

## அரசுப் பணிகள் இணைக்குழு.

இவ்வாண்டில் தமிழ்நாடு அரசுப்பணிகள், இணைக்குழு நான்கு முறை கூடியது. அக்கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 84 ஆகும்.

## புகார்கள் பிரிவு.

இவ்வாண்டில்,வரப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை 4,585 ஆகும். அவற்றில் 3,249 புகார்கள் பொதுத் (புகார்கள் பிரிவு) துறையுடன் தொடர்பு கொண்டிராததால் தலைமைச் செயலகத்தின் வேறு துறைகளுக்கு அவை மாற்றப்பட்டன. பல்வேறு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட எஞ்சிய 1,336 புகார்களில் இறுதியாக முடிவு செய்யப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 531 ஆகும். முடிவு செய்யப்படாமல் எஞ்சியுள்ள புகார்களின் எண்ணிக்கை 805 ஆகும்.

## அரசுப் பணிகளுக்கான செலவு.

ஆளுநர், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மேலவைத் தலைவர், மேலவைத் துணைத் தலைவர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளம் நீங்கலாக, 1971–72 ஆம் ஆண்டில் மாநில அரசுப் பணிகளுக்கான செலவு கீழ்க்காணும் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது :—

| சம்பளங்கள். | | ஓய்வூதியங்கள். | |
|---|---|---|---|
| பதவிகளின் மொத்த எண்ணிக்கை. | 1971–72ல் செலவு (ரூ. லட்சத்தில்) | பதவிகளின் மொத்த எண்ணிக்கை. | 1971–72ல் செலவு (ரூ. லட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) |
| 4,77,937 | 11,287.14 | 49,127 | 587.87 |

110E-4—4

## ஒழுக்கக் கண்காணிப்பு—லஞ்ச ஒழிப்பு.

உயர்நீதி மன்றத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரசுப் பணியாளர் நீங்கலாக மாநில அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும், இந்த ஆணைக் குழுவின் அதிகார வரம்பு பொருந்துகிறது. தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம், மதுரை மாநகராட்சி ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் இந்த ஆண்டில் இந்த ஆணைக் குழுவின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டனர். இவ்வாண்டில் இந்த இயக்குநர் அலுவலகம் நிறைவேற்றிய பணியின் விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை. | 1,415 |
| தொடக்க விசாரணை மேற்கொள்ளப்பட்ட புகார்களின் எண்ணிக்கை. | 343 |
| விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 208 |
| விரிவான விசாரணை நடத்தி முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 100 |
| பொறி வைத்துப் பிடிக்கப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை. | 9 |
| புதிதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 8 |

இந்த இயக்குநர் அலுவலகம் செய்த விசாரணைகளின் இறுதி முடிவுகள் புலனாய்வு செய்த பதிவான வழக்குகள், பொறி வழக்குகள் ஆகியவற்றின் இறுதி முடிவுகள் பின் வருமாறு :—

| | வழக்குகளின் எண்ணிக்கை | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தண்டிக்கப்பட்டவர்கள். .. | 4 | 10 |
| சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள். .. | .. | 9 |

| [1] | வழக்குகளின் எண்ணிக்கை. [2] | நபர்களின் எண்ணிக்கை. [3] |
|---|---|---|
| சிறைத் தண்டனையும் அபராதத் தண்டனையும் விதிக்கப்பட்டவர்கள். | -- | 1 |
| விடுவிக்கப் பெற்றவர்கள் அல்லது குற்றச்சாட்டிலிருந்து நீதி முறைப்படி விடுவிக்கப்பட்டவர்கள். | 8 | 22 |
| விசாரணையில் உள்ளவர்கள் .. | 12 | 74 |

| விதிக்கப்பட்ட தண்டனைகளின் தன்மை. (1) | நபர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. பணியிலிருந்து நீக்கப்பட்டவர் .. .. | 9 |
| 2. பணியிலிருந்து அகற்றப்பட்டவர் .. | 3 |
| 3. பதவியிலிருந்து கட்டாயமாக ஓய்வு அளிக்கப்பட்டவர். | 4 |
| 4. பதவி இறக்கம் செய்யப்பட்டவர் .. .. | 2 |
| 5. சம்பளம் குறைக்கப்பட்டவர் .. .. | 3 |
| 6. ஊதிய உயர்வு தள்ளிப் போடப்பட்டவர் .. | 24 |
| 7. ஓய்வூதியம் குறைக்கப்பட்டவர் .. .. | 1 |
| 8. கண்டனமும் சிறு தண்டனைகளும் விதிக்கப் பெற்றவர். | 47 |

ஒழுங்கு நடவடிக்கைக்கான நடுவர் மன்றம்.

சென்னை, மதுரை தஞ்சாவூர் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு இம் மாநிலத்தில் மூன்று நடுவர் மன்றங்கள் செயல்பட்டு வந்தன. அரசுப் பணியாளர்கள் மீதான இலஞ்ச ஊழல் சம்பந்தப்பட்ட எந்த வழக்குகள் இந்த நடுவர்

மன்றங்கள் விசாரிக்க வேண்டுமென்று அரசு கருதியதோ அந்த வழக்குகள் குறித்து இந்த நடுவர் மன்றங்கள் முக்கியமாக விசாரணை நடத்தின. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறும லுள்ள வழக்குகள் இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகள், இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | நடுவர் மன்றம், சென்னை. | நடுவர் மன்றம், மதுரை. | நடுவர் மன்றம், திருச்சிராப்பள்ளி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. 1—4—1972 நில வரப்படி முடிவு பெறுமலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 16 | 24 | 36 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 1 | 4 | .. |
| 3. முடிவு செய்யப்படுவதற்காக உள்ள மொத்த வழக்குகள். | 17 | 28 | 36 |
| 4. முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 16 | 19 | 13 |
| 5. 31—3—1973 அன்று எஞ்சியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 1 | 9 | 23 |

மதுரையிலுள்ள நடுவர் மன்றத்திற்கு மாற்றப்பட்ட ஒரு வழக்கு இதில் அடங்கும். மூன்று நடுவர் மன்றங்களும் அதனதன் அதிகார வரம்புக்குள் இருந்து விசாரணைகளை நடத்தின.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி : - தமிழ்நாட்டில் 1972–73ஆம் ஆண்டில் வெவ்வேறு இடங்களுக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் பின்வருமாறு:—

| கால அளவு. | சென்னை மாநகர். | கடலூர். | திருச்சி ராப்பள்ளி. | மதுரை. | கோயம் புத்தூர். | நாகர் கோவில். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (அடிப்படை: 1960=100) | | | | | | |
| 1972— | | | | | | |
| ஏப்ரல் .. .. | 189 | 193 | 203 | 193 | 180 | 209 |
| மே .. .. | 193 | 196 | 203 | 197 | 183 | 213 |
| ஜூன் .. .. | 197 | 200 | 204 | 197 | 184 | 214 |
| ஜூலை .. .. | 201 | 201 | 204 | 202 | 185 | 222 |
| ஆகஸ்ட் .. .. | 200 | 202 | 208 | 201 | 188 | 224 |
| செப்டம்பர் .. | 199 | 199 | 213 | 201 | 187 | 224 |
| அக்டோபர் .. | 203 | 201 | 212 | 205 | 188 | 226 |
| நவம்பர் .. .. | 207 | 206 | 215 | 210 | 192 | 233 |
| டிசம்பர் .. .. | 211 | 214 | 220 | 219 | 193 | 234 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1973— | | | | | | |
| ஜனவரி .. .. | 211 | 215 | 218 | 219 | 193 | 230 |
| பிப்ரவரி .. .. | 211 | 214 | 228 | 215 | 194 | 232 |
| மார்ச் .. .. | 212 | 216 | 230 | 209 | 197 | 234 |

விலைவாசிப் புள்ளி விவரங்கள் :— தமிழ்நாட்டில் மொத்த விற்பனை விலை குறியீட்டெண்கள் :

(அடிப்படை : 1939 ஆகஸ்ட் 21ஆம் நாள் விலைகள்=100).

| ஆண்டு. | திங்கள். | உணவு தானியங்கள். | வாணிகப் பொருட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1972 | ஏப்ரல் | 1,057 | 1,370 |
| | மே | 1,098 | 1,347 |
| | ஜூன் | 1,102 | 1,387 |
| | ஜூலை | 1,120 | 1,438 |
| | ஆகஸ்ட் | 1,136 | 1,543 |
| | செப்டம்பர் | 1,125 | 1,590 |

| | | | |
|---|---|---|---|
| | அக்டோபர் | 1,144 | 1,627 |
| | நவம்பர் | 1,158 | 1,732 |
| | டிசம்பர் | 1,152 | 1,823 |
| 1973 | | | |
| | ஜனவரி | 1,098 | 1,834 |
| | பிப்ரவரி | 1,075 | 1,921 |
| | மார்ச் | 1,081 | 1,916 |

## அத்தியாயம்—8.

### காவல் துறை, சிறைகள், நியமிப்புப் பணிகள்.

தமிழ்நாடு காவல் துறை :-1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்று தமிழ்நாடு காவல் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை (மலபார் சிறப்புக் காவல் படை, படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவல் படைப் பிரிவுகள் நீங்கலாக) கீழ்க் கண்டவாறு இருந்தது :—

| | |
|---|---|
| (1) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் .. | 315 |
| (2) அரசிதழ் பதிவு பெருத பணியாளர்கள் .. | 43,486 (காவலர்கள் உட்பட) |

1972–73-ஆம் ஆண்டில் கொலைகள் உட்பட, சொத்து தொடர்பான குற்றங்களின் எண்ணிக்கை 21,472 ஆகும். 1971–72 ஆம் ஆண்டில் நிகழ்ந்த அத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை 23,253 ஆகும். இவ்வாண்டில் முந்திய ஆண்டினைவிட 1,781 அல்லது 7.6 சதவீதம் குற்றங்கள் குறைந்துள்ளன. இந்த அளவு குற்றங்களின் எண்ணிக்கை, இரயில்வே காவல்துறை, செங்கற்பட்டு (மேற்கு) கோயம்புத்தூர் (நகர்ப்புறம்), நீலகிரி, வட ஆற்காடு மாவட்டங்கள் நீங்கலாகவுள்ள எல்லா மாவட்டங்களிலும் குறைந்துள்ளது தெரிய வருகிறது.

பல்வேறு தலைப்புக்களின் கீழ் நிகழ்ந்த ற்றங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| குற்ற விவரத் தலைப்பு. | 1972—73 | 1971—72 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கொலை .. .. .. | 965 | 788 |
| 2. கூட்டுக் கொள்ளை .. .. | 20 | 16 |
| 3. வழிப்பறி .. .. .. | 74 | 94 |
| 4. கன்னக் களவு .. .. .. | 6,270 | 7,033 |
| 5. பெருங்களவுகள் .. .. .. | 12,607 | 13,711 |
| 6. சிறு களவுகள் .. .. .. | 446 | 326 |
| 7. கால் நடைத் திருட்டுகள் .. | 1,100 | 1,285 |
| மொத்தம் .. | 21,472 | 23,253 |

1971–72-ஆம் ஆண்டில் மூன்று நிகழ்வுகளில் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தினர். ஆனால் இவ்வாண்டில் பதினேழு நிகழ்வுகளில் காவலர் துப்பாக்கியால் சுட நேரிட்டது. சென்ற ஆண்டு 1,455 குழந்தைகள் சொத்துக் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருக்க, இவ்வாண்டில் 1,379 குழந்தைகள் சொத்துக் குற்றங்களில் சம்பந் பந்தப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. இம்மாநிலத்தில் 31 சிறுவர் சங்கங்கள் உள்ளன. வழக்கமான குற்றவாளிகள் சட்டத்தின் (Habitual Offenders Act) கீழ், 1971–72 ஆம் ஆண்டு இறுதியில் 1,289 பேர் வழக்கமான குற்றவாளிகளென்று அறிவிக்கப்பட்டிருக்க. 1972–73 ஆம் ஆண்டு இறுதியில் 1,332 பேர் அத்தகைய குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டனர். 201 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது.

குடும்பத் துயர் தணிப்பு, மருத்துவ நிவாரணம், விருப்ப மானியம், படிப்புதவித் தொகைகள், ஏனைய பல்வகை மானியங்கள் குறித்து இவ்வாண்டில் தமிழ்நாடு காவலர் நல நிதியிலிருந்து ரூ. 2,48,496 அனுமதிக்கப்பட்டது.

சென்னை மாநகர்க் காவல்படை.

காவல் துறைக் கமிஷனர் உட்பட 31—3—1973 ஆம் நாள் நிலவரப்படி, சென்னை மாநகரக் காவல் துறையினரின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| (1) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் .. | 31 |
| (2) அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் | 777 |

1972–73 ஆம் ஆண்டில் சிறப்பு-உள்ளூர் பகுதிகளில் செயலிலுள்ள சட்டங்கள் நீங்கலாக இந்திய தண்டனைச்சட்டக் கோவையைச் (இ.பி.கோ.) சேர்ந்த பிரிவுகளின் கீழ் பிடியாணை வேண்டாக் குற்றங்கள் மொத்தம் 12,880 பதிவு செய்யப்பட்டன. 1971–72 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இத்தகைய குற்றங்கள் 11,538 ஆகும். குற்றங்கள் தாராளமாகப் பதிவு செய்யப்பட்டதும், குற்றவாளிகளின் பொதுப் பொருளாதார நிலைமைகளும் இந்த அதிகரிப்புக்குக் காரணங்களாகும். இவ்வாண்டு தெரிவிக்கப்பட்ட வழக்குகள் 12,880 ஆகும். இவற்றில் இவ்வாண்டின் தொடக்கத்தில் 3,215 வழக்குகள் முடிவுறாமலிருந்தன. இவற்றில் புலனாய்வுக்குப் பின்னர் 7,377 வழக்குகள் முடிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 85 சதவீதமாயிருக்க, இவ்வாண்டு கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 77.1 சதவீதமாகும். கடந்த ஆண்டு சொத்து மீட்பு

238741 X·211"↑N73 ← N72, 3147

81 சதவீதமாக இருக்க, இவ்வாண்டு சொத்து மீட்பு 71 சதவீத மாகும். ''கொடிய குற்றங்கள்'' குறித்த புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| குற்ற வகை. | 1971–1972. | 1972–1973. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கொலை .. .. .. | 16 | 32 |
| 2. கூட்டுக் கொள்ளை .. .. | .. | 3 |
| 3. வழிப்பறி .. .. .. | 24 | 13 |
| 4. கன்னக் களவு .. .. .. | 169 | 502 |
| 5. திருட்டு .. .. .. | 4,576 | 4,670 |
| 6. கால்நடைத் திருட்டு .. .. | 55 | 58 |
| | 4,840 | 5,278 |

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் அனைத்துத் தலைப்புகளிலும் 2,650 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இளங் குற்றவாளிகள் :— நடப்பாண்டில் இளங்குற்றவாளி களின் குற்றம் அதிகரித்துள்ளது.

சில சிறப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்ட இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| தலைப்பு. | 1971–72 | 1972–73 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சூதாட்டம் .. .. .. | 563 | 1,001 |
| 2. விபச்சார தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். | 471 | 97 |

| | | | |
|---|---|---|---|
| 3. பிச்சை எடுத்தல் | .. .. | 99 | 88 |
| 4. சிறுவர்கள் சட்டம் | .. .. | 1,359 | 3,539 |

போக்குவரத்துத் துறை :— விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை, மரண விபத்துக்கள் முதலியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தலைப்பு. | 1971–72. | 1972–73. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை. | 7,610 | 7,829 |
| 2. மரண விபத்துக்களின் எண்ணிக்கை. | 176 | 196 |
| 3. விபத்தில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை. | 183 | 204 |
| 4. விபத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை. | 4,424 | 4,527 |

போக்குவரத்துக் கட்டுப்பாடு :— சென்னை மாநகரத்தில் 3,799 வாடகைக் கார்களும் 597 ஆட்டோ ரிக்ஷாக்களும் பயனில் இருந்தன. 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளவாறு, தமிழ்நாடு 1911 ஆம் ஆண்டு வாடகை வண்டிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ள வண்டிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1. சைக்கிள் ரிக்ஷாக்கள் | .. .. | 2,392 |
| 2. கை ரிக்ஷாக்கள் | .. .. .. | 1,294 |
| 3. குதிரை வண்டிகள் | .. .. | 177 |
| 4. ஒற்றைமாட்டு வண்டிகள் | .. .. | 150 |
| 5. கை வண்டிகள் | .. .. .. | 6,034 |

தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியல் ஆய்வகம் :— 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் வரையில்

இந்த ஆய்வுக் கூடத்தின் பல்வேறு துறைகளிலும் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, பொருட்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

| துறைகள். | பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | பெறப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. உயிரியல் .. .. .. | 40 | 188 |
| 2. பௌதிகம் .. .. .. | 214 | 419 |
| 3. வேதியல் .. .. .. | 181 | 416 |
| 4. கைத்துப்பாக்கி—சுட்ட குண்டு விவரவியல். .. | 69* | 337* |
| 5. ஆவணங்கள் .. .. .. | 190 | 8,922 |

*இப்புள்ளி விவரங்களில், கேரளம், மைசூர் மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் அடங்கும்.

தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியல் ஆய்வகமும் தமிழ்நாடு வேதியியல் ஆய்வகமும் 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியல்—வேதியியல் ஆய்வகம் என் அழைக்கப்பெறும் ஓரே அமைப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வகத்தின் பல்வேறு துறைகளில் 1973-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை பெறப்பட்ட வழக்குகள், பொருட்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| துறைகளின் பெயர். | வழக்குகளின் எண்ணிக்கை. | பொருட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. உயிரியல்— | | |
| (1) இரத்தக்கறைகள் .. | 89 | 525 |
| (2) விந்துக் கறைகள் .. | 15 | 45 |
| (3) பல்வகை .. .. | 9 | 53 |

| துறைகளின் பெயர். | வழக்குகளின் எண்ணிக்கை. | பொருட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2. கைத்துப்பாக்கி, சுட்ட குண்டு விவரவியல்— | | |
| (1) சுடுபடைக்கலன்கள் | 4 | 13 |
| (2) வெடி மருந்துகள் .. | 1 | 1 |
| (3) பல்வகை .. .. | 3 | 5 |
| 3. வேதியியல் .. .. | 12 | 18 |
| 4. ஆவணங்கள் .. .. | 15 | 572 |
| 5. பௌதிகம்— | | |
| (1) நாணயங்களும் ரூபாய் நோட்டுகளும். | இல்லை | இல்லை |
| (2) காலடித்தடயங்கள் | இல்லை | இல்லை |
| (3) கருவி அடையாளங்கள். | 1 | 3 |
| (4) போக்குவரத்து விபத்துக்கள். | 12 | 27 |
| (5) பல்வகை .. .. | 1 | 6 |
| 6. நிணநீர் இயல் .. .. | 78 | 413 |
| 7. நச்சு இயல்— | | |
| (1) மனிதர்களைப்பாதிக்கும் நஞ்சு. | 374 | 1,393 |
| (2) கால்நடைகளைப் பாதிக்கும் நஞ்சு. | 5 | 52 |
| 8. ஆராய்ச்சி, மருத்துவம்— | | |
| (1) நச்சு இயல் .. | 7 | 13 |

இரசாயன ஆய்வாளர் ஆய்வுக் கூடம்.—இரசாயன ஆய்வாளர் ஆய்வுக் கூடம் பிறர் ஆளுகையின்றித் தனிப்பட இயங்கும் ஓர் ஆய்வுக் கூடமாக 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் வரை இருந்தது. இது அந்நாளன்று தமிழ்நாடு சட்டஞ் சார்ந்த குற்ற அறிவியல் ஆய்வகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் வரையில் இந்த ஆய்வுக் கூடத்தில் செய்யப்பட்ட பணி விவரம் வருமாறு :—

| பிரிவு. | பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | பெறப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. நச்சு இயல் .. .. .. | 2,779 | 11,989 |
| 2. கறைகள் .. .. .. | 949 | 6,201 |
| 3. பல்வகை, சட்டம் சார்ந்த மருத்துவ இயல் தொடர்பானவை. | 12 | 12 |
| 4. வெடி மருந்துகள் சட்டம் சார்ந்த இரசாயன இயல். | 10 | 59 |
| 5. பல்வகை சட்டம் சார்ந்த இரசாயன இயல். | 34 | 54 |
| 6. பல்வகை அரசு பகுப்பாய்வு தனியார் பகுப்பாய்வு. | 23 | 33 |

சிறைச்சாலைகள்.—இந்த ஆண்டில் இம் மாநிலத்தில் இருந்த சிறைச்சாலைகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. மத்தியச் சிறைச்சாலைகள் .. .. | 8 |
| 2. வேலூர், மாநிலப்பெண்கள் சிறை .. | 1 |
| 3. இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி | 1 |
| 4. துணைச் சிறைச்சாலைகள் .. .. | 121 |
| 5. சிறப்புச் துணைச் சிறைச்சாலைகள் .. | 4 |

சிறைக் கைதிகளும் இடவசதியும் :—இந்த ஆண்டில் துணைச் சிறைச் சாலைகள் நீங்கலாக இந்த மாநிலத்தில் உள்ள சிறைச் சாலைகளில் இருந்த எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த கைதிகளின் அன்றாடச் சராசரி எண்ணிக்கை 13,963 ஆகும்.

இந்த ஆண்டில் கைதிகள் 272 குற்றங்கள் புரிந்தனர். அனைத்து வழக்குகள் குறித்தும் சிறைச்சாலை அதிகாரிகளே நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

குற்றவாளிகள் நன்னடத்தைப் பிரிவு :— நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை, மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) இந்த ஆண்டில் நடத்தப்பட்ட விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை. | 17,938 |
| (2) மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 17,884 |
| (3) குற்றவாளிகள் நன்னடத்தை அதிகாரிகள் பார்வையிட்ட முறைகள் மொத்தம். | 39,776 |
| (4) நன்னடத்தைக் காப்பில் வைக்கப்பட்டோர்களுள் வேலை வாய்ப்புப் பெற்றுத்தரப் பட்டவர்கள் எண்ணிக்கை. | 230 |
| (5) வெற்றிகரமாக மறுவாழ்வு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 628 |
| (6) இந்த ஆண்டு மொத்த வருமானம் .. | .. |
| (7) இந்த ஆண்டு மொத்தச் செலவு | ரூ. 6,61,573·91 |

சீர்திருத்தப் பள்ளிகள் :— இவ்வாண்டில் இம் மாநிலத்தில் அனைத்துச் சீர்திருத்தப்பள்ளிகளில் இருந்தவர்களின் அன்றாடச் சராசரி எண்ணிக்கை 3,710 ஆகும். 1973ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்று இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3,867 ஆகும். இத்துடன், இந்த ஆண்டில் கீழ்க்காணும் இல்லங்களும் செயல்பட்டன :—

(1) ஏற்பு இல்லங்கள்.
(2) வேலூர், மகளிர் பிற்காப்பில்லம்.

(3) செங்கற்பட்டு சிறுவர் பிற்காப்பில்லம்.

(4) மாத்தூர் பர்மா அகதிகளின் குழந்தைகளுக்கான சிறப்பு இல்லம்.

(5) மாத்தூர் பர்மா அகதிகளைச் சேர்ந்த ஆதரவற்ற மகளிருக்கான அரசினர் சிறப்பில்லம்.

(6) இந்திய குழந்தை நலக் கழகம், தஞ்சாவூர் மாவட்ட கிளையின்கீழ் உள்ள தஞ்சாவூர் குழந்தைநல இல்லம்.

மேற்சொன்ன அனைத்து இல்லங்களின் மொத்த வருவாய், மொத்தச் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ரூ. பை. |
|---|---|
| வருவாய் .. .. .. .. | 2,54,739·55 |
| செலவு .. .. .. .. .. | 49,20,632·43 |

ஒழுக் க் கண்காணிப்பு நிறுவனங்கள் :— சீர்திருத்தப் பள்ளிகள், ஒழுக்கக் கண்காணிப்புப் பணித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இந்த நிறுவனங்கள் உள்ளன. இவை 'காப்பில்லங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் காப்பில்லங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. காப்பில்லங்களின் எண்ணிக்கை விவரங்கள்கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| (1) மீட்பில்லங்கள் .. .. .. | 3 |
| (2) ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்கள் .. | 2 |
| (3) ஒழுக்கக் கண்காணிப்பு. மீட்புப் புகலிடம்/ஒழுக்கக் கண்காணிப்பு ஏற்பு இல்லங்கள். (அரசு இல்லங்கள் 5) (தனியார் இல்லங்கள் 2) | 7 |

இந்த இல்லங்களில் சேர்க்கப்பட்டவர்கள், அவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | மீட்பு இல்லங்கள். | ஒழுக்கக் கண்காணிப்பில்லங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1—4—1972 அன்றுள்ளோர் எண்ணிக்கை. | 172 | 172 |
| இந்த ஆண்டு சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 135 | 166 |
| மொத்தம் .. | 307 | 338 |
| இந்த ஆண்டில் வெளியில் அனுப்பப்பட்டோரின் எண்ணிக்கை. | 118 | 111 |
| எஞ்சியவர்கள் .. | 189 | 227 |
| மொத்த சராசரி எண்ணிக்கை .. | 182 | 209 |

தீயணைப்புப் பணி :— இந்த ஆண்டின் தொடக்கத்தில் இம்மாநிலத்தில் செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை 60 ஆகும். இந்த ஆண்டில் தீயணைப்பு நிலையங்கள் நான்கு புதிதாகத் தொடங்கப்பட்டன. சென்னை மாநகர் இராயபுரத்தில் ஒன்றும், வடார்க்காடு மாவட்டம் ஆம்பூரில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி நகரத்தில் ஒன்றும், தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் ஒன்றும் தொடங்கப்பட்டன. இதன் மூலம் இந்த ஆண்டின் இறுதியில் தீயணைப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 64 ஆக உயர்ந்தது. இவற்றுள் சென்னை மாநகரில் 13 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன.

இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களில் வரப்பெற்று கவனிக்கப்பட்ட தீ விபத்து, அவசர உதவி அழைப்பு, பொய்யான அறிவிப்பு ஆகியவற்றின் புள்ளி விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை பின்வருமாறு :—

1. தீயணைப்புப் பற்றிய மொத்த அறிவிப்புகள் :— 5,298

| | |
|---|---|
| (1) கடும் தீ விபத்துக்கள் .. .. | 5 |
| (2) நடுத்தர தீ விபத்துக்கள் .. .. | 151 |
| (3) சிறு தீ விபத்துக்கள் .. .. | 4,383 |
| (4) அவசர உதவி அழைப்புகள் .. | 642 |
| (5) பொய்யான அறிவிப்புகள் .. | 66 |
| மொத்தம் .. | 5,298 |
| 2. நகர்ப்புறப் பகுதிகளில் நடந்த தீ விபத்துக்கள்.— | 2,330 |
| (1) கடும் தீ விபத்துக்கள் .. .. | 26 |
| (2) நடுத்தர தீ விபத்துக்கள் .. .. | 59 |
| (3) சிறு தீ விபத்துக்கள் .. .. | 2,245 |
| மொத்தம் .. | 2,330 |
| 3. கிராமப் பகுதிகளில் நடந்த தீ விபத்துக்கள். | 2,260 |
| (1) கடும் தீ விபத்துக்கள் .. .. | 30 |
| (2) நடுத்தர தீ விபத்துக்கள் ... .. | 92 |
| (3) சிறு தீ விபத்துக்கள் .. .. | 2,138 |
| மொத்தம் .. | 2,260 |

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 4. | சேதமடைந்த சொத்தின் தோராய மதிப்பு. | 128·58 |
| 5. | காப்பாற்றப்பட்ட சொத்தின் தோராய மதிப்பு. | 835·73 |
| 6. | உயிரிழந்தோர் எண்ணிக்கை .. .. | 76 |
| 7. | காயமடைந்தோர் எண்ணிக்கை .. | 327 |

இந்த ஆண்டு இறுதியில் துறையிடம் மொத்தம் 58 ஆம்புலன்ஸ் வண்டிகள் இருந்தன. இந்த ஆம்புலன்ஸ் கவனித்த அழைப்புகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) | அழைப்புகளின் மொத்த எண்ணிக்கை | 14,168 |
| (2) | வறியவர், கட்டணம் செலுத்த முடியாத ஏனையோர் அனுப்பிய அழைப்புகள். | 860 |
| (3) | கட்டணம் செலுத்தப்பட்ட நேர்வுகள் | 13,308 |
| (4) | தீயணைப்புப் பணிக்காகக் கட்டணம் வசூலித்த வகையில் கிடைத்த தொகை. | ரூ. 2,11.445·25 |

# அத்தியாயம் 9.

## பொதுச் சுகாதாரமும் மருத்துவமும்.

பிறப்பு—இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள் மாதிரிப் பதிவுத் திட்டம்.—மாதிரிப் பதிவுத் திட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்ட பிறப்பு—இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | பிறப்புவீதம் | இறப்புவீதம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1972— | | |
| அரை ஆண்டு ஆய்விற்கு முன்னர் | 31·3 | 15·8 |
| அரை ஆண்டுஆய்விற்குப் பின்னர் | 33·5 | 17·1 |

**பிறப்புகள், இறப்புகள், திருமணங்கள் குறித்த சிறப்புச்சட்டங்களின் நிர்வாகம் :**

பிறப்புகள், இறப்புகள் :—பல்வேறு சட்டங்களின் கீழ்ப்பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டவரின் பிறப்பு, இறப்பு இவற்றின் எண்ணிக்கை (அவை குறித்து விவரக் கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன) குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு :—

| தொடர் இலக்கமும் சட்டத்தின் பெயரும். | பிறப்புக்களின் எண்ணிக்கை. | இறப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. நகராட்சிச் சட்டங்கள் | 27 | 11 |
| 2. பாளையச் சட்டம், 1924 | 1 | |
| 3. தமிழ்நாடு பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டம் (சட்டம் 3/1899). | .. | .. |

| தொடர் இலக்கமும் சட்டத்தின் பெயரும். | பிறப்புகளின் எண்ணிக்கை. | இறப்புகளின் எண்ணிக்கை: |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 4. பிறப்புகள், இறப்புகள் திருமணங்கள் பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் 6/1886). | 1 | |
| இவ்வாண்டுக்கான மொத்தம் : | 29 | 11 |

திருமணங்கள் :—இந்த ஆண்டில் பல்வேறு சட்டங்களின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் (இவை குறித்த விவரக் கணக்குகள் பெறப்பட்டுள்ளன) குறித்த விவரங்கள் வருமாறு:—

| தொடர் இலக்கம், சட்டத்தின் பெயர் | பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| 1. இந்திய கிறித்துவர் திருமணச் சட்டம் (சட்டம் 15/1872). | 12,464 |
| 2. பார்சி திருமண—திருமண முறிவுச் சட்டம் (சட்டம் 2/1936). | — |
| 3. சிறப்புத் திருமணச் சட்டம் (சட்டம் 43/1954). | — |
| 4. இந்து திருமணச் சட்டம் (சட்டம் 25/1955) | 2,930 |
| இவ்வாண்டுக்கான மொத்தம் | 15,697 |

1954-ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம், 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் ஆகியவற்றின் கீழ்ச் செய்யப் பட்ட பணிகள் குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு :—

| தொடர் இலக்கமும் விவரமும். | 1954-ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம். | 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தேடப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை. | 127 | 467 |
| 2. வழங்கப்பட்ட நகல்களின் எண்ணிக்கை. | 377 | 2,416 |
| | ரூ. பை. | ரூ. பை. |
| 3. சட்டத்தின் கீழ்க் கிடைத்த வருவாய். | 5,587·00 | 19,908·50 |

தொத்து நோய்க் கட்டுப்பாடு.—வாந்தி—பேதி, பெரியம்மை பிளேக் போன்ற அபாயகரமான நோய்கள் பரவுவதைத் தடுப் பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மக்கள் நல்வாழ்வுத் துறையின் முக்கியமான அலுவலாகும். மேலும், நோய் பீடித் துள்ள இடங்களிலெல்லாம் அந்நோய்க் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் இத்துறை மேற்கொள்கிறது.

வாந்தி—பேதி.—இம்மாநிலத்தில் 599 பேருக்கு இந்நோய் கண்டது ; 69 பேர் இறந்தனர். இந்நோயைக் கட்டுப்படுத்து வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பெரியம்மை.—இந்த ஆண்டில் இருவருக்குக் பெரியம்மை கண்டது. எவரும் இறக்கவில்லை. அம்மை குத்தும் பணி மும்முரமாக மேற்கொள்ளப்பட்டது.

மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டம்.—பராமரிப்பு நிலை யின் கீழ் வராத பகுதிகளில் கவனக் கண்காணிப்பு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. இத்துடன் தேவைப்படும்

போதெல்லாம், டி.டி.டி. (D.D.T.) மருந்துதெளித்தல், முட்டைப் புழு வளர்ச்சித் தடுப்பு நடவடிக்கைகள் போன்ற ஏனைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**மருத்துவப் பிரிவும் குடும்ப நலத் திட்டமும்.**—எலும்புருக்கி நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம், அந்நோயினைக் கண்டறிந்து எலும்புருக்கி நோய் கண்டுள்ள எத்தனை பேரைக் குணப்படுத்த இயலுமோ, அத்தனை பேரைக் குணப்படுத்துதல் ஆகும். மேலும், இந்நோய் பரவாமல் தடுப்பதும், முறையான வழியில் பி.சி.ஜி. தடுப்பு ஊசி போடுவதன் மூலம் சிறு குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் இந்நோய் பீடிக்காமல் தடுப்பதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

தமிழ் நாட்டில் சென்னையை மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட எலும்புருக்கி நோய் விளம்பரப் பிரிவுகள் இரண்டு உள்ளன. பி.சி.ஜி. குழுக்கள் வீடுதோறும் சென்று பணியாற்றுவதில் இப்பிரிவுகள் உதவுகின்றன. அதற்காக அவை முன்னதாகவே விளம்பரமும், பிரச்சாரமும் செய்கின்றன. ''எலும்புருக்கி நோய்'' குறித்து திரைப்படக் காட்சிகளும் நடத்துகின்றன.

**மருத்துவ நிலையங்கள்:—**

| | |
|---|---|
| 1. தொழிலாளர் நலக் காப்புறுதி அரசு மருத்துவ மனைகளின் எண்ணிக்கை (சென்னை, கோயம்புத்தூர், மதுரை). | |
| 2. தொழிலாளர் நலக் காப்புறுதி அரசு மருந்தகங்களின் எண்ணிக்கை. | 94 |
| 3. தொழிலாளர் நலக் காப்புறுதி இயலூர்தி அரசு மருந்தகங்களின் எண்ணிக்கை. | 8 |
| 4. தொழிலதிபர்கள் பயன்பாட்டு மருந்தகங்களின் எண்ணிக்கை. | 3 |
| (i) டால்மியா சிமென்ட் லிமிடெட், டால்மியாபுரம். | |
| (ii) இ. ஐ. டி. பாரி லிமிடெட், இராணிப்பேட்டை. | |
| (iii) ஸ்கட்டர் நினைவு மருத்துவ மனை, இராணிப்பேட்டை. | |

5. பகுதி நேர மருந்தகங்களின் எண்ணிக்கை .. 3

(i) அரசினர் மருத்துவ மனை, அம்பா சமுத்திரம். 1

(ii) கீழ் அணை முகாம் மருந்தகம், பாப நாசம். 1

(iii) அரசினர் மருத்துவ மனை, செங்கோட்டை 1

6. ஆம்புலன்ஸ் வண்டிகளின் எண்ணிக்கை .. 32

7. மத்திய மருத்துவப் பொருட்கள் பண்டக சாலைகளின் எண்ணிக்கை (தொழிலாளர் நல அரசுக் காப்புறுதி) சென்னை, மதுரை, கோயம்புத்தூர். 3

8. அகநிலை நோயாளிகள் சிகிச்சைக்கான அரசினர் மருத்துவ மனைகளின் எண்ணிக்கை. 55

9. அகநிலை நோயாளிகள் சிகிச்சைக்கான தனியார் மருத்துவ மனைகளின் எண்ணிக்கை. 3

10. அகநிலை நோயாளிகள் சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை. ..

| | பொதுப் பிரிவு. | மகப்பேறு பிரிவு. | எலும்புருக்கி நோய் அவசர சிகிச்சைப் பிரிவு. | எலும்புருக்கி நோய் நீங்கி நலம் பேணு மருத்துவ மனை. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. தொழிலாளர் நலக் காப்புறுதி அரசு மருத்துவ மனைகள். | 851 | 200 | 76 | .. | 1,127 |
| 2. தொழிலாளர் நலக் காப்புறுதி அரசு வார்டு இணைப்புகள். | 54 | .. | .. | 78 | 132 |

| (1) | பொதுப் பிரிவு. (2) | மகப்பேறு பிரிவு. (3) | எலும்புருக்கு நோய் அறுவை சிகிச்சைப் பிரிவு. (4) | எலும்புருக்கு நோய் நீங்கு நலம்பேண மருத்துவ மனை. (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| 3. அரசினர் மருத்துவ மனைகள். | 248 | 212 | 51 | 51 | 562 |
| 4. தனியார் மருத்துவ மனைகள். | 4 | .. | .. | 97 | 101 |
| மொத்தம் .. | 1,557 | 412 | 127 | 226 | 1,822 |

குடும்ப நலத் திட்டம் :—இவ்வாண்டில் ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைகள் 2,57,515 பேருக்கும், பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைகள் 31,762 பேருக்கும் செய்யப்பட்டன. குடும்ப நல முனைப்புத் திட்டத்தின் காலத்தின் போது செய்யப்பட்ட ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைகள் 2,42,138 ஆகும்.

1972–73-ம் ஆண்டில் 22,923 பேருக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டன. இந்த ஆண்டில் வழக்கமான கருத்தடைச் சாதனங்களை 1,16,971 பேர் பயன்படுத்தினர்.

மருத்துவக் கல்வி.—1972–73-ம் ஆண்டில் கீழ்க்காணும் நிலையங்கள் மருத்துவக் கல்வி இயக்குநர் நிர்வாகத்தின் கீழ் இருந்தன:—

| | |
|---|---|
| (i) கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் | 22 (12,405) (படுக்கைகள்) |
| (ii) மருத்துவ நிலையங்கள் (படுக்கைகளுடன்). | 7 (1,091) (படுக்கைகள்) |
| (iii) படுக்கை வசதிகளற்ற மருத்துவ நிலையங்கள். | 5 |

(iv) கல்லூரிகள் .. .. .. 8 (1,015) (இடங்கள்)

மருத்துவக் கல்லூரிகள்—

| | முதலாண்டு எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு உள்ள இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. | 170 |
| 2. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை. | 170 |
| 3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை. | 100 |
| 4. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. | 175 |
| 5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். | 175 |
| 6. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர். | 100 |
| 7. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி. | 75 |
| 8. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு. | 50 |
| மொத்தம் .. | 1,015 |

எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு.—ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் கிடைக்கின்ற பயிற்சி வசதிகளைப் பொறுத்து, இம் மாநிலத்தில் அரசினர் மருத்துவ கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவதைச் சீரமைக்கும் நோக்குடன், 1971-ம் கல்வியாண்டிலிருந்து மொத்த இடங்களின் எண்ணிக்கை 1,125-லிருந்து 1,015 ஆகக் குறைக்கப்பட்டது. அதே காரணங்களுக்காக, பி.டி.எஸ். (B.D.S.) பட்டப் படிப்பில்

மொத்த இடங்களின் எண்ணிக்கை 45-லிருந்து 35 ஆகவும், பி. பார்மசி பட்டப் படிப்பில் மொத்த இடங்களின் எண்ணிக்கை 100-லிருந்து 60 ஆகவும் குறைக்கப்பட்டன.

குற்றவியல்—சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியலில் எம்.ஏ., பட்டப்படிப்பு

சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் குற்றவியல்-சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியலில் எம்.ஏ. பட்டப் படிப்பு 1965-ம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது. இப்படிப்பில் ஆண்டொன்றுக்கு 8 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். 1973-ம் ஆண்டிலிருந்து இப்பட்டப் படிப்பு இரண்டாண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மனநோய் மருத்துவ மனை.—இம்மருத்துவ மனையின் படுக்கைகள் எண்ணிக்கை 1,800 ஆகும்.

இம்மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | ஆண்கள். | பெண்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. இந்த ஆண்டு ஒரு நாளில் மருத்துவ மனையில் இருந்த நோயாளிகளின் உயரளவு எண்ணிக்கை. | 1,167 | 609 | 1,776 |
| 2. 1972-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று இருந்தவர்களின் எண்ணிக்கை. | 1,146 | 600 | 1,746 |
| 3. இந்த ஆண்டு சிகிச்சைக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 903 | 417 | 1,320 |
| 4. மொத்தம் .. .. | 2,409 | 1,017 | 3,066 |
| 5. இந்த ஆண்டு மருத்துவ மனையில் சிகிச்சை அளித்து அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை — | | | |
| (a) குணமடைந்தவர்களின் எண்ணிக்கை. | 64 | 7 | 71 |

| | ஆண் கள். | பெண் கள். | மொத் தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (b) ஓரளவு குணமடைந்தவர்களின் எண்ணிக்கை. | 770 | 381 | 1,151 |
| (c) குணமடையாதவர்கள்—ஆனால், அனுப்பப்படக் கூடாது என்று மருத்துவ அதிகாரிகள் அறிவுரை கூறியிருந்தும் அனுப்பப்பட்டவர்கள். | 5 | 5 | 10 |
| (d) வேறு வகையில் அனுப்பப்பட்டவர்கள். | .. | .. | .. |
| (e) இறந்தவர்களின் எண்ணிக்கை. | 50 | 22 | 72 |
| 6. 1973-ம் ஆண்டு மார்ச் 31-ம் நாளன்று எண்ணிக்கை. | 1,160 | 602 | 1,762 |
| 7. 1972–73-ம் ஆண்டில் மருத்துவ மனையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட நோயாளிகளின் வயது விவரங்கள்.— | | | |
| (i) 20 வயதுக்குக் கீழ் | 102 | 81 | 183 |
| (ii) 20 முதல் 40 வயதுக்குள். | 429 | 89 | 518 |
| (iii) 40 முதல் 60 வயதுக்குள். | 136 | 126 | 262 |
| (iv) 60 வயதுக்கு மேல் .. | 236 | 121 | 357 |

நோய்த் தடுப்பு மருந்துகள் தயாரிக்கும் 'இங்' நிறுவனம், கிண்டி :—

' கிங் ' நிறுவனத்தில் கீழ்க்காணும் மருந்து தயாரிப்புத் துறைகளும் மருத்துவ சோதனைத் துறைகளும் அடங்கியுள்ளன;—

பெரியம்மையை குணப்படுத்தும் அம்மைப்பால்.
உயிர் அணு கட்டுப்பாடு.
நச்சு முறிவு.
நோய்க் குறியியல்.
குருதி உட்செலுத்தல்.
நோய் நுண்ம நச்சாய்வு.

இவ்வாண்டு நடத்தப்பெற்ற சோதனைகள், ஆய்வுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | நுண்ணுயிர் ஆய்வு .. .. .. | 1,278 |
| 2. | கடுங்காலராவுக்கான மலப் பரிசோதனை .. | 1,359 |
| 3. | ' பிளேக் ', பூச்சுக்கள் (Plague Smears) .. | 95 |
| 4. | சால்மோநெல்லாவுக்கான (Solmonella) இரத்தப் பரிசோதனை. | 353 |
| 5. | ஷிகெல்லாவுக்கான (Shigella) இரத்தப் பரிசோதனை. | 45 |
| 6. | தொண்டை அழற்சி நோயினுக்கான தொண்டை குச்சிப் பரிசோதனை. | 4 |
| 7. | எலும்புருக்கி நோய் நுண்ணுயிர்ப் பரிசோதனை. | 492 |
| 8. | நச்சு உணவு மாதிரி உணவுப் பொருள் பரிசோதனை. | 63 |
| 9. | டீ.சி, டி.சி., இரத்தப் பரிசோதனை. .. | 1,435 |
| 10. | சிறுநீர்ப் பரிசோதனை. .. .. | 1,830 |
| 11. | வைடால் (Widal) பரிசோதனைக்கான நிணநீர் ஆய்வு. | 667 |
| 12. | ப்ருசெல்லஸ் (Brucellous) இரத்த அணு ஒட்டுத் திரள் பரிசோதனை. | 2 |
| 12. | (a) மீடியா (Media) பரிசோதனை .. | 1,812 |

| | | |
|---|---|---|
| 13. | விந்து பரிசோதனை .. .. .. | 21 |
| 14. | பால்நோய் வி.டி.ஆர்.எல். (V.D.R.L.) இரத்தப் பரிசோதனை. | 10,958 |
| 15. | கான் (Khan) இரத்தப் பரிசோதனை .. | 10,353 |
| 16. | பால் பன்னல் (Paul Bunnel) இரத்தப் பரிசோதனை. | 2 |
| 17. | வாசர்மன் (Wasserman) இரத்தப் பரிசோதனை. | 3,115 |
| 18. | லாஞ்சஸ் (Langes) சி.எஸ்.எப். பரிசோதனை | 112 |
| 19. | வி. டி. ஆர். எல். எப். (V.D.R.L.), சி. எஸ். (C.S.F.) பரிசோதனை. | 107 |
| 20. | ரோஸ் வாலர் (Rose Waller's) பரிசோதனை. | 82 |
| 21. | ஹாம்ஸ் டோலோஜிகல் (Halms Tological) பரிசோதனை. | 3,908 |
| 22. | ஆர்ஹெச் (Rh Test) பரிசோதனை .. | 430 |
| 23. | மாதிரி மருந்துப் பொருட்கள் நோய் நுண்மைத் திர்வு பரிசோதனை. | 2,786 |
| 24. | பைரோஜன் (Pyrogen) பரிசோதனை .. | 675 |
| 25. | நஞ்சியல்பு (Toxicity) பரிசோதனை .. | 3,653 |
| 26. | வேதியியல் முறை பகுப்பாய்வு (Chemical Analysis) | 1,890 |
| 27. | நோய் எதிர்ப்பொருள் தேர்வு (Anti-Biotic Assay). | 3,253 |
| 28. | கருவுறுதலை அறிவதற்கான பரிசோதனை (Male Frog Test). | 3,153 |

# அத்தியாயம் 10

## வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு.

**வேளாண்மைக் கல்வி:—**

வேளாண்மைப் பள்ளிகள்.—இந்த வேளாண்மைப் பள்ளிகள் சிறந்த விவசாயிகளாக விளங்குவதற்கும், மேம்பட்ட விவசாய வழி முறைகளை மேற்கொண்டு விவசாயத்தை ஒரு தொழிலாக மேற்கொள்வதற்கும் வகை செய்யும்பொருட்டு 18 வயது முதல் 30 வயதுடைய விவசாயிகளின் பிள்ளைகளுக்கு வேளாண்மைப் பாடமுறையிலும், செயல் முறையிலும் ஓராண்டுப் பயிற்சி அளித்துவருகின்றன. தமிழ் நாட்டில் தற்போது 13 வேளாண்மைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் (முனைப்புத் திட்டம்), தஞ்சாவூர்.—' மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின்' பயனாக, கீழ்காணும் சாதனைகள் எய்தப்பட்டுள்ளன.—

| | 1972–73-ம் ஆண்டில் எய்திய சாதனை. |
|---|---|
| | இலட்சம் ஏக்கர். |
| திட்டம் நிறைவேற்றப்பட்ட பரப்பளவு .. | 16·77 |
| அதிக விளைச்சல் தரும் பயிர்வகைத் திட்டம் நிறைவேற்றபபட்ட பரப்பளவு (1966–67-ம் ஆண்டிலிருந்து). | 15·36 |
| | டன். |
| விதைகள் .. .. .. | 3,608 |
| பயிர்ப்பூச்சிக் கொல்லிகள் .. .. .. | 13,305 |
| உரங்கள்.— | |
| | டன். |
| அமோனியம் சல்பேட் .. .. | 1,54,316 |

| | டன். |
|---|---|
| சூப்பர் பாஸ்பேட் .. .. .. | 99,202 |
| | இலட்சம் டன். |
| மொத்த உற்பத்தி—அரிசி அளவு ... .. | 14·60 |

மேற்கொண்டும் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் பெரிதும் உள்ளன.

மும்மர வேளாண்மைப் பகுதித் திட்டம்.—இத்திட்டம் மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 169 வட்டாரங்களில் நிறைவேற்றப்படுகிறது. இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் அவர்களது நிலங்களில் பயிரிடப்படும் எல்லா முக்கியப் பயிர்கள் குறித்தும் முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. வேளாண்மை இடுபொருள்கள் வாங்குவதற்குக் கடன் வசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இக்கால அளவில் 605 ஒருங்கிணைந்த செய்முறை விளக்கப் பாத்திகள் அமைப்பதென்றும் இலக்கு எய்தப்பட்டது.

அதிக விளைச்சல் தரும் பயிர் வகைத் திட்டம்.—இத்திட்டத்தின் கீழ், மகத்தான சாதனை கிட்டியது. அதிக விளைச்சல் தரும் நெல் வகைகள் 53·85 இலட்சம் ஏக்கராவில் பயிரிடப்பட்டன. (35·71 இலட்சம் ஏக்கரில் ஐ.ஆர். 8-ம், அதன் துணை வகைகளும், 18·14 இலட்சம் ஏக்கரில் அதிக விளைச்சல் தரும் ஏனைய நெல் வகைகளும் பயிரிடப்பட்டன.) 4·40 இலட்சம் ஏக்கரில் கலப்பினச் சிறு தானியங்கள் பயிரிடப்பட்டன. 6·68 இலட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பு விரைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

விதை உற்பத்தியும் பங்கீடும்.— இத்திட்டத்தின் நிதி, திட்டப் பயன் இலக்குகளும் எய்திய சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | இலக்கு. (டன்.) | சாதனை. (டன்.) |
|---|---|---|
| திட்டப் பயன் இலக்கு— | | |
| நெல் முதல் நிலை .. ... | 2,780 | 3,202 |
| மொத்த நெல் 2-ம் நிலை (துறை, தனியார் வர்த்தகம் உட்பட). | 41,700 | 38,552 |
| நெல் 2-ம் நிலை (துறை மட்டும்) .. | 14,000 | 11,094 |

| | இலக்கு. (டன்.) | சாதனை. (டன்.) |
|---|---|---|
| சிறு தானியங்கள் முதல் நிலை .. | 1,528 | 4,435 |
| சிறு தானியங்கள் 2-ம் நிலை (துறை, தனியார் வர்த்தகம்). | 1,528 | 4,435 |

(ரூபாய் இலட்சத்தில்.)

நிதி இலக்கு—

| | | |
|---|---|---|
| மொத்தம் .. .. .. | 132·12 | 138·02 |
| வரவு .. .. .. | 100·00 | 125·32 |
| நிகர வருவாய் .. .. | 32·12 | 12·70 |

விதை சான்றளிப்புத் திட்டம்.—இந்த அறிக்கைக் கால அளவில் இத்திட்டத்தின் இலக்குகளும் எய்திய சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | இலக்கு. (ஏக்கர்). | சாதனை (ஏக்கர்). |
|---|---|---|
| திட்டப் பயன் இலக்கு— | | |
| நெல் .. .. .. | 6,000 | 6,475 |
| பருத்தி .. .. .. | 3,000 | 917 |
| கலப்பின சிறு தானியங்கள் .. | 3,000 | 1,984 |

(ரூபாய் இலட்சத்தில்.)

நிதி இலக்கு—

| | | |
|---|---|---|
| மொத்தம் .. .. .. .. | 3·99 | 2·61 |
| வரவு .. .. .. .. | 1·20 | 1·18 |
| நிகர வருவாய் .. .. .. | 2·79 | 1·43 |

வேளாண்மைத் தகவல்.—இந்த அறிக்கையாண்டில் கீழ்க் காணும் தலைப்புகளில் மூன்று விளக்கத் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன :—

(1) உரங்கள்.

(2) பயிர்ப் பாதுகாப்பு.

(3) அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகள்.

இக்கால அளவில், அவசர அடிப்படையிலான சம்பா பயிர்த் திட்டம் செயல்படுத்தியதிலிருந்து சிறு வெளியீடுகளும், சுவரொட்டிகளும் அச்சிடப்பட்டன.—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1. சிறு வெளியீடுகள், துண்டு வெளியீடுகள், பல்வேறு பயிர்கள் குறித்து 22 இனங்கள் (ஒவ்வொன்றும் 5,000 படிகள்). | 1,10,000 |
| 2. மடிப்பு வெளியீடுகள் 4 இனங்கள். .. | 2,60,000 |
| 3. சாலையோரச் சுவரொட்டிகள் 8 இனங்கள். | 1,32,000 |
| 4. சிறுதானியங்கள் குறித்த பொருட்காட்சி சுவரொட்டிகள். | 3,000 |
| 5. நெல், சிறுதானியங்கள் குறித்த சுவரொட்டிகள். | 6,000 |

வேளாண்மைப் பொறியியல்.—இவ்வாண்டில் இத்துறை கீழ்க்காணும் சிறு பாசனத் திட்டங்களை மேற்கொண்டது.—

தனியார் குழாய்க் கிணறுத் திட்டம் ;

துளைக் கிணறுகள் திட்டம் ;

கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம் ;

வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம் ;

சமுதாயக் கிணறுகள் திட்டம்.

கீழ்க் காணும் கூடுதல் திட்டங்களும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன.—

(1) டிராக்டர்களை வாடகைக்குவிடும் திட்டத்தின் கீழ் நில மேம்பாடு.

(2) மண்வளப் பாதுகாப்பு.

பயிர் மேம்பாட்டுத் திட்டம்.—உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் இத்திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன :—

1. எண்ணெய் வித்துக்கள் பெருக்கத் திட்டம்;
2. வேர்க்கடலைப் பயிர் முனைப்புத் திட்டம்.
3. வேர்க்கடலை ஏற்றுமதி நோக்குத் திட்டம்.
4. பயறுவகை வளர்ச்சித் திட்டம்.
5. தென்னை வளர்ச்சித் திட்டம்.
6. கரும்பு வளர்ச்சித் திட்டம்.
7. பழ உற்பத்தி வளர்ச்சித் திட்டம்.
8. உருளைக் கிழங்கு வளர்ச்சித் திட்டம்.
9. மஞ்சள் வளர்ச்சித் திட்டம்.
10. புகையிலை வளர்ச்சித் திட்டம்.
11. பருத்தி வளர்ச்சித் திட்டம்.
12. வாழை முனைப்புத் திட்டம்.
13. பாக்கு வளர்ச்சித் திட்டம்.
14. கொக்கோ வளர்ச்சித் திட்டம்.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்.—இத்திட்டத்தின் இலக்கும், எய்திய சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டப்பயன் இலக்கும், சாதனையும் (1) | இலக்கு. (2) | சாதனை. (3) |
|---|---|---|
| மருந்து பயன்படுத்த வேண்டிய நிலப் பரப்பு (உணவுப் பயிர்கள்). | 81·00 | 87·25 |
| பரப்பு (உணவுப் பயிர்கள்). | இலட்சம் ஏக்கர். | இலட்சம் ஏக்கர். |
| தெளிப்புக் கருவிகள் வழங்குதல், எண்ணிக்கை. | 5,000 | 5,817 |
| தூவு கருவிகள் வழங்குதல் எண்ணிக்கை. | 400 | 534 |

1972-73 ஆம் ஆண்டில் பயன்படுத்திய இரசாயன மருந்துகளின் மொத்த அளவு.—

| | | |
|---|---|---|
| தூவு இரசாயன மருந்துகள் | .. | 21,347 டன். |
| திரவ இரசாயன மருந்துகள் | .. | 10 81,014 லிட்டர். |

நிலத்திலிருந்தவாறே பெரும் பரப்பளவில் மருந்து தெளிக்கும் திட்டத்தின்கீழ் மருந்து தெளித்துள்ள பரப்பு:—

| | | |
|---|---|---|
| 1. வேர்க்கடலை | 0.223 இலட்சம் ஏக்கர். | |
| 2. பயறு வகைகள் | 0.501 | ,, |

எருக்களும், இரசாயன உரகங்ளும். —இக்கால அளவில், 76·63 இலட்சம் டன் அளவிற்கு உள்ளூர் எரு வளம் மேம்படுத்தப் பட்டது. மொத்தம் 1,05,334 நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகள் வழங்கப்பட்டன. 1,773 டன் அளவிற்கு பசுந்தழை உர விதைகள் வழங்கப்பட்டன. 2·84 இலட்சம் டன் மலக் கலவை எரு உற்பத்தி செய்யப்பட்டது.

அரசு விதைப் பண்ணைகள். —இக்கால அளவில் அரசு விதைப் பண்ணைகள் ரூ. 13·03 இலட்சம் நிகர ஆதாயம் அடைந்தன. அரசு விதைப் பண்ணைகள் 55-ல் 9 பண்ணைகள் விரயத்தில் செயல்பட்டன.

1972-73-ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் கீழ்க் காணும் அளவில் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன :—

| | டன். |
|---|---|
| நெல் .. .. .. .. .. | 3,723 |
| சிறுதானியங்கள் (சாதாரணமானவை) .. | 64·6 |
| கலப்பினச் சிறுதானியங்கள் .. .. | 121·8 |
| எண்ணெய் வித்துக்கள் .. .. .. | 87·0 |
| பயறு வகைகள் .. .. .. | 33·8 |

உணவு உற்பத்தி. —வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் கருத்துடன் வகுக்கப்பட்ட கீழ்க்காணும் திட்டங்களை வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) செயற்படுத்துகின்றது :—

1. புதிய கிணறுகள் தோண்டுவதற்கான மானிய உதவித் திட்டம்.

2. இரசாயன உரங்களைப் பங்கிடுவதற்கான திட்டம்.

3. உரமிடுதல் முனைப்புத் திட்டம்.

1. புதிய கிணறுகள் தோண்டுவதற்கான மானிய உதவித் திட்டம். — இவ்வாண்டில் ரூ. 6 இலட்சத்தில் ரூ. 5'71 இலட்சம் வழங்கப்பட்டது. இவ்வாண்டில் 994 கிணறுகள் தோண்டி முடிக் கப்பட்டன. இவற்றினுதவியால் 994 ஏக்கர் பரப்பிற்குப் பாசன வசதி வாய்ப்புக் கிடைத்துள்ளது.

2. இரசாயன உரங்களைப் பங்கிடுவதற்கான திட்டம். — இரசாயன உரத் தொகுப்பிலிருந்தும், தொகுப்பிற்கு வெளியி லிருந்தும் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட நைட்ரஜன் இரசா யன உரங்களின் அளவு 1·79 இலட்சம் நைட்ரஜன் டன்கள் ஆகும்.

3. உரமிடுதல் முனைப்புத் திட்டம்.— உணவுப் பயிர்களைப் பொறுத்த வரையில், இத்திட்டம், இந்த ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகள்

திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தொகை உட்பட, உரமிடுதல் முனைப்புத் திட்டத்தின் கீழ் கடனாக ரூ. 236·05 இலட்சம் வழங்கப்பட்டது.

கால்நடை வளர்ப்பு.—கால்நடை வளர்ப்புத் துறை வட்டார அடிப்படையில் தொடர்ந்து செயல்பட்டது. இத்துறையின் நடவடிக்கைகள் அனைத்தும் கால் நடை வளர்ப்புத் துறை இயக்குநரின் ஆலோசனையின்கீழ் கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர் அலுவலக நிலையில் ஒருங்கிணைக்கப்பட்டன. இம்மாநிலத்தில், சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, ஆகிய ஆறு வட்டாரங்கள் வட்டாரத் துணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின்கீழ் தொடர்ந்து செயல்பட்டன.

1972-73ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில் ஆறு கால் நடை இனப் பண்ணைகள், இரண்டு செம்மறியாடு வளர்ப்புப் பண்ணைகள் ஒரு கோழி வளர்ப்புப் பண்ணை, பால் மரத்த பசு பராமரிப்புப் பண்ணை ஆகியவை செயல்பட்டு வந்தன.

இம்மாநிலத்தில் 532 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. மருத்துவ ஆய்வுக்கான 1,02,195 பொருள்கள் (Clinical materials) இம்மருத்துவ நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டன. மொத்தம் 45,32,022 நேர்வுகளில் கால் நடைகளுக்கு கால் நடை மருத்துவ நிலையங்களின் பணியாளர்கள் மருத்துவ சிகிச்சை அளித்தனர். 47,87,977 கால்நடைகளுக்கு அம்மைப்பால் வைக்கப்பட்டது. 5,13,827 கால்நடைகளுக்குக் காயடிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவக் கல்வி-ஆராய்ச்சி இயக்குநர் அலுவலகம்.

இத்துறையமைப்பின்கண் அடங்கியுள்ள பிரிவுகள் வருமாறு :

1. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

2. கோழியின ஆராய்ச்சிப் பிரிவு, தேனாம்பேட்டை, சென்னை-35.

3. நீலகிரி மாவட்டம், சந்தியாநல்லாவிலுள்ள செம்மறியாடு இன வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம்.

4. செம்மறியாட்டுப் பண்ணை, காட்டுப்பாக்கம், செங்கற்பட்டு மாவட்டம்.

5. உழவர் பயிற்சி நிலையம், ஓசூர், தருமபுரி மாவட்டம்.

6. மேச்சேரி மண்டியா ஆட்டுக் குட்டிகள் திட்டம், கொளத்தூர், சேலம் மாவட்டம்.

ஒருங்கிணைந்த பி. வி. எஸ்சி. பட்டப் படிப்பு.—பி.வி.எஸ்சி. பட்டப்படிப்பில் சேருவதற்குரிய மாணவர்களை எப்போதும் போலவே அரசு அமைத்துள்ள குழு தேர்ந்தெடுத்தது. இப் பட்டப்படிப்பில் சேர்வதற்கு விண்ணப்பித்திருந்த 885 பேர்களில்,

135 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு, இவ்வாறு படித்துக் கொண்டிருந்தவர்கள் எண்ணிக்கை 783 ஆகும். இவற்றில் 13 மகளிர்களும் 22 வெளிநாட்டு மாணவர்களும் அடங்குவர்.

எம். வி. எஸ்சி. பட்ட மேற்படிப்பு.—இப்படிப்பிற்காகவுள்ள 45 இடங்களுக்கு 43 பேர் விண்ணப்பித்திருந்தனர். பல்வேறு பாடங்களில் எம்.வி. எஸ்சி. பட்ட மேற்படிப்பில் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கோழியின வளர்ப்பு அறிவியலில் எம். வி. எஸ்சி. பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டது. இப்பட்ட மேற்படிப்பில் மூன்று மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பாற்பண்ணை தொழிலும் பால் வழங்கலும்.—தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்ற நிறுவனம் 1-7-1972 ஆம் நாளில் அமைக்கப்பட்டது. சென்னை பாற்பண்ணை பால் வழங்கு திட்டத்தின் வணிக நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ்நாடு பால் வள நிறுவனம் எடுத்துக் கொண்டது. துறையின் ஒரே ஒரு பாற்பண்ணையான மதுரை பாற்பண்ணை 1972-73-ல் துறையின் நிர்வாகத்தின்கீழ் இருந்தது. இந்தப் பாற்பண்ணையின் துணைப்பிரிவுகளாக பல்வேறு நிலையங்களில் பாலைச் சேகரிக்கும் பிரிவுகள் இருந்தன. அங்கு பால் சேகரிக்கப்பட்டுக் குளிர வைத்துத் தலைமைப் பாற்பண்ணைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முக்கியமாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து இவ்வாறு பால் சேகரிக்கப்பட்டது.

1972-73-ல் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு, வழங்கப்பட்ட பாலின் அளவு, செயல்பட்ட பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கீழ்க்காணும் விவர அட்டவணை காட்டுகிறது.—

| ஆண்டு. | நாளொன்றுக்கு சேகரிக்கப்பட்ட சராசரி பாலின் அளவு லிட்டரில். | நாளொன்றுக்கு வழங்கப்பட்ட சராசரி பாலின் அளவு லிட்டரில். | செயல் பட்ட நிலையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1972-73 .. | 45,158 | 82,415 | 267 |
| மதுரை பால் திட்டம்— | | | |
| 1972-73 .. | 19,756 | 23,046 | 79 |

சென்னை மாநகரில் 1—4—1972ஆம் நாளிலிருந்து 31—3—1973-ஆம் நாள் வரையிலான கால அளவில் விற்கப்பட்ட பல்வேறு வகைப்பாலின் விற்பனை விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| பாலின் வகை | பொதுமக்களுக்கு | விலை வீதங்கள். மருத்துவமனை கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைகள் வணிக நிறுவனங்கள் அல்லாத நிறுவனங்கள். | உணவகங்கள் வணிக நிலையங்கள். | தனிப்பட்ட முறையில் பெருமளவில் கேட்கப் படும் பால். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | 5) |
| 1. ஆடை எடுக்கப்பட்ட பால். | 1·30 | 1·40 | 1·40 | 2·00 |
| 2. கொழுப்பு நீக்கப்பட்ட பால். | 1·00 | 1·12 | 1·12 | .... |
| 3. இருமுறை கொழுப்பு நீக்கப்பட்ட பால். | 0·86 | .... | .... | .... |

மதுரை பால் திட்டம் :—

இவ்வாண்டில், மதுரை பால் திட்டத்தில் மொத்தம் 72,10,793·7 லிட்டர் பால் சேகரிக்கப்பட்டது. வழங்கப்பட்ட பாலின் மொத்த அளவு 95,56,685·5 லிட்டர் ஆகும். இதில், சென்னை, மத்திய பாற் பண்ணைக்கு அனுப்பிய 11,44,000 லிட்டர் பாலும் அடங்கும். மதுரை பால் திட்டத்தின் ஒரு நாளைய சராசரி பால் உற்பத்தி 28,311·5 லிட்டர் ஆகும்.

இவ்வாண்டில், மதுரை மாநகர் மக்களுக்கு தரப்படுத்தப்பட்ட பால் 49,75,779·5 லிட்டர் வழங்கப்பட்டது. 35,000 பேர் பால் வழங்கப் பெற்றனர். விற்பனை நிலையங்கள் பொதுமக்களுக்குப் பணி புரிந்தன. ஐந்து முனைகளிலிருந்து மாநகரின் பல்வேறு பகுதிகளுக்குப் பால் அனுப்பப்பட்டது.

காய்ச்சிய பாலாக விற்பனை செய்யவும் ரோஸ்மில்க் தயார் செய்யவும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் தயாரிக்கப்பட்டது. இரு முறை கொழுப்பு நீக்கப்பட்ட பால் குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தினருக்கும் ஏழைகளுக்கும் கீழ்க்கண்ட விலை வீதத்தில் வழங்கப்பட்டது :—

இருமுறை கொழுப்பு நீக்கப்பட்ட பால் அட்டை வைத்திருப்போருக்கு லிட்டர் ஒன்று ரூ. 0 64.

இரு முறை கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொதுமக்களுக்கு லிட்டர் ஒன்று ரூ. 0·70.

இரு முறை கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொதுமக்களுக்கு விற்பனை நிலையங்கள் மூலமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 10,500 குடும்பங்கள் பயனடைந்தன.

கூட்டுறவு :

கூட்டுறவின் கீழ் மாநிலத் திட்டத்திற்கு 1972-73-ல் முதலில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் 108·35 இலட்சம் ரூபாய்; ஆனால் மொத்தம் செலவான தொகை 93·81 இலட்சம் ரூபாய் ஆகும். இக்குறைவுக்குக் காரணம் வீடு அடைமானச் சங்கங்களின் நிர்வாகத்தை தனியாகப் பிரித்ததேயாகும். இதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் முதலில் 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

கூட்டுறவுக் கடன் வழங்குதல்.—இத்திட்டத்தின்கீழ் 19.57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

கூட்டுறவு அங்காடி.— அங்காடிச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட நிர்வாகப் பணியாளர்கள் குறித்த செலவை ஈடுசெட்ட அவற்றிற்கு உதவித் தொகையாக 0.98 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் மொத்தம் 10.66 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு பதப்படுத்துதல்.—இத்திட்டத்தின்கீழ் 29.19 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

பயன்துய்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்.— இத்திட்டத்தின்கீழ் 18.80 இலட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது.

## அத்தியாயம் 11.

### கல்வி, நூலகம், அரும்பொருட் காட்சியகம், ஆவணக்காப்பகம்.

**பள்ளிக் கல்வி.—**

1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாட்டில் 32,248 தொடக்கப் பள்ளிகள் இருந்தன. இவற்றில் 6 முதல் 11 வயதுள்ள 58.95 இலட்சம் மாணவர்கள் கல்வி பயின்றனர். 11 முதல் 14 வயதுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 26.53 இலட்சமாகும். 1,70,288 ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரிந்தனர். அவர்களில் 67,075 பேர் மகளிராவர்.

**உயர்நிலைப் பள்ளிகள் .—**

1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி, 2,763 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| பள்ளிகளின் விவரங்கள். | மத்திய அரசு பள்ளிகள், | அரசினர் 'A' பிரிவு பள்ளிகள். | அரசினர் 'B' பிரிவு (முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகள்) பள்ளிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **உயர்நிலைப் பள்ளிகள்.—** | | | |
| மாணவர்கள் .. | .. | 187 | 1,364 |
| மாணவிகள் .. | .. | 55 | 109 |
| அடிப்படைக் கல்வி பள்ளிகளுக்கு மேற்பட்ட கல்விப் பள்ளிகள் .. | .. | .. | .. |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்— | | | |
| மாணவர்கள் .. | .. | 4 | .. |
| மாணவிகள் ... | .. | 1 | .. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| மெட்ரிகுலேஷன் பள்ளிகள்— | .. | .. | .. |
| மத்திய அரசுப் பள்ளிகள் | 9 | .. | .. |
| இந்தியப் பள்ளிச் சான்றிதழ் | .. | . | .. |
| மொத்தம் | 9 | 247 | 1,473 |

| | நகராட்சிப்பள்ளிகள் | அரசு மானியம் பெருதப் பள்ளிகள். | அரசு மானியம் பெறும் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (5) | (6) | (7) | (8) |
| உயர்நிலைப் பள்ளிகள் — | | | | |
| மாணவர்கள் .. | 88 | 592 | 2 | 2233 |
| மாணவிகள் .. | 38 | 228 | .. | 430 |
| அடிப்படைக் கல்வி பள்ளிகளுக்கு மேற்பட்ட கல்விப் பள்ளிகள் .. | .. | 3 | .. | 3 |
| ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் — | | | | |
| மாணவர்கள் .. | .. | 15 | 1 | 20 |
| மாணவிகள் .. | .. | 18 | 1 | 20 |
| மெட்ரிகுலேஷன் பள்ளிகள். | | 24 | 24 | .. |
| மத்திய அரசுப் பள்ளிகள் .. | .. | .. | 14 | 23 |
| இந்தியப் பள்ளிச் சான்றிதழ் .. | .. | .. | 10 | 10 |
| மொத்தம் | 126 | 856 | 52 | 2,763 |

மேற்சொன்ன பள்ளிகளில் 15.8 இலட்சம் மாணவர்கள் பயின்றார்கள். அவற்றில் 63,457 ஆசிரியர்கள்பணியாற்றினர். 40 ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் 27,319 மாணவர்கள் பயின்றனர். இப்பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருந்தது. ஆங்கிலோ-இந்திய சமூகத்தைச் சேர்ந்தோரின் குழந்தைகளும் ஏனையோரின் குழந்தைகளும் இவற்றில் பயில்கின்றனர். இதோடு கீழ்த்திசை மொழிப் பாடமுறைப் பள்ளிகள் 18 உள்ளன. இவற்றில் இந்திய மொழிகளைக் கற்பதற்கு முக்கியத்துவம் செலுத்தப்படுக்கிறது. சென்னை, மதுரை பல்கலைக்கழகங்களோடு இணைந்த 24 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உள்ளன. புதுடெல்லி, கல்வி அமைச்சகத்தின் மத்திய பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் நிறுவப்பட்ட மத்தியப் பள்ளிகள் 23-ம் அடிப்படைக் கல்விப் பள்ளிகளுக்கு மேற்பட்ட கல்விப் பள்ளிகள் 3-ம் சான்றிதழ் கழகத்துடன் இணைந்த பள்ளிகள் 10-ம் உள்ளன.

கல்லூரிக் கல்வி.—தமிழ்நாட்டில் 3 பல்கலைக் கழகங்கள் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றும் உள்ளது. இம் மாநிலத்தில் 172 கலைக் கல்லூரிகள் உள்ளன.

கல்லூரிப் புகுமுக வகுப்புக்கு அனுமதிக்கான நெருக்கடி, குறிப்பாக இம்மாநிலத்தில் மக்கள்தொகை நெருக்கமாக உள்ள நகர்ப் பகுதிகளில் 1972—73 ஆம் ஆண்டும் நீடித்தது. கல்லூரிப் புகுமுக வகுப்பில் சேருவதற்காக அதிக அளவில் வரும் மாணவர்களை சேர்த்துக் கொள்ளுவதற்காக, இம்மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள், தேவை ஏற்படும்போது கிடைக்கும் இடவசதியைப் பொறுத்து கூடுதலாகப் பிரிவுகளைத் தொடங்க அல்லது இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு தனியார் ஆகிய இவ்விரு வகைகல்லூரிகளுக்கும் அனுமதி வழங்கின. புதிதாக எட்டு கல்லூரிகள்தொடங்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள்மாணவர்களுக்குப்பெரிதும் உதவின. இம் மாநிலத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் இருக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்பிற்கான மொத்த இருக்கைகள் 87,110. ஆனால் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 78,576, 1972-73-ல் நிரப்பப்படாமல் இருந்த இருக்கைகளின் எண்ணிக்கை 8,534 ஆகும்.

இம் மாநிலத்திலுள்ள பயிற்சிக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை (அரசுக் கல்லூரிகள் 7, அரசு மானியம் பெறும் கல்லூரிகள் 16) தொடர்ந்து 23 ஆக இருந்து வந்தது.

இவ்வாண்டில் ஒன்பது கல்லூரிகளில் மாலைநேர படிப்பு தொடங்கப் பட்டது.

சட்டக் கல்வி.—சட்டக்கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கோடு 1953 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சட்டக்கல்வித்

துறை அந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு இவ்வாண்டும் வெற்றிநடை போட்டது.

முதலாண்டில் எட்டு பிரிவுகளும், இரண்டாமாண்டில் எட்டு பிரிவுகளும், பி. எல் படிப்பில் ஆறு பிரிவுகளும் இருந்தன. இவ்வாண்டில் 706 மாணவர்கள் முதலாண்டிலும் 653 மாணவர்கள் இரண்டாமாண்டிலும்446 மாணவர்கள் மூன்றாமாண்டிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் I பி ஜி எல். II பி ஜி எல். பி. எல்., ஆகிய படிப்பிற்கு மாலைநேரத்திலும் இக்கல்லூரியில் தொடர்ந்து கல்வி அளிக்கப்பட்டு வந்தது. மேற்சொன்ன I பி. ஜி. எல். வகுப்புக்கு 250 மாணவர்களும், II பி. ஜி. எல். வகுப்புக்கு 248 மாணவர்களும் பி. எல். வகுப்புக்கு 124 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எட்டு பிரிவுகள் இருந்தன. முதலாண்டில் மூன்று பிரிவுகள் இரண்டாமாண்டில் மூன்று பிரிவுகள் இறுதியாண்டில் இரு பிரிவுகள் இருந்தன. எம். எல் . வகுப்பில் 65 மாணவர்கள் பயின்றனர்.

தொழில் நுட்பக் கல்வி, தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்கள் உட்பட 12 பொறியியல் கல்லூரிகள் 35 பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. இந்த 35 பல தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் 3 பள்ளிகள் மகளிருக்காகவும், 7 பள்ளிகள் தனிப் பள்ளிகளாகவும், 14 தொழிற் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளாகவும் இருந்தன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கல்வி நிலையங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி புதிதாகக் கொண்டுவரப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | செய்முறை மின்னணுவியல் (பட்ட மேற்படிப்பு.) | பொறியியல் கல்லூரி, கிண்டி. |
| 2 | செய்முறை கணிதம் (பட்டமேற்படிப்பு) | ,, ,, |
| 3 | பயானமிக்ஸ் (Bionomics) (விருப்பப்பாடம்). | ,, ,, |
| 4 | செயற்கை உறுப்புக்கள் தயாரித்தல்-பொருத்துதல் இயல் (Prosthesis). | மத்திய பல்தொழில் பயிற்சிப் பள்ளி, சென்னை. |
| 5 | கட்டுமான பொறியியல் (பகுதிநேர தகுதிப் பட்டயம்). | அரசினர் பல்தொழில் பயிற்சிப் பள்ளி, வேலூர். |
| 6 | வணிக நடவடிக்கை (தகுதிப் பட்டயம்). | ராமசாமி ராஜா பல்தொழில் பயிற்சிப் பள்ளி ராஜபாளையம். |

அரசுத் தேர்வுகள்.—

அரசுத் தேர்வுகள்-1972 ஆம் ஆண்டில், எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்களும் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலும் நடைபெற்றது. தேர்வு நடத்தப்பட்ட இடங்களின் எண்ணிக்கை, தேர்வுக்காலப் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை, தேர்வில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | மார்ச் 1972 | அக்டோபர் 1972. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | தேர்வு நடத்தப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. | 1,103 | 167 |
| 2 | தேர்வு எழுதப் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. | 208,463 | 39,538 |
| 3 | தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை. | 201,950 | 37,570 |
| 4 | பல்கலைக் கழகங்களில் சேர்ந்து படிக்கத் தகுதி வாய்ந்த பாடங்கள் எடுத்துப் படித்து தேர்வு எழுத வந்த மாணவர்களின் எண்ணிக்கை. | 197,767 | 31,631 |
| 5 | வெற்றி அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை. | 119,122 | 6,726 |

கன்னிமாரா பொது நூலகம் :—கன்னிமரா நூலகத்தில் ஒரு நேரத்தில் 250 பேர் படிக்க இடவசதியுள்ளது. தற்போது ஓராண்டில் சுமார் 12,000 புத்தகங்கள் 6,000 சஞ்சிகைகள் 280 செய்தித் தாள்கள் ஆகியன இந்நூலகத்திற்கு வருகின்றன.

இருப்பு, உறுப்பினர்களின் எண்ணிக்கை முதலியன குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1 | 31—3—73ஆம் நாள் நிலவரப்படி இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 8,442 |
| 2 | இவ்வாண்டில் ஒருதிங்களில் படிப்பதற்காக வந்தோரின் சராசரி எண்ணிக்கை. | 11,604 |
| 3 | 31—3—73ஆம் நாள் நிலவரப்படி இருப்பு | 244,383 |
| 4 | ஒரு திங்களுக்குக் கொடுக்கப்பட்ட சராசரி புத்தகங்களின் எண்ணிக்கை. | 9,811 |
| 5 | குறிப்பிற்காகப் பார்க்கப்பட்ட புத்தகங்களின் சராசரி எண்ணிக்கை. | 35,146 |

பொது நூலகப் பணி.—தமிழ்நாடு 1948ஆம் ஆண்டு பொது நூலகங்கள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள உள்ளூர் நூலக அதிகாரக் குழுக்கள் அனைத்தின் பணியை மேற்பார்வையிட்டு நிர்வகிக்கப் பொது நூலகங்கள் இயக்குனர் பொறுப்பானவராவார்.

மாவட்டத் தலைமை யிடங்களில் மாவட்ட மைய நூலகத்தையும், 5,000 மக்கள் தொகையைக் கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் அல்லது ஒவ்வொரு நகருக்கும் கிளை நூலகத்தையும் 1,000 முதல் 5,000 வரையிலான மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் அல்லது ஒவ்வொரு கிராமத்திற்கும் அல்லது 1,000-க்குக் குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ள பகுதியான தொடர்ந்தாற்போலுள்ள மூன்று சிற்றூர்கள் சேர்ந்த ஒவ்வொரு பகுதிக்கும் புத்தகம் வழங்கும் நிலையத்தையும் ஏற்படுத்தியதன்மூலம் மக்களுக்கு இலவசமாக நூலகப் பணி புரிய இயன்றது.

இம்மாநிலத்திலுள்ள நூலகங்களின் எண்ணிக்கை வருமாறு:—

நூலகங்களின் எண்ணிக்கை—

| | | |
|---|---|---|
| மாநில—மத்திய நூலகம் | கன்னிமாரா பொது நூலகம். | |
| உள்ளூர் நூலக அதிகாரக் குழுவின் கீழுள்ள நூலகங்கள் | மாவட்ட மத்திய நூலகங்கள். | 13 |
| | கிளை நூலகங்கள் | 1,457 |
| | நூல் வழங்குநிலையங்கள். | 1,882 |

அரசு அரும் பொருட் காட்சியகம்— அரசினர் அரும் பொருட் காட்சியகம், சென்னை.—சிவபுரம் கோயிலிலிருந்து திருடப்பட்ட அசல் வெண்கலச்சிலை தொடர்பான வழக்குப் புலன் விசாரணைக்கு வல்லுநர்களின் கருத்தை காவல்துறைக்கு அளிக்கும் நோக்குடன் அரும் பொருட்காட்சியாக இயக்குனர் அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர்களின் சிறப்புக் கூட்டத்தை 26—6—72ஆம் நாளிலிருந்து 29—6—72ஆம் நாள்வரை மாநிலக் காவல்துறைத் தலைவர் அலுவலகத்தில் கூட்டினர். சிவபுரம் கோயிலிலிருந்து வரப்பெற்ற வெண்கலச் சிலைகளை பரிசீலிப்பதே இக் கூட்டத்தின் நோக்கமாகும்.

சென்னையிலுள்ள அரசினர் அரும்பொருட்காட்சியகத்தில் ''மனிதனைப் பற்றிய ஆவணங்கள்'' சிறப்புப் பொருட்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பொருட்காட்சி பொது மக்கள் பார்வைக்காக 30—12—1972லிருந்து 30—4—1973 ஆம் நாள் வரை நடத்தப்பட்டது. விலங்கியல் பிரிவால் ''கூவம் முதலை'' சிறப்புப் பொருட்காட்சி ஒன்று 1972 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து 22—8—1972ஆம் நாள் வரை தொடர்ந்து நடத்தப்பட்டது.

தேசியக்கலைக்கூடம்.—தேசியக் கலைக்கூடத்தின் புல்தரையில் காட்சிக்காக வைக்ககப்பட்டிருந்த இரு நவீன சிற்பங்களைக் கழுவி அவற்றிலிருந்து அழுக்ககற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. பின்பக்க அறையிலுள்ள காட்சிப் பொருட்களைக் காண பீடங்கள் கட்டப்பட்டன. இராமர், நடராஜர் வெண்கலச் சிலைகளின் தொகுதிகளுக்குப் பின்னணித் துணி அலங்காரம் செய்யப்பட்டது. கலைவடிவில் கிருஷ்ணன் என்னும் பணி மேற்சொன்ன புதுடில்லி, தேசியக் கலைக்கூடத்தைச் சேர்ந்த துணைப்பாதுசாப்பாளர் செல்வி ஆர். வனஜாவுக்கும், புதுடில்லி தேசியக் கலைக்கூடத்தைச் சேர்ந்த உதவி இயக்குநர் டாக்டர் பி. பானர்ஜிக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.—இவ்வாண்டில் தகவல்கேட்டும், ஆவணங்கள் கேட்டும் வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 38066-க்கும் அதிகமாகும் இவற்றில் 883 விண்ணப்பங்கள் தொடர்பாகத் தேடவேண்டியிருந்தது. தமிழ்நாடு அரசுக்கும் ஆந்திர அரசுக்கும் 37,460-க்கும் அதிகமான ஆவணங்கள் கொடுக்கப்பட்டன. இவ்வாண்டில் ஆவணக்காப்பகத்தில் திருப்பிச் சேர்க்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 50,046 ஆகும்.

ஆவணங்களை அவ்வப்போது துடைத்தல் தூசுகளகற்றுதல் பாரா-டை-கலர் பென்சின் (Para-di-colour, benzene) கொண்டு புகையூட்டுதல் முதலிய பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. தேவைப்படுமிடங்களிலெல்லாம் ஆவணங்கள் கட்டி வைக்கப்பட்டிருக்கும் பழுதடைந்த மரப் பலகைகளை நீக்கிவிட்டு புதிய மரப் பலகைகள் வைத்துக் கட்டப்பட்டன. ஆவணங்கள் முறையாகக் கட்டப்பட்டு பேணிவரப்பட்டன. ஆவணங்களைச் செப்பம் சரிசெய்யும் முன்னர் அமிலமூட்டும் முறையும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டது. 2,41,410க்கும் அதிகமான பல்வேறு அளவுள்ள ஆவணங்களின் தாள்கள் இவ்வாறு செப்பம் செய்யப்பட்டன. சுமார் 698 புத்தகங்கள், பதிவேடுகள் தைக்கப்பட்டன டைண்டு செய்யப்பட்டன. இதோடு 8,157 பலவகைப் பணிகளும் கவனிக்கப்பட்டன.

தொல்பொருளாய்வு.—தொல்பெருளாய்வுத்துறை கீழ்க்காணும் பணிகளில் ஈடுபட்டுள்ளது — (1) தமிழ்நாட்டில் நினைவுச்சின்னங் களைப்பாதுகாத்தல். (2) குறிப்பிட்டகாலத்திற்கொருமுறை கல்வெட்டு ஆராய்ச்சி நடத்துவதன் மூலம் அவற்றை ஒருங்கு திரட்டி தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகள் குறித்து நூல் வெளியிடுதல். (3) புத்தகங்கள், ஓரினப் பொருள் பற்றிய தனி நூல் வெளியிடுதல். (4) நூலகம். (5) பழம் புகழ் வாய்ந்த இடங்களை அகழ்ந்து ஆய்வு செய்தல். (6) நினைவுச் சின்னங்களைப் புகைப்படமெடுத்து வெளியிடுதல்.

பாதுகாக்கப்படுவதற்காக 13 நினைவுச் சின்னங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் கோபுர பட்டி, பரங்கியூர், விளக்காணம், பூண்டி, எறும்பூர், அரிட்டாப்பட்டி பாகூர் சிவன் கோயில், மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மஹால், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மனோரா, கங்கர் புளியங்குளம், ஓவாமலை, ஆனைமலை ஆகிய இடங்களிலுள்ள பல்வேறு ப்ராஹ்மி (Brahmi) கல்வெட்டுக்கள், சாத்தூரிலுள்ள வீரக் கல்வெட்டுக்கள், ஆனைமலையிலுள்ள ஜைன தீர்த்தங்கரர் சிலைகள் ஆகியவை அடங்கும். சிற்பங்கள் கல்வெட்டுக்கள், கலைப் பொருட்கள் பாதுகாக்கப்படுமாறு கவனம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

# அத்தியாயம் 12.

## பாசனம்—மின்சாரம்.

பாசனம்.—இந்த ஆண்டில் இம்மாநிலத்தில் 7—7—1972 ஆம் நாளிலிருந்து தொடங்கி 25—6—1973 ஆம் நாள் வரை பல்வேறு நாட்களில் பாசனத்திற்காகப் பல்வேறு நீர்த்தேக்கங்கள் திறக்கப்பட்டன.

கீழ்க்காணும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேறி உள்ளன:—

1. சிற்றாறு—பட்டணங்கால் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 733 இலட்சம்).

2. இராமா நதித் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 95.70 இலட்சம்).

3. கடானா நீர்த்தேக்கத் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 158 இலட்சம்).

4. கருப்பா நதித்திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 154 இலட்சம்).

5. பொன்னணியாறு திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 46.14 இலட்சம்).

6. சின்னாறு நீர்த் தேக்கத் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 118.25 இலட்சம்).

7. நந்தன் கால்வாயைப் புதுப்பித்தல் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 99 இலட்சம்).

8. பிளவுக்கல் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 83.66 இலட்சம்).

9. தண்டரை அணைக்கட்டுத் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 51.81 இலட்சம்).

10. மருதா நதித் திட்டம் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 2.62 இலட்சம்).

11. வைகைக் கால்வாயைக் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல் (மதிப்பீட்டுச் செலவு ரூ. 433 இலட்சம்).

## பரம்பிக்குளம்— ஆளியாறு திட்டம்

மேற்காக ஓடும் ஏழு ஆறுகளின் குறுக்கே நீர்த்தேக்கங்களையும், தடுப்பணைகளையும் கட்டுவதன் மூலம் அவற்றை ஒருங்குபடுத்தவும் குடைவரைகளின் மூலம் அவற்றை இணைக்கவும் இத்திட்டம் விழைகிறது. நீர்த்தேக்கங்களில் வந்து தேங்கும் நீரை இந்தக் குடைவரைகள் கீழ்த் திசைக்குத் திருப்பி அதன் மூலம் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நிலங்களுக்கும், கேரள மாநிலத்திலுள்ள சித்தூர் பகுதிக்கும் பாசனம் அளிக்கிறது. இந்த ஆறுகள் 3,900 அடியிலிருந்து 1,050 அடி வரை உள்ள பல்வேறு உயர் மட்டங்களில் உள்ளன. இந்த ஆறுகளுக்கிடையே உள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்து புனல் மின்சக்தி உற்பத்தி செய்ய இயலுகிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 6,753 இலட்சம் ஆகும்.

இத் திட்டத்தின் முக்கிய பணிகளை நிறைவேற்றுவதிலுள்ள பணி முன்னேற்றம் குறித்த விவரம் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

**மேல் நீராறு அணை மதகு—குடைவரை (Tunnel).—** இந்த அணை—மதகு கட்டுவதற்காக சிமிட்டிக்கலவைப் பணி பெரும்பாலும் முடிந்து விட்டது. கற் கட்டுமானப் பணி முழு அளவில் நடைபெற்று வருகிறது. நீர் வெளியேறு முகத்திலிருந்தும் நீர்வரத்து முகத்திலிருந்தும் முறையே 810,620 நீளத்திற்குக் குடைவரை தோண்டுவது முடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 14,000 அடி நீளத்திற்கு குடைவரை தோண்ட வேண்டியதில் இதுவரை 7,005 நீளத்திற்குக் குடைவரை தோண்டப்பட்டுள்ளது.

**கீழ் நீராறு அணை—குடைவரை.—** விரிவாக ஆய்வு நடத்தி முடிக்கப்பட்டு தேவையான வரை படங்கள் இத் திட்டங்களுக்குத் தோராயமாக ஆகும் செலவு ஆகியவற்றுடன் தொழில் நுட்பக் குறிப்பையும் சேர்த்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்புகளுக்கு இசைவளிக்கும்படி தமிழ்நாடு அரசு கேரள அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளது. கேரள அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

கால்வாய்த் திட்டம் உட்பட இத் திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட ஏனைய அணைகள், குடைவரைகள் ஆகியவற்றைக் கட்டுவது முன்னரே முடிக்கப்பட்டு அவை செயல்பட்டு வருகின்றன.

**மின்சாரம்— தமிழ்நாடு மின்சார வாரியம்.—** அறிக்கை சம்பந்தப்பட்ட இவ்வாண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது டண் ஆகும். மின்சார உற்பத்தி, மின்சாரத்தைக்

கொண்டு செல்லல், கிராமங்களை மின்மயமாக்கல் ஆகிய திட்டப் பணிகளின்கீழ் திட்ட இலக்குகளில் அடைந்துள்ள சாதனைகளை யொட்டி, இவ்வாண்டு தமிழ் நாட்டின் மின்சார உற்பத்தியில் குறிப்பிடத்தக்க ஆண்டாகும்.

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட மூன்றாவது மாற்றுச் சுழல்தட்டு (T.A Set) இயந்திரத் தொகுதி 1972-ம் ஆண்டு மே மாதம் 17-ம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. இதோடு தமிழ்நாடு மின் இணைப்பு அமைப்பின் உற்பத்தித் திறன் 1,475 மெகாவாட்டிலிருந்து 1,571 மெகாவாட்டாக உயர்ந்தது. இது கடந்த ஆண்டைவிட சுமார் 7 சதவீத மின் உற்பத்தி வளர்ச்சியைக் காட்டுகிறது. மத்திய அரசுத் துறைத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட நெய்வேலி அனல்மின் நிலையத்தின் 600 மெகாவாட் உற்பத்தித் திறன் இதில் அடங்காது. (இவ்வாண்டு 14 மெகாவாட் திறன் கொண்ட மதுரை அனல் மின்நிலையம் மூடப்பட்டு விட்டது) 1972–73ஆம் ஆண்டில் இம்மின் இணைப்பு அமைப்பு பயன்படுத்திய மொத்த மின்சக்தி 685.5 கோடி யூனிட்டாகும். 1972–73-ல் உண்மையில் பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அளவு 685.5 கோடி. இதற்குக் காரணம் படிப்படியாக 75 சதவீதம் வரை மின்வெட்டைக் கொண்டு வந்ததும் மின் இணைப்பில் பரந்த அளவில் மின்சாரச் சுமை குறைப்பு செய்ததும் ஆகும்.

தெரு விளக்குகள் போடுவதன் மூலம் 1972–73-ல் 7,794 கிராமங்கள், சிற்றூர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. இவ்வாண்டு இறுதியில் 60,318 நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் மின்வசதி பெற்றுள்ளன. 55,072 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. இதையும் சேர்த்து தமிழ் நாட்டில் 1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் நிலவரப்படி மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 6,49,241 ஆகும்.

மின் அமைப்பு ஏற்பாடுகள், வட்டங்களின் கணக்குகளின்படி 1972–73ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய், வருவாய் இனச் செலவுகள், மூலதனச் செலவு ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பெருமொத்த வருவாய் (உதவித் தொகை உட்பட). | 93,74.28 |
| வருவாய் இனச் செலவுகள் (சேமநிதி, வட்டிக் கட்டணங்களைச் சரி செய்வதற்கு முன்னர்). | 54,84.32 |
| மூலதனச் செலவு .. .. .. .. | 42,76.47 |

## மின்சார ஆய்வாளர் அலுவலகம்

மத்திய அரசின் மின்சாரப் பணிகள் சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள் ஆகியவற்றிலுள்ள மின்சாரப் பணிகள் ஆகியவற்றைத் தவிர, மாநிலம் முழுவதிலுமுள்ள மின் அமைப்பு முறையை ஆய்வு செய்ய சட்டப்படி அமைக்கப்பட்ட அலுவலர் அரசுத் தலைமை மின்சார ஆய்வாளராவார். இவர் மின்கம்பிப் பணியாளர்கள் வாரியம், திரைப்படக் கருவிகள் இயக்குநோர் தேர்வு வாரியம் ஆகியவற்றிற்கு அலுவல் முறையில் தலைவராவார்.

இம் மாநிலத்தில் மின்சாரத்தை வழங்க உரிமம் பெற்ற 12 உரிமைதாரர்கள் உள்ளனர். அவர்களில் ஏழு பேர் தனிப்பட்ட உரிமைதாரர்களாவர். எஞ்சிய 5 உள்ளாட்சி மன்ற மின் அமைப்பு நிறுவனங்களாகும்.

1910ஆம் ஆண்டு இந்திய மின்சாரச் சட்டத்தின் 28-வது பிரிவின்கீழ் இந்த ஆண்டு புதிதாக உரிமம் ஏதும் வழங்கப் படவில்லை., உரிமைதாரர் நிறுவன அமைப்பு ஏதும் கையகப்படுத் தப்படவில்லை.

### வருவாய், செலவு.

| | | ரூ. |
|---|---|---|
| (அ) வருவாய் | .. .. .. .. | 52,99,000 |
| (ஆ) செலவு | .. .. .. .. .. | 43,23,073 |

தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்பட அரங்குகள் (முறைப் படுத்தல்) விதிகள் :—

1973ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள் நிலவரப்படி இருக்கின்ற திரைப்பட அரங்குகளின் மொத்த எண்ணிக்கையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| (1) | (Airconditioned) சீர்வளி வசதியுள்ள நிலையான திரையரங்குகள். | 24 |
| (2) | ஏனைய நிலையான திரைப்பட அரங்குகள் | 698 |
| (3) | ஓரளவு நிலையான திரைப்பட அரங்குகள் | 17 |
| (4) | டூரிங் திரைப்படக் கொட்டகைகள் .. | 591 |

1972–73-ல் ஏற்பட்ட மின்சார விபத்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை | 292 |
| விபத்துக்களின் மூலம் இறந்தோரின் மொத்த எண்ணிக்கை. | 363 |

## அத்தியாயம் 13.

## போக்குவரத்து.

தமிழ்நாடு அரசுப் பேருந்துப் போக்குவரத்து.—தமிழ்நாடு அரசுப் பேருந்துப் போக்குவரத்துத் துறை இயக்குநர், ஐ.ஏ.எஸ். பதவித் தரத்திலுள்ளவராவார். இத்துறை 83 விரைவுப் பேருந்து வழித்தடங்களையும் 319 மாவட்ட வழித்தடங்களையும் இயக்கி வருகிறது.

*1972–73*-ல் பேருந்துப் போக்குவரத்து இயக்கப்படுதல், நிதி நிலை ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | விரைவுப் பேருந்து வழித் தடங்கள். | மாவட்ட வழித் தடங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வழித்தடங்களின் எண்ணிக்கை. | 83* | 319 | 412 |
| 2. வழித்தடங்களின் நீளம் கிலோ மீட்டரில். | 31,047 கி.மீ. | 30,378 கி.மீ. | 62,025 கி.மீ. |
| 3. தமிழ்நாடு மாநில அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்துகள் தினந்தோறும் பயணஞ் செய்யும் தொலைவு கிலோ மீட்டரில். | 107,293 கி.மீ. | 181,412 கி.மீ. | 288,705 கி.மீ. |
| 4. பேருந்துகளின் எண்ணிக்கை. | 261 | 653 | 914 |
| 5. பேருந்து பயன்பாட்டுச் சதவீதம். | 83.1 | 84.2 | 83.8 |

*தமிழ்நாடு அரசுப் பேருந்துப் போக்குவரத்துத் துறையில் மொத்தம் 71 விரைவுப் பேருந்து வழித் தடங்கள் உள்ளன

பிணைந்த வழித் தடங்கள்—12

நிதிநிலை விவரம் (1972--73).

| பணிகளின் தன்மை. | நிகர ஆதாயம் (+) அல்லது விரயம் (—) |
| --- | --- |
| | ரூ. |
| விரைப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகள் | + 89,08,162.74 |
| மாவட்ட பேருந்துப் போக்குவரத்துப் பணிகள் | — 60,07,740.10 |
| கன்னியாகுமரி கிளை .. .. .. .. | + 10,23,434.24 |
| இராணித் தோட்டம் பணிக்களரி .. .. | + 2,81,794.19 |
| நிகர ஆதாயம் .. | 42,05,651.07 |

இம் மாநிலத்திலுள்ள நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து முறையை அரசு மாற்றியமைத்து மாநிலப் போக்குவரத்துக் கழகங்களை அமைத்துள்ளது. மாநில அரசுப் போக்குவரத்துத் துறை நடத்தும் பேருந்துப் போக்குவரத்துப் பணியுடன் பல்வேறு பகுதிகளில் பேருந்துப் போக்குவரத்துத் பணியைத் திறம்பட நிர்வகிப்பதே இதன் நோக்கமாகும். அமைக்கப்பட்ட கழகங்களின் பெயர்கள் பின்வருமாறு :—

1. பல்லவன் போக்குவரத்துக் கழகம், லிமிடெட், சென்னை-2.

2. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், லிமிடெட், மதுரை-16.

3. சேரன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட், பொள்ளாச்சி.

4. சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், லிமிடெட், கும்பகோணம்.

5. அண்ணா போக்குவரத்துக் கழகம்', லிமிடெட், சேலம்

## மோட்டார் ஊர்திகள் நிர்வாகம்

போக்குவரத்துத் துறையின் ஆணையாளர் வருவாய் வாரியத்தின் ஓர் உறுப்பினராகவுள்ளார். இவர் சென்னையிலுள்ள போக்குவரத்துத் துறையின் தலைவராக செயல்படுகிறார். இவருக்கு, போக்குவரத்துத் துணை ஆணையாளர்கள் இருவர், போக்குவரத்து உதவி ஆணையாளர் ஒருவர், உதவி செயலாளர்கள் இருவர், உதவிப் பொறியாளர் (மோட்டார் ஊர்திகள்) ஒருவர், முதுநிலை கணக்கு அதிகாரி ஒருவர், புள்ளி விவர அதிகாரி ஒருவர் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்துகளும், போக்குவரத்துக் கழகங்களும் :

கீழ்க்காணும் வகைப் பேருந்து வழித்தடங்களை நாட்டுடமையாக்கும் கொள்கை தொடர்ந்து செயலில் இருந்து வருகிறது:-

(1) 75 மைலும் அதற்கு அதிகமாகவுமுள்ள வழித்தடங்கள் (விரைவுப் பேருந்துப் போக்குவரத்து, சாதாரணப் பேருந்துப் போக்குவரத்து ஆகிய இவ்விரு போக்குவரத்தின் வழித் தடங்கள்);

(2) எவ்வளவு தொலைவுள்ளவையாக இருப்பினும் சென்னையிலிருந்து கிளம்பிச் செல்லுகின்ற அல்லது சென்னை வந்து முடிவடைகிற வழித்தடங்கள் அனைத்தும் ;

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கிளம்பிச் செல்லும் அங்கு வந்து முடிவடையும் வழித் தடங்கள் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித் தடங்கள் அனைத்தும்;

இக்கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏற்கெனவேயுள்ள தனியார் இயக்குபவர்களின் உரிமங்களின் கால அளவு முடிவடையும் போதெல்லாம் மாநிலங்களுக்கிடையேயான வழித் தடங்கள் உட்பட எல்லா வழித்தடங்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஒப்பந்த ஊர்திகள்.—வரையறை ஏதுமின்றி, வாடகைக் கார்கள், சுற்றுலா வாடகைக்கார்கள் ஆகியவற்றிற்கு மாநிலம் முழுவதற்குமான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு உயரளவு வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலா வாடகைக்காரர்களுக்கான அனுமதி, புதிய அம்பாசிடர் கார்களுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட கார்களுக்கும் மட்டுமே வழங்கப்படுகின்றன.

அறிக்கை கால அளவில் இயக்கப்பட்டு வந்த பல்வேறு வகையைச் சேர்ந்த ஒப்பந்த ஊர்திகள் எண்ணிக்கையைக் காட்டும் விவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஊர்திகளின் வகை. | 31–3–72 ஆம் நாள் நிலவரப் படி இருந்த ஊர்திகளின் எண்ணிக்கை. | 31–3–73 ஆம் நாள் நிலவரப் படி இருந்த ஊர்திகளின் எண்ணிக்கை. | உயர்ந்ததன் அல்லது குறைந்ததன சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் | 2,205 | 2,663 | (+)20.8 |
| வழக்கமான வாடகைக்கார்கள். | 7,970 | 7,825 | (—)1.9 |
| சுற்றுலா (வாடகைக்கார்கள்) | 1,002 | 1,402 | (+)39 |
| ஒப்பந்தப் பேருந்துகள் | 186 | 137 | (—)26 |
| சீர்வசதிப் பேருந்துகள் | 33 | 37 | (+)12 |

ஊர்திகளின் எண்ணிக்கை.— ஊர்திகளின் பொதுவான, ஒப்புநோக்கு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| கீழே குறிப்பிட்டுள்ள நாளின் படி. | பயணிப் பேருந்துகள். | சரக்கு ஊர்திகள். வாடகைச் சரக்கு ஊர்திகள். | சரக்கு ஊர்திகள். தனியார் சரக்கு ஊர்திகள். | ஒப்பந்த ஊர்திகள். | ஏனைய போக்குவரத்து ஊர்திகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1–4–1972 ஆம் நாள் நிலவரப்படி. | 8,449 | 14,309 | 3,000 | 11,396 | 3,051 | 40,205 |
| 1–4–1973 ஆம் நாள் நிலவரப்படி. | 8,928 | 14,883 | 2,902 | 12,064 | 3,991 | 42,768 |

ஒவ்வொரு வகையின்கீழும் ஊர்திகள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டுகிறது.

மோட்டார் வண்டிகள் பேணும் நிறுவனம்.—தமிழ்நாடு அரசு சாலைப் போக்குவரத்துத் துறை அதிகாரியின் பொறுப்பின்கீழ் மோட்டார் வண்டிகள் பேணும் நிறுவனம் ஒரு சுயேச்சை நிறுவனமாகத் தமிழ் நாட்டில் இயங்கி வருகிறது. தற்போது இந்த நிறுவனத்தின் தொழில் நுட்பக் கட்டுப்பாட்டின்கீழ் சுமார் 3,000 அரசு ஊர்திகள் இருக்கின்றன.

1972–73-ல் கீழ்க்காணும் பணிகள், இந் நிறுவனத்தின் பணிக்களரிகள், பணி நிலையங்களால் கவனிக்கப்பட்டன.—

| | எண்ணிக்கை |
|---|---|
| 1. பெரிய பழுதுகள் .. .. .. .. | 387 |
| 2. இடைத்தரப் பழுதுகள் .. .. .. | 4,251 |
| 3. சிறியபழுதுகள் .. .. .. | 11,052 |
| 4. சீர் படுத்தல் .. .. .. .. | 5,108 |
| 5. பல்வகை .. .. .. .. | 107 |
| மொத்தம் .. | 20,905 |

## அத்தியாயம் 14.

### பொதுப்பணிகள்— வீட்டு வசதி.

#### பொதுப்பணிகள் (கட்டிடங்கள்).

மாநில அரசுத் துறைகளின் கட்டிடத் தேவைகளை நிறைவு செய்வதே பொதுப் பணித்துறையைச் சேர்ந்த கட்டிடப் பிரிவின் தலையாய பணியாகும். இத்துறை தலைமைப் பொறியாளருடைய (கட்டிடங்கள்) நிர்வாகத்தின் கீழ்ப் பணி புரிகிறது. பல்வேறு துறைகளின் தேவைகளுக்கிணங்க கட்டிடங்கள் குறித்துத் திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டிடங்களைக் கட்டுதல் ஆகியவற்றிற்குக் கட்டிடப் பிரிவு பொறுப்பாகும்.

மருத்துவ மனைகள், ஏனைய மருத்துவ நிலையங்களுக்குத் தேவைப்படும் கட்டிடங்களின் தேவையை நிறைவு செய்யும் பணியே பொதுப்பணித் துறைப் பணியின் பெரும் பகுதியாக அமைகிறது. 1972–73 திருத்த மதிப்பீட்டின்படி இக்கட்டிடங்களைக் கட்டுவதற்கான மூலதனச்செலவு ரூ. 419.53 இலட்சம் ஆகும்.

இவ்வாண்டு கீழ்க்காணும் பணிகள் முடிக்கப்பட்டன:—

| மருத்துவத்துறை. | மதிப்பீடு. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 நாமக்கல் அரசினர் மருத்துவமனையில் 38 படுக்கைகளுக்கு இடவசதி அளிக்க கட்டிடம் கட்டியது. | 6.90 |
| 2 கடைய நல்லூரில் மருத்துவ மனை ஒன்றை கட்டியது. | 5·00 |
| 3 பூவானியில் 32 படுக்கைகளைக் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டியது. | 7·83 |
| 4 மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் 32 படுக்கைகளுக்கு இடவசதி அளிக்கக் கூடுதல் கட்டிடம் கட்டியது. | 2.00 |

31 MAY 1977

| மருத்துவத்துறை. (1) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
| --- | --- |
| 5 திருப்பத்தூரில் 38 படுக்கைகளைக் கொண்ட அரசினர் மருத்துவ மனை ஒன்று கட்டியது. | 10·00 |
| 6 செங்கற்பட்டு அரசினர் (மகளிர்) மருத்துவக் கல்லூரியில் மாணவியர் இல்லம் கட்டியது. | 2·00 |
| 7 எழும்பூர் அரசினர் (மகளிர்) மருத்துவ மனையில் ஆராய்ச்சி நிலையக் கட்டிடம் கட்டியது. | 5·25 |
| 8 கீழ்ப்பாக்கம், கல்லூரி இணைந்த மருத்துவ மனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டியது. | 8·50 |
| 9 தஞ்சாவூர், ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டியது. | 4·50 |
| வருவாய்த்துறை: | |
| 1 சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அலுவலகத்திற்கான கட்டிடம் கட்டியது. | 1·10 |
| 2 மேட்டூர் சப்-மாஜிஸ்ட்ரேட் அலுவலகத்திற்கான கட்டிடம் கட்டியது. | 1·25 |
| 3 மன்னார்குடி சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அலுவலகத்திற்கான கட்டிடம் கட்டியது. | 1·27 |
| சுற்றுலா.: | |
| 1 குன்னூரில் சுற்றுலாப் பயணிகள் கட்டிடம் கட்டியது. | 2·12 |
| 2 ஏர்க்காட்டில் சுற்றுலாப் பயணிகள் கட்டிடம் கட்டியது. | 2·25 |

துறைமுகப் பொறுப்புக் கழகம்— சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம்:

1—4—1972ஆம் நாளிலிருந்து 31—3—1973ஆம் நாள் வரையிலான கால அளவில் கிடைத்த வருவாய் ரூ. 1,152·08 இலட்சம் ஆகும். மேற்சொல்லப்பட்ட கால அளவில் ஏற்பட்ட செலவு 1,029·63 இலட்சம் ரூபாயாகும். அந்த ஆண்டின் இறுதியில் இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்

28,34,27,822 ரூபாயாகும். அனைத்து நாட்டுப் புனரமைப்பு—வளர்ச்சி வங்கி, டச்சு நாட்டு நிதியுதவியாளர்கள் ஆகியோருக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 3,23,63,506-ம், ரூ. 1,15,32, 454-ம் ஆகும். பொதுமக்களிடமிருந்து வாங்கிய ஈட்டுறுதி ஆவணக்கடன் தொகை ரூ. 1,10,00,000 நிலுவையாகவுள்ளது.

தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம்:

தூத்துக்குடி துறைமுகம், இந்தியாவிலுள்ள சிறிய, நடுத்தரத் துறைமுகங்கள், அனைத்திலும் வணிகத்தில் முதல் இடத்தை தொடர்ந்து வகித்து வருகிறது.

துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் 1972-73ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் ரூ. 50,47,205 ஆகும்.

இந்த ஆண்டில் மொத்தம் 5,21,866 டன் இறக்குமதி செய்யப்பட்டது. அதன் மூலம் ரூ. 4,59,686·20 வருவாய் கிடைத்தது.

இந்த ஆண்டில் மொத்தம் 5,04,956 டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் மூலம் ரூ. 9,27,906·95 வருவாய் கிடைத்தது.

இந்த ஆண்டில் 19,04,940 கனமீட்டர் பரிமாணமுள்ள 193 நீராவிக் கப்பல்களும், 51,864 கன மீட்டர் பரிமாணமுள்ள 233 பயணிகள் கப்பல்களும் இத்துறைமுகத்திற்கு வந்தன. வசூலிக்கப்பட்ட துறைமுகக் கட்டணம் ரூ. 2,51,476·79 ஆகும்.

இந்த ஆண்டில் 16 பயணிகள் இத்துறைமுகத்தில் கப்பலேறி வெளிநாடு சென்றார்கள். 22 பயணிகள் கப்பலில் வந்திறங்கினர்.

இந்த ஆண்டில் இயல்பான வெட்ப தட்ப நிலை நிலவியது'

சிறு துறைமுகங்கள் :

தமிழ்நாட்டில் ஒன்பது சிறு துறைமுகங்களும் மூன்று இடைநிலைத் துறைமுகங்களும் உள்ளன.

1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக தமிழ்நாட்டிலுள்ள சிறுதுறைமுகங்கள் அனைத்திலும் உள்ள தொழிலாளர்கள் அனைவரும் பொதுப்பயன் பணியைச் சேர்ந்தவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் கடலூர், நாகப்பட்டிணம், பாம்பன், கிழக் கரை, இராமேசுவரம், கொளச்சல் ஆகிய சிறு துறைமுகங்களில் சரக்கு இறுக்குமதி ஏற்றுமதி விவரம் வருமாறு :—

| இறக்குமதி (மெட்ரிக் டன்) | ஏற்றுமதி (மெட்ரிக் டன்) |
|---|---|
| 1,43,479·7 | 2,49,615·7 |

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. வெளியூர்களில் மூன்று வீட்டு வசதிப் பிரிவுகளும் தொடங்கப்பட்டன. இதில் ஒரு பிரிவு திருச்சிராப்பள்ளியிலும், பிறிதொரு பிரிவு மதுரையிலும், மூன்றுவது பிரிவு கோயம்புத்தூரிலும் உள்ளன. இவை ஒவ்வொன்றின் செயல்வரம்புப்பகுதி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களைக் கொண்டுள்ளது. சென்னை மாநகரிலும் ஒரு பிரிவு உள்ளது. இந்த வாரியம் ஒரு சட்டப்படி அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாக உள்ளது. இதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்தோர் உறுப்பினராகவுள்ளனர். இதன் மூலம் இம்மாநிலத்தில் வீட்டு வசதி நடவடிக்கைகள் குறித்துத் திட்டமிட்டு ஒருங்கிணைக்கவும் வீட்டு வசதித் திட்டங்களை விரைவாகவும் திறம்படவும் நிறைவேற்றவும் இயலுகிறது. முன்பு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருடைய நிர்வாகத்தின்கீழ் இருந்த கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவு தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன:

1. குறைந்த வருமானமுள்ளோர் வீட்டு வசதித் திட்டங்கள்.

2. நடுத்தர வருமானமுள்ளோர் வீட்டுவசதித் திட்டங்கள்.

3. குடிசைப் பகுதி மேம்பாடு/மாற்றுத் திட்டங்கள்.

4. தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுவசதித் திட்டங்கள்.

5. பிற துணைப்பணித் திட்டங்கள்.

நகர அமைப்புத் திட்டம்:

நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்தின் தலைவர் ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரி யாவார். நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகம் சீரமைக்கப்பட்டு எட்டு வட்டார அலுவலகங்கள் தொடங்கப்பட்டன. இவை சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றன. தலைமையிடத்திலுள்ள பணி கீழ்க்காணும் ஐந்து செயல் பிரிவுகளின் கீழ்த் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

1 வட்டாரத்திட்டங்கள்.

2. பெருந்திட்டங்கள்.

3. விரிவான வளர்ச்சித் திட்டங்கள்.

4. மத்திய-ஆராய்ச்சிப் பிரிவு.

5. மக்கள்—போக்குவரத்து—சரக்குப் போக்குவரத்து.

தேசிய நெடுஞ்சாலைகள்:

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள், மத்தியச் சாலைத் திட்டங்கள் ( Central Road Scheme ) ஆகியவற்றைக் கவனிப்பதற்காக தலைமைப் பொறியாளர் பதவி ஒன்று தேவையான பணியாளர்களுடன் 1971-ல் ஏற்படுத்தப் பட்டது.

கீழ்க்காணும் வட்டங்கள் அவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன :

1. தேசிய நெடுஞ்சாலைத் திட்ட வட்டம், சென்னை.

2. பாம்பன் பாலப்பணிகளுக்கான சிறப்பு ஆய்வு வட்டம், சென்னை.

3. தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை.

4. தேசிய நெடுஞ்சாலை வட்டம், மதுரை.

5. தேசிய நெடுஞ்சாலை வட்டம், திருநெல்வேலி.

6. தேசிய நெடுஞ்சாலை வட்டம், சேலம்.

7. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், சென்னை.

இந்த ஆண்டில், தேசிய நெடுஞ்சாலைத் துறையின் நிதி-திட்டப் பயன் சாதனைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| நிதிச்சாதனை. (1) | (ரூபாய் இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1. மத்திய சாலைநிதிப் பணிகள் .. .. | 108·50 |
| 2. மாநகரச் சாலை மேம்பாட்டுத் திட்டம் .. | 14·68 |
| 3. தேசிய நெடுஞ்சாலை மூலப்பணிகள் .. .. | 12,10·393 |

நெடுஞ்சாலை கிராமப்பணிகள்

நெடுஞ்சாலை, கிராமப்பணிகள் துறை, தலைமைப் பொறியாளர் ஒருவர், வட்டார மேற்பார்வைப் பொறியாளர்கள் நால்வர் ஆகியோரைக் கொண்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது, இந்த வட்டார மேற்பார்வை பொறியாளர்கள் வட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்களுடைய தலைமையிடங்கள் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. இவர்கள் தவிர ஆய்வுக்குப் பொறுப்பு வகிக்கும் மேற்பார்வைப் பொறியாளர் ஒருவர் உள்ளார். இவரது தலைமையிடம் சென்னையில் உள்ளது இதோடு ஏழு சிறப்பு வட்டங்களும் உள்ளன.

1972-73ஆம் ஆண்டின் நிதிச் சாதனைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| | நிதிச்சாதனைகள் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கருவிகளும் தளவாடங்களும் | 6·63 |
| 2 | தற்போதுள்ள இருப்புப்பாதை சாலைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம்]சுரங்கப் பாதைகள் கட்டுதல் | 24·28 |
| 3 | பெருநகர் சாலை வளர்ச்சித் திட்டம் | 53·51 |
| 4 | சர்க்கரை ஆலைகளுக்கு வரும் சாலை வளர்ச்சித் திட்டம் | 50·20 |
| 5 | கிராமப்புற சாலைகள் சிறப்புத் திட்டம் | 293·76 |
| 6 | காவிரி ஆயக்கட்டுப் பகுதி திட்டம் | 50·16 |
| 7 | வறட்சிப்பாங்கான பகுதித்திட்டம் | 32·72 |

## அத்தியாயம

## இயற்கை வளங்கள்.

வன வளர்ச்சிக்காக ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பல் வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இத்திட்டங்களில் கீழ்க்கண்டவை அடங்கியுள்ளன. (1) கிராமத் தரிசு நிலங்களிலும், தனியார் நிலங்களிலும் மரங்களை வளர்ப்பதற்கான பண்ணைக்காடுகள் காடுகள் விரிவாக்கத் திட்டம், (2) தொழில் வணிக முக்கியத்துவம் வாய்ந்த மரங்களை வளர்க்கும் திட்டம், (3) விறகு மரக்காடுகளை வளர்த்தல் திட்டம், (4) மாநிலத்தின் மர வளத்தைப் பெருக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும், கால்வாய்கள் ஆறுகளின் கரைகளில் மரங் களை வளர்த்தல் திட்டம், (5) ஆற்றுப் பள்ளத்தாக்கு, நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மண் வளப்பாதுகாப்புத் திட்டம், (6) வன விலங்குகளைப் பாதுகாத்தல் வன விலங்குகள் உய்விடங்களை உருவாக்கி மேம்படுத்தும் திட்டம், (7) வன ஆராய்ச்சி வன வளம் குறித்தும் விளம்பரம் செய்தல், பணித்திட்டங்கள், சாலை கள் போடுதல் போன்ற ஏனைய திட்டங்கள்.

''வறட்சிப்பாங்கான பகுதித் திட்டத்தின்'' கீழ் ஓசூர், தர்மபுரி, இராமநாதபுரம் கோட்டங்களில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன; இதற்கு 11,60,360 ரூபாய் செலவிடப்பட்டது.

செயல் படுத்தப் பட்ட திட்டங்களின் பெயர்கள், நிதி குறித்த சாதனைகள், திட்டப்பயன் சாதனைகள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| திட்டத்தின் பெயர். | திட்டப்பயன் சாதனை. | நிதி குறித்த சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ஹெக்டேர். | ரூ. |
| (அ) பண்ணைக்காடுகளும் விறகு மரக்காடுகளும்— | | |
| (1) பண்ணைக்காடுகள் - கிராமக் காடுகள். | 3,240 | 8,14,000 |
| (2) விறகு மரக்காடுகள் .. | 691 | 2,56,000 |

| திட்டத்தின் பெயர். | திட்டப்பயன் சாதனை. | நிதி குறித்த சாதனை. |
|---|---|---|
| (ஆ) வாணிக மலைத்தோட்டங்கள்— | ஹெக்டேர். | |
| (1) தேக்கு .. .. .. | 505 | 2,61,000 |
| (2) மென்மரம் .. .. | 182 | 49,000 |
| (3) சவுக்குமரம் .. .. | 502 | 3,42,000 |
| (4) மிலாறு .. .. .. | 836 | 3,43,000 |
| (5) விரைந்து வளரும் மர இனங்கள் நடுதல். | 3,555 | 25,45,000 |
| (6) சந்தன மரம் வளர்த்தல் | 113 | 82,000 |
| (7) ஆறு, கால்வாய், ஏரிக் கரையோரங்களில் மரங்கள் வளர்த்தல். | 665 | 2,77,000 |
| (இ) முன்னாள் ஜமீன் காடுகள் அளவை, எல்லை வரையறுப்பது உட்பட காடுகளை ஒருங்கிணைத்தல்— | | |
| திருச்சி வட்டம் .. | 1,531 | |
| மதுரை வட்டம் (10 வட்டாரங்கள்). | | |
| (ஈ) வன விலங்குகள் உய்விடங்களை மேம்படுத்தல். | | 3,10,000 |
| (உ) வெட்டுமர வேலைகள் .. | | 1,04,000 |
| (ஊ) வன ஆராய்ச்சி .. | | 1,90,000 |
| (எ) வனச் சாலைகள் (8 கி.மீ.) | | 3,03,000 |
| (ஏ) கட்டிடங்கள் கட்டுதல் .. | | 1,80,000 |
| (ஐ) வனப் பணியாளர்கள், தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல். | | 98,000 |
| (ஒ) வன விளம்பரம் .. .. | | 59,000 |
| (ஓ) வனப் பாதுகாப்பு .. .. | | 81,000 |

| திட்டத்தின் பெயர். | திட்டப்பயன் சாதனை. | நிதி குறித்த சாதனை. |
| --- | --- | --- |
| (ழ) செயல் திட்டம் .. .. | | 99,000 |
| (1) காடுபடு சிறுபொருள் பெருக்கம். | | 2,40,000 |
| (2) திட்டம் புள்ளி விவரப் பிரிவு | | 46,000 |
| (3) நிர்வாகத்தை மும்முர மாக்குதல். | | 51,000 |

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்.

| | | |
| --- | --- | --- |
| (அ) வனவள ஆராய்ச்சி .. | 947 ச. மைல் | 1,97,000 |
| (ஆ) முந்திரித் தோட்டங்களில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களை மேற்கொள்ளுதல். | 7,500 ஏக்கர் | 1,88,000 |
| (இ) குந்தா நீர்க்கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு. | | 13,00,000 |
| வேளாண்மைப் பணிகள் .. | 479 ஹெக்டேர் | |
| தடுப்பு அணைகள் .. .. | 530 ஹெக்டேர் | |
| தடுப்புச் சுவர்கள் .. .. | 74 | |
| (ஈ) கீழ் பவானி ஆற்று பகுதியில் மண்வளப் பாதுகாப்பு. | 896 ஹெக்டேர். | 9,31,000 |
| (உ) வைகை, மேட்டூர் நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு. | 927 ஹெக்டேர். | 7,98,000 |
| (ஊ) பிரச்சினைக்குரிய வனப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு. | நில அளவை | 36,000 |
| (எ) வேளாண்மை உற்பத்திப் பணி முந்திரிப் தோட்டங்கள் வளர்த்தல். | 1,411 ஹெக்டேர். | 9,38,000 |
| (ஏ) அரக்கு உற்பத்தி .. | | 48,000 |

| திட்டத்தின் பெயர். | திட்டப்பயன் சாதனை. | நிதிகுறித்த சாதனை. |
|---|---|---|
| (ஐ) வனத்துறை முந்திரித் தோட்டத்தில் சிறப்பு முனைப்புத் திட்டங்களை மேற்கொள்ளுதலும் முந்திரிக் காடுகளின் பரப்பை விரிவுபடுத்துதலும். | 618 ஹெக்டேர். 1,310 ஹெக்டேர். | 6,41,000 |
| ஸ்ரீலங்கா அகதிகள் புதுவாழ்வுத் திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்பது— | | |
| (1) தேயிலைத் தோட்டங்கள் | 368 ஹெக்டேர். | 50,19,128 |
| (2) ரப்பர் தோட்டங்கள் .. | 417 ,, | 8,92,592 |
| (3) வறட்சிப் பாங்கான பகுதிகளுக்கான திட்டம். | 1,660 ,, | 11,60,360 |

சின்கோனு—

ரூபாய் 61,97,790 மதிப்புள்ள சின்கோனு பொருள்கள் வெளிநாடுகளில் விற்பனை செய்யப்பட்டன.

இவ்வாண்டில், உள்நாட்டு உபயோகத்துக்கென மொத்தம் 10,29,044 ரூபாய் மதிப்புள்ள சின்கோனு பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாண்டில், மொத்தம் 9,90,940 ரூபாய் மதிப்புள்ள மருந்து விரைவில் ஆவியாகப் போகும் தைலங்கள் விற்பனை செய்யப்பட்டன. அத்துடன் பல்வகைப் பொருள்கள் விற்பனை மூலம் 3,121·00 ரூபாய் வசூலானது.

காலியிடங்களை நிரப்ப 393·450 ஹெக்டேரில் சின்கோனு வளர்த்தல்·ஏற்கெனவே சின்கோனு நடப்பட்டுள்ள 363.73 ஹெக்டேர் நிலத்தை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுடன், புதிதாக 61.50 ஹெக்டேரில் சின்கோனு நடப்பட்டது. இவ்வாண்டில், 3,30,772 கிலோகிராம் சின்கோனு பட்டை சேகரிக்கப்பட்டது.

மீனளம்—

மீன் பிடி விசைப்படகுகள் கட்டுதலும், தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குதலும், நைலான் மீன் வலை நூல வழங்குதல், உள்நாட்டு நீர் நிலைகளில் வளர்ப்பதற்கான பொருளாதார வகையில் ஆதாயமளிக்கும் மீன் குஞ்சுகள் வழங்கல், இம்மாநிலத்திலுள்ள பெரிய நீர்த்தேக்கங்களில் மீன் வளர்த்தல், மீன் வளத்தைப் பயன்படுத்திக்கொள்ளல், ஊராட்சிகளில் மீன்

வளத்தைப் பெருக்குதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுதல், மீனைப் பாதுகாக்கவும் விற்பனை செய்யவும், மீன்பிடி விசைப்படகுகளை இயக்க மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் வசதிகள் செய்து கொடுத்தல் முதலிய பெரிய திட்டங்களை மீனளத்துறை மேற்கொண்டுள்ளது.

இராயபுரத்தில் இரண்டு, நாகப்பட்டிணத்தில் ஒன்று, மண்டபத்தில் ஒன்று ஆக படகு கட்டு தளங்கள் நான்கு உள்ளன. இவ்வாண்டில் மீனளத்துறை படகுகட்டும் துறைகளில் கட்டுவதெனத் திட்டமிடப்பட்டிருந்த மரத்திலுலான 167 விசைப் படகுகளில் 134 படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. தனியார் படகு கட்டும் தளங்களில் மரத்திலுலான 90 விசைப் படகுகள் கட்டப்பட்டன. இவை மட்டுமின்றி, இவ்வாண்டு இறுதியில் 33 படகுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் இருந்தது. இரும்பு—சிமிட்டிப் படகுகளைப் பொருத்த வரை, இவ்வாண்டில் கட்டுவதெனத் திட்டமிடப்பட்டிருந்த ஐந்து படகுகளில் நான்கு படகுகள் கட்டும் பணி முன்னேற்றம் கண்டிருந்தது.

முத்துக்குளிக்கும் வேலை ஏதும் இவ்வாண்டு நடைபெறவில்லை. முத்துக்குளிக்கும் வேலை 1—11—1972-ல் தொடங்கியது. முத்துக் குளிப்பவர்களிடமிருந்து இவ்வாண்டில் கீழ்க்காணும் சங்கு வகைகள் வாங்கப்பட்டன.

| | |
|---|---|
| முழு அளவுச் சங்குகள் (தொகுதி—1) | 2,12,423 |
| முழு அளவுச் சங்குகள் (தொகுதி—2) | 512 |
| பூச்சி அரித்த சங்குகள் .. .. | 38,857 |

**புவி அமைப்பியல் (Geology)**

காரீயகம், சுண்ணாம்புக்கல், கன கனிம வகை மணல் ஆகியவற்றை வெட்டி எடுப்பதற்காக நிலத்தைத் துளையிடுவது உட்பட, விரிவான கனிவள மதிப்பீடு செய்யும் பணியை தொழில் துறை, இம் மாநிலத்தின் புவி அமைப்பியல் பிரிவு இவ்வாண்டில் மேற்கொண்டது. இரும்புக் கனிப் பொருள்கள், களிமண் வகைகள், முறிவெள்ளி (Molybdenite) ஆகியவற்றிற்காகவும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவை மட்டுமன்றி, மாகனைசைட், படிக்கல், களிமம், ஓரளவு மதிப்புள்ள கல் வகைகள், கடின கருங்கல், ஆகியவற்றிற்காகவும் சிறு ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

## அத்தியாயம் 16.

### தொழில், வணிகம், தொழிலாளர் நலன்.

தொழில்—வணிக இயக்குநர் அலுவலக வேலைகள் வருமாறு:—

1. சிறுதொழில் வளர்ச்சி.
2. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.
3. பட்டுப்புழு வளர்ப்பு.
4. தென்னை நார்.
5. கைத்திறப் பொருட்கள்.
6. தொழிற் பேட்டைகளும் சீர்செய்த மனைகளும்.
7. கிராமத் தொழில்கள் திட்டம்.

தொழிற்பேட்டைகளும் சீர்செய்த மனைகளும்.

சிறுதொழில் வளர்ச்சியில் தொழிற் பேட்டைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பொதுத் தொழிற் பேட்டைகள் 24 இருந்தன. அவற்றுக்கான 523 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டன; அவை அனைத்தும் சிறுதொழில் அதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இந்தத் தொழிற் பேட்டைகளில் வெவ்வேறு வகையான சிறு தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. 1972–73-ஆம் ஆண்டில், சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வருவாய்க் கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தொழிற் பேட்டையும் தற்போதுள்ள தொழிற் பேட்டைகளில் கூடுதலாகக் கொட்டகைகளும் கட்டும் பணிமேற் கொள்ளப்பட்டது.

சீர்செய்த மனைகள் கொண்ட தொழிற்பேட்டைகள்.

இம்மாநிலத்தில் சீர்செய்த மனைகள் கொண்ட தொழிற்பேட்டைகளை அமைப்பதென்பது சிறு, நடுத்தர, பெரிய தொழில்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சி காண்பது மற்றுமொரு முக்கிய கூறாகும். 1973 மார்ச் இறுதியில் 3,137·96 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு, 671·303 பரப்பளவுள்ள நிலம் சீர் செய்த மனைகள் கொண்ட ஏழு தொழிற் பேட்டைகளில் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## தொழில் உற்பத்தி

1972-ஆம் ஆண்டில் வெவ்வேறு தொழிற்சாலைகளில் கிட்டிய சராசரி உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| தொழிற் குறியீடு. | அடிப்படை ஆண்டு 1960—100 1972-ல் சராசரி |
|---|---|
| 20. உணவுப்பொருள் தயாரிக்கும் தொழிற் சாலைகள். | 228.0 |
| 22. புகையிலை தயாரிப்பு .. .. .. | 94.3 |
| 23. துணிகள் தயாரிப்பு .. .. .. | 124.3 |
| 30. ரப்பர் பொருள்கள் தயாரிப்பு .. | 269.6 |
| 31. இரசாயனங்கள், இரசாயனப் பொருள் கள் தயாரிப்பு. | 196.6 |
| 33. உலோகமல்லாத கனிப்பொருள்கள் தயாரிப்பு | 250.9 |
| 36. இயந்திரங்கள் (மின்சார இயந்திரங்கள் நீங்கலாக) தயாரித்தல். | 283.9 |
| 37. மின்சார இயந்திரங்கள், கருவிகள் சாதனங்கள் தயாரித்தல். | 484.7 |
| 38. போக்குவரத்துச் சாதனங்கள் தயாரித்தல் | 171.6 |
| 39. பல்வேறு பொருள்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள். | 119.0 |
| 51. மின்சாரம், எரிவாயு, நீராவி .. .. | 312.6 |

### தமிழ்நாட்டிலுள்ள தொழில்கள் குறித்த ஆண்டுக் கணக்கெடுப்பு.

தமிழ்நாட்டின் தொழில்கள் குறித்த ஆண்டுக் கணக்கெடுப்பைப் பொறுத்தவரை கடைசியாக 1970-ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் உள்ளன. இக்கணக்கெடுப்பில் 5,751 தொழிற்சாலைகள் இடம் பெற்றன. 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தைச் சேர்ந்த 2 (m) பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள், இந்தியத் தொழில்களின் வகைபாடுகளின் கீழ் 2, 3, 5, 8 ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ள தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் இக்கணக்கெடுப்பின் கீழ் வந்தன.

பாதுகாப்புத் தொடர்பான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் எண்ணெய் இருப்பு வைத்து விநியோகம் செய்யும் தொழிற்சாலைகளும் ஓட்டல்கள், சிற்றுண்டிசாலைகள், ஆகியனவும், விற்பனைக்காகவும் விநியோகத்திற்காகவும், எதையும் தயாரிக்காத தொழிற்பயிற்சி நிறுவனங்களும் நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான காரணங்களினாலோ ஏனைய காரணங்களினாலோ இக்கணக்கெடுப்பிலிருந்து நீக்கப்பட்டன.

1970-ஆம் ஆண்டில் பல்வேறு தயாரிப்புப் தொழிற்சாலைகளில் முதலீடு செய்யப்பட்ட தொகையானது முந்திய ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட தொகையை காட்டிலும் 13·1 சதவீதம் அதிகமாகியது. 1970ஆம் ஆண்டில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 7·7 சதவீதம் உயர்ந்தது. 1970ஆம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியங்களின் அளவும் 17·6 சதவீதம் உயர்ந்தது.

1970ஆம் ஆண்டுக்கான இடுபொருளின் மொத்த மதிப்பு முந்திய ஆண்டைக் காட்டிலும் 25·4 சதவீதம் அதிகமாயிற்று. 1970ஆம் ஆண்டில் உற்பத்தியான பொருளின் மதிப்பும் முந்திய ஆண்டைவிட 25·1 சதவீதம் அதிகமாயிற்று. 1970ஆம் ஆண்டில் தயாரான பொருள்களின் மதிப்பு 30·5 சதவீதம் என்ற கணிசமான அளவு உயர்ந்தது.

இம்மாநிலத்தில் 20 சர்க்கரைத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 10 தொழிற்சாலைகள் கூட்டுறவுத் துறையில் உள்ளன. இவற்றில் 16 தொழிற்சாலைகள் சர்க்கரை உற்பத்தி செய்து வருகின்றன. தனியார் துறையிலுள்ள ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை செயலற்ற நிலையிலும் கூட்டுறவுத் துறையிலுள்ள மூன்று சர்க்கரைத் தொழிற்சாலைகள் தொடக்க நிலையிலும் உள்ளன. கூட்டுறவுத் துறையிலுள்ள பத்துத் தொழிற்சாலைகளில் ஏழு தொழிற்சாலைகள் சர்க்கரை உற்பத்தி செய்து வருகின்றன. 1972-73 ஆம் ஆண்டு இறுதியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வசூலித்த மொத்த பங்கு மூலதனம ரூ. 812 இலட்சம் ஆகும். இதில், இணைமானிய அடிப்படையில், இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்தில் அரசின் பங்காக மாநில அரசு ரூ. 342·93 இலட்சம் அளவுக்கு பங்குத்தொகை வழங்கியுள்ளது.

இயந்திரங்கள் வாங்கும் செலவவகையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பெற்றுள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்து வதற்கும் அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. 1972—73ஆம் ஆண்டு இறுதியில் உயரளவு ரூ. 1,117.40 இலட்சத்திற்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

1972-73 கரும்பு பருவத்தில் எல்லா சர்க்கரைத் தொழிற்சாலைகளிலும் பிழியப்பட்ட கரும்பின் அளவு மொத்தம் 40.08 இலட்சம் டன்னாகும். உற்பத்தியான சர்க்கரையின் அளவு மொத்தம் 3.31 இலட்சம் டன் ஆகும். இதில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பு 12.90 இலட்சம் டன்னும் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை 1.10 லட்சம் டன்னும் ஆகும்.

பிழியப்பட்ட கரும்பின் மொத்த மதிப்பு ரூ. 40.28 கோடியும் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் மொத்த மதிப்பு ரூ. 60 கோடியும் ஆகும். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் நியமித்த வணிகத் தணிக்கையாளர்கள் மூலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கணக்குகள் கணிக்கை செய்யப்பட்டன. 1970-71ஆம் ஆண்டு இறுதியில் இருந்த ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஐந்து ஆலைகளின் கணக்குத் தணிக்கையும், 1971-72ஆம் ஆண்டு இறுதியில் இருந்த பத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எட்டு சர்க்கரை ஆலைகளின் கணக்குத் தணிக்கையும், 1972-73ஆம் ஆண்டு இறுதியில் இருந்த பத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இயங்கிவரும் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உட்பட, நான்கு கூட்டுறவச் சர்க்கரை ஆலைகளின் கணக்குத் தணிக்கையும் முடிக்கப்பட்டுள்ளன. இயங்கிவரும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஏழும் 1972-73ஆம் ஆண்டில் ஆதாயத்துடன் செயல்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மை—தொழிற் கழகம்.

ஆய்வு ஆண்டில், பூச்சி கொல்லி மருந்துகள் தயாரித்தல், விநியோகம் செய்தல், உரங்கள் விற்பனை செய்தல், இறக்குமதியான டிராக்டர்களையும் உதிரி பாகங்களையும் விற்பனை செய்தல், தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் உள்நாட்டு டிராக்டர்கள் வழங்குதல், டிராக்டர்களையும் கருவிகளையும் வாடகைக்கு விடுதல், வட்டார நிலையங்களின் உழவர்களின் டிராக்டர்களைப் பழுது பார்க்கல் முதலிய பணிகளை வேளாண்-தொழிற்கழகம் மேற்கொண்டது.

இவ்வாண்டில் 503 இறக்குமதி டிராக்டர்கள் விற்கப்பட்டன. முந்திய ஆண்டில் 775 இறக்குமதி டிராக்டர்கள் விற்கப்பட்டன.

இவ்வாண்டில், ரூ. 17.92 இலட்சம் மதிப்புள்ள. பல்வேறு டிராக்டர்களுக்குத் தேவையான உதிரி பாகங்களும் உழவுக் கருவிகளும் விற்கப்பட்டன. இதற்கு முந்திய ஆண்டில் இவ்வகையில் விற்பனையானவற்றின் மதிப்பு ரூ. 14.10 இலட்சம் மட்டுமே ஆகும்.

1972-73-ஆம் ஆண்டில் ரூ. 1.13 இலட்சம் மதிப்புள்ள எண்ட்ரின் டெக்னிகல், ரூ. 4.32 இலட்சம் மதிப்புள்ள B.H.C. டெக்னிகல் ஆகிய பொருள்கள் வாங்கப்பட்டன.

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக்கழகம்.**

" சிட்கோ " என்று பிரபலமாகியுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனங்களில் ஒன்றான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் 23—3—1970 அன்று பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக அமைக்கப்பட்டு அதன் பின்னர் 20—1—1971ல் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாற்றப்பட்டது. அதன் முக்கிய செயல் நோக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) சிறு தொழிற் பிரிவுகளுக்குத் தேவையான இன்றியமையா மூலப் பொருள்களைத் திறம்படக் கொள்முதல் செய்து நியாயமான முறையில் வழங்குதல்.

(2) சிறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குதல்.

(3) கொட்டகைகள் கட்டி அவற்றைத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழிற்சாலைகளுக்குக்கிடைக்கச் செய்தல்.

(4) சிறு தொழிற்சாலைகளைத் தொடங்க விரும்பும் புதிய தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கலும் புதிய தொழிற்சாலைக்காகத் தொழில் நுட்பச் சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரித்தலும்.

(5) சிறு தொழில்களுக்கான உரிமங்களை ஒருங்கிணைத்தலும் அவற்றைக் கொண்டு பெருமளவில் பொருள்களை இறக்குமதி செய்தலும்.

(6) சிறு தொழிற்சாலைகளின் பொருள்களை விற்பனை செய்ய உதவி புரிதல்.

(7) ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

(8) நடைமுதல் மூலதனக் கடன்கள் வழங்கல்.

**பற்றுக் குறைப் பொருள்களை வழங்கல்.**

கீழ்க்காணும் மூலப்பொருள்களை சிறு தொழிற் பிரிவுகளுக்கு வழங்கும் பொறுப்பை சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது.

(1) இரும்பு, எவர்சில்வர் உட்பட உருக்குப் பொருள்கள்.

(2) துத்தநாகம்.

(3) எரி சோடா.

(4) கால்நடைக் கொழுப்பு.

கணக்கு விவரம் :—

1972-73-ஆம் ஆண்டில் தோராயமாக ரூ. 25 இலட்சம் ஆதாயம் கிட்டியுள்ளதை இவ்வாண்டுக் கணக்குகள் காட்டு கின்றன.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமானது இம்மாநிலத்திலுள்ள பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கென 1965-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஏழு ஆண்டுகளில் இக்கழகம், வெவ்வேறு வகையான பணிகளை மேற்கொண்டுள்ளது; அரசுத் துறையில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது; தனிப்பட்ட தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத் தொழிற்முயற்சிகளைத் தொடங்கியுள்ளது; நிதி இடர்பாடுள்ள தொழிற் பிரிவுகளுக்கு உதவியளித்துள்ளது; தொழில் நிறுவனங்கள் பலவற்றிற்கு நிதியுதவி அளித்துள்ளது.

அதிகாரம் பெற்ற மூலதனமாக ரூ. 10 கோடியும் செலுத்தப்பட்ட மூலதனமாக ரூ. 75 இலட்சம் மட்டுமே கொண்டு இக்கழகம் 21-5-1965-ல் அமைக்கப்பட்டது. 31-12-1972 நிலவரப்படி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 9.66 கோடி ஆகும். இது ஏழு ஆண்டுகளில் பத்து மடங்காகப் பெருகியுள்ள தொகையாகும்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ், தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை ஆகிய இரண்டு தொழிற்சாலைகளையும் ரூ. 1,000 இலட்சம் செலவில் விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் கூட்டுத்துறையில் தொழிற் முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் இக்கழகத்தின் வருங்காலச் செலவு தோராயமாக ரூ. 1,750 இலட்சமாக இருக்கும்; இத்தொழிற்சாலைகளுக்காகும் மொத்தச் செலவு ரூ. 175 கோடி ஆகும்; இதில் தென்னிந்திய பெட்ரோலிய-இரசாயனத் தொழிற்கழகம் என்னும் நிறுவனத்திற்கு மட்டும் ரூ. 71 கோடி செலவாகும்.

தென்னக பெட்ரோலிய-இரசாயனத் தொழிற் கழகம் (ஸ்பிக்).

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் முதன் முதலாக, பெரிய அளவில் கூட்டு முயற்சியாக தென்னக பெட்ரோலிய-இரசாயனத் தொழிற் கழகத்தை (ஸ்பிக்) நிறுவியது; இது,

திரு. எம். ஏ. சிதம்பரம், அவரது குழுவினர் ஆகியவர்களின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்டதாகும். இது முடிக்கப்பெற்றதும், யூரியா, அம்மோனியா ஆகியவற்றின் தயாரிப்பில் இந்தியாவிலேயே மிகப் பெரிய நிறுவனமாக இது விளங்கும். திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள உரத் தொழிற்சாலையில் முதல கட்டமாக நாளொன்றுக்கு 1,100 டன் அம்மோனியா, 1,000 டன் யூரியா, 600 டன் டை அம்மோனியம் பாஸ்பேட், நைட்ரஜன் பாஸ்பேட், பொட்டாசியம், உரங்கள், 476 டன் கந்தக அமிலம், 175 டன் பாஸ்பரிக் அமிலம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறன் உள்ளதாயிருக்கும்.

ரூ. 74 கோடி செலவாகும் இத்திட்டம் ரூ. 19 கோடி பங்கு மூலதனம் கொண்டிருக்கும்; இதில தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பங்கு 26 சதவீதமாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 1,100 பேருக்கு வேலைவாய்ப்பும் தொழிற்சாலைக்கு அருகே துணைத் தொழிற்சாலைகள் உருவாகும் வாய்ப்பும் ஏற்படும்.

தமிழ்நாட்டின் அயல்நாட்டு வாணிகம்:

தமிழ்நாட்டு துறைமுகங்கள் மூலமாக நடைபெற்ற அயல் நாட்டு வாணிகம் குறித்து 1971--72-ஆம் ஆண்டுக்கு, அதாவது, 1971 ஏப்ரலில் இருந்து 1972 மார்ச் வரைப்பட்ட கால அளவுக்குப் புள்ளி விவரங்கள் கிடைத்துள்ளன. 1971-72 ஆம் ஆண்டில் அயல்நாடுகளிலிருந்து மொத்தம் ரூ. 2,93.66 கோடி மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேற் சொன்ன கால அளவில், முக்கியமாக, மின்சாரச் சாதனம் நீங்கலான இயந்திரச் சாதனங்கள் (ரூ. 48.89 கோடி) இரும்பு உருக்கு (ரூ. 41·32 கோடி), பெட்ரோலியப் பொருள்கள் (ரூ. 30·93 கோடி), கோதுமை (ரூ. 30·10 கோடி), மின்சார இயந்திரங்கள், கருவிகள் சாதனங்கள் (ரூ. 27·23 கோடி) போக்குவரத்துச் சாதனம் (ரூ. 18.25 கோடி), தூய, ஊக வகை பொட்டாசியம் குளோரைட் (ரூ. 7.23 கோடி), கச்சாப் பருத்தி (ரூ. 7.20 கோடி), செய்தி அச்சுத்தாள் (ரூ. 6.31 கோடி), சோயாமொச்சை எண்ணெய் (ரூ. 5·32 கோடி) ஆகியவை இறக்குமதி செய்யப்பட்டன.

மொத்தம் ரூ. 1,80·70 கோடி மதிப்புள்ள பொருள்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. முக்கியமாக, தோல், (ரூ. 67.00 கோடி), பதப்படுத்தப்பட்ட, பதப்படுத்தப் படாத புகையிலை (ரூ. 31.22 கோடி), இரும்புக் கனியும் அடர் பொருள்களும் (ரூ. 15.60 கோடி), பருத்தி இழையும் நூலும் (ரூ. 8.65 கோடி), விசை ஆலையில் தயாரான துணிகள் (ரூ. 7·26 கோடி), கைத்தறியில் தயாரான துணிகள் (ரூ. 6·86 கோடி), சந்தன எண்ணெய் (ரூ. 1.84 கோடி), மீனும், மீன்

பொருள்களும் (ரூ. 1.58 கோடி), அப்ரக கனி (சிம்பு, கழிவு உட்பட) (ரூ. 1.56 கோடி), மிளகாய் (ரூ. 1·31 கோடி) ஆகிய பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கைத்தறியும் ஆலைத் துணிகளும் :—

(அ) கைத்தறி-ஆலைத் துணிகள் துறையானது இம்மாநிலத்தில் கைத்தறி-ஆலைத் துணித் தொழில்கள் வளர்ச்சியைக் கவனித்து வருகிறது. கைத்தறி, விசைத்தறி துணைத் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்குவதும் இதன் பொறுப்பாகும். கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களின் நன்மைக்கென வகுக்கப்பட்டுள்ள கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை அனைத்தையும் இத்துறை செயல் படுத்தி வருகிறது. கைத்தறி-ஆலைத் துணிகள் துறை இயக்குநர் ஐ. ஏ. எஸ். பதவித் தரத்தில் உள்ளவர்.

இந்த அறிக்கை சம்பந்தப்பட்ட, 1—4—1972 முதல் 31—3—1973 வரையிலான கால அளவில் இத்துறை மேற்கொண்ட பல்வேறு இனப் பணிகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

(2) கைத்தறித் தொழில் தொடர்பான புள்ளி விவரம்.

(3) கைத்தறித் துணிக்குப் பரிசளிக்கும் திட்டம்.

(4) கைத்தறித் துணி ஏற்றுமதி.

(ஆ) கைத்தறி, விசைத்தறி, துணைத் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள் வழங்கல்.

(1) செயற்கைப் பட்டு இழை.

(2) சாயங்களும் இரசாயனங்களும்.

(3) துணி ஆலைத் தொழில்.

(4) பருத்திக் கட்டுப்பாடு.

(5) பரவலாக்கப்பட்ட விசைத்தறிகள்.

(6) விசை ஆலையில் தயாரான துணிகள் மீதான சட்டப்பூர்வக் கட்டுப்பாடு.

(இ) கூட்டுறவு நூற்பாலைகள்.

(1) கைத்தறித் தொழில் :—கைத்தறித் தொழில்தான் தமிழ்நாட்டு குடிசைத் தொழில்களிலேயே மிகப் பெரியதும் முக்கியமானதும் ஆகும். இத்தொழில் சுமார் இருபது இலட்சம் பேருக்கு வாழ்வளிக்கிறது. இத் தொழில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; நமது கைத்தறித் துணிகளுக்கு அயல் நாடுகளில் மகத்தான வரவேற்பு உள்ளது. இம்மாநிலத்தில் 5·56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இந்த எண்ணிக்கையானது இந்நாட்டிலுள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கையில் இருபது சதவீதத்திற்கும் சற்று அதுகமானதாகும். 31—3—1973 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 1·63 இலட்சம் தறிகள் கொண்ட 711 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன; இந்த எண்ணிக்கையானது, இம்மாநிலத்திலுள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கையில் 30 சதவீதம் ஆகும்.

கதர்-கிராமத் தொழில்கள்.

இம்மாநிலத்தில் கதர்—கிராமத் தொழில்கள் திட்டத்தை, துறைப் பிரிவுகள், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் செயற்படுத்தும் பொறுப்பை தமிழ் நாடு கதர்— கிராமத் தொழில்கள் வாரியம் மேற்கொண்டுள்ளது. நூல் நூற்பதில் புதிய மாதிரி டெக்ஸ்டூல் சர்க்காக்களையும் கைக்குத்தல அரிசி தயாரிப்பிலும் எண்ணெய் ஆடும் தொழிலும் விசை இயந்திரங்களை அறிமுகப்படுத்தியது அண்மைக் காலச் சாதனைகளாகும்.

இவ்வாண்டில், 22 தலைமை நிலையங்கள், 124 துணை நிலையங்கள், 108 கிராமத் துணி நிலையங்கள், 170 கதர் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் இவ்வாரியத்தின் கதர் திட்டம் செயற்படுத்தப்பட்டது. 1972--73-ஆம் ஆண்டில், இத்துறை, 52,74,000 மெட்ரிக் சிட்டங்கள் கிஸான் வகை நூல் 132,96,000 அம்பர், டெக்ஸ்டூல் மெட்ரிக் சிட்டங்களையும் தயாரித்துள்ளது.

இவ்வாறு தயாரான நூலிழையைக் கொண்டு, இத்துறை, ரூ. 1,15,62,000 மதிப்புள்ள 26,52,000 மீட்டர் பருத்திக் கதர் துணிகளைத் தயாரித்துள்ளது. அத்துடன் ரூ. 75,31,000 மதிப்புள்ள 1,92,000 மீட்டர் பட்டு ரகங்களும் தயாரிக்கப்பட்டன.

இம்மாநிலம் முழுவதுமுள்ள 179 கதர் விற்பனைக் கிடங்குகளும் 3 விற்பனைப் பெரு நிலையங்களும் மொத்தம் ரூ. 2,78,49,000 பெறுமானமுள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளன.

கிராமத் தொழில்கள் :—இம்மாநிலத்திலுள்ள கிராமப்பகுதிகளைச் சேர்ந்த போதிய வேலையற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பற்றவர்களுக்கும் வேளாண்மை அல்லாத துறைகளில் வேலை

வாய்ப்பு அளிக்கும் வகையில் கிராமத் தொழில்கள் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

துறை மூலமாகவும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் கிராமத் தொழில்கள் திட்டத்தை இவ்வாரியம் செயற்படுத்தி வருகிறது.

இவ்வாண்டில் கிராமத் தொழில்கள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி விற்பனைக் கணக்கு விவரம் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) விற்பனை .. .. .. .. | 842·33 |
| (2) விற்பனை .. .. .. .. | 959·40 |

கொதிகலன்கள் :—

இம்மாநிலத்தில் "1923ஆம் ஆண்டு இந்தியக் கொதிகலன்கள் சட்டத்தைச் (சட்டம் 5/1923)" செயற்படுத்தும் பொறுப்பை சென்னை, நீராவிக் கொதிகலன்கள் தலைமை ஆய்வாளர் நிறைவேற்றிவருகிறார். நீராவிக் கொதிகலன் ஆய்வாளர்கள் ஆறு பேர் அவருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர். இவ்வறிக்கை ஆண்டில், தமிழ்நாட்டின் செயல்திறப் பட்டியலில் 1,560 கொதிகலன்களும் வெப்பம்—எரிபொருள் மிச்சப்படுத்தும் இயந்திரங்களும் இடம் பெற்றிருந்தன. இவற்றில், வெப்பம்—எரிபொருள் மிச்சப்படுத்தும் இயந்திரங்கள் உட்பட, 1,480 கொதிகலன்கள் மனநிறைவளிக்கும் நிலைமையில் இருந்தமையால் அவற்றைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. எஞ்சிய கொதிகலன்களும் வெப்பம்—எரிபொருள் மிச்சப்படுத்தும் இயந்திரங்களும் சீரான நிலையில் இராமையால், அவற்றைபயன்படுத்துவது தடை செய்யப்பட்டு அவை பழுதுபார்க்கப்பட அனுப்பப்பட்டன. எனினும் இக் கொதிகலன்கள் பின்னர் ஆய்வு செய்யப்பட்டு அவசியமான பழுது பார்க்கப்பட்டுப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டன.

இவ்வாண்டில் 1923ஆம் ஆண்டு 5-வது சட்டமாகிய இந்தியக் கொதிகலன்கள் சட்டத்தைச் சேர்ந்த 7-வது பிரிவின்கீழ் புதிதாக மொத்தம் 27 கொதிகலன்களும் வெப்பம்—எரிபொருள் மிச்சப்படுத்தும் இயந்திரங்களும் பதிவு செய்யப்பட்டன.

இவ்வாண்டில் புகைக் குழாய் வரிப்பட்டை உப்பியது தவிர, உயிருக்கோ உடமைக்கோ தீங்கு விளையும் அளவுக்குக் கொதிகலன் அல்லது வெப்பம்—எரிபொருள் மிச்சப்படுத்தும் இயந்திரத்திற்கு விபத்து ஏதும் ஏற்படவில்லை.

மலைத் தோட்டங்களில் வேலைவாய்ப்பும் தொழிலாளர்களின் வருமானமும் குறித்த ஆய்வு.—

1961ஆம் ஆண்டு மலைத்தோட்டங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தேயிலை, காப்பி, ரப்பர், சின்கோனு, மலைத் தோட்டங்களைப் பொறுத்த வரையில் தொழிலாளர் வருகைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை, வேலை நடைபெற்ற உழைப்பு நாட்கள், வேலை நடைபெருத உழைப்பு நாட்கள், நாள்தோறும் வேலைக்கு வருவோரின் சராசரிப் பட்டியல், வேலை செய்த மணி நேரங்களின் மொத்த எண்ணிக்கை, தொழிலாளர்களின் ஊதியம், இயல்பான வேலை மணி நேரம் ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்கள் குறிப்பிட்ட படிவத்தில் ஒவ்வோராண்டும் மார்ச் 31, ஜூன் 30, செப்டம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய நாட்களில் முடிவடையும் நான்கு காலாண்டுகளுக்கு, பிறர் தூண்டுதலின்றி வரப் பெறுகின்றன. இம் மலைத் தோட்டங்கள் நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம் மாவட்டங்களில் உள்ளன.

இந்த ஏற்பாட்டின்கீழ் வரும் மலைத் தோட்டங்கள்.—

1972ஆம் ஆண்டிற்கு, 135 தேயிலைத் தோட்டங்கள், 140 காப்பித் தோட்டங்கள், 27 ரப்பர் தோட்டங்கள், 5 சின்கோனு தோட்டங்கள் ஆக மொத்தம் 307 மலைத் தோட்டங்களின் விவரக் கணக்குகள் வரவேண்டி இருந்தன. இந்த எண்ணிக்கை, 1971ஆம் ஆண்டில் மேற்சொன்ன ஏற்பாட்டின்கீழ் வரப்பெற்ற எண்ணிக்கையாகிய 296-உடன் ஒப்பிடும்போது 1972-ல் 4 சதவீதம் உயர்ந்துள்ளது. 1971, 1972 ஆகிய இரண்டாண்டுகளில் இம் மாநிலத்தில் பரவிக்கிடக்கும் மலைத் தோட்டங்களின் விவரம் மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| மாவட்டம். | தேயிலை. 1971–72. | | காப்பி. 1971–72. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | |
| 1. நீலகிரி .. .. | 89 | 89 | 34 | 35 |
| 2. கோயம்புத்தூர் .. .. | 34 | 34 | 6 | 6 |
| 3. மதுரை .. .. .. | 4 | 4 | 30 | 34 |
| 4. திருநெல்வேலி .. .. | 2 | 2 | 2 | 2 |
| 5. கன்னியாகுமரி .. .. | 6 | 6 | .. | .. |
| 6. சேலம் .. .. .. | .. | .. | 64 | 63 |
| மொத்தம் .. | 135 | 135 | 136 | 140 |

| மாவட்டம். | ரப்பர். 1971–72. (4) | | சின்கோனு. 1971–72. (5) | |
|---|---|---|---|---|
| 1. நீலகிரி .. .. .. | 1 | 1 | 1 | 3 |
| 2. கோயம்புத்தூர் .. .. | .. | .. | 1 | 2 |
| 3. மதுரை .. .. .. | 1 | 1 | .. | .. |
| 4. திருநெல்வேலி .. .. | .. | .. | .. | .. |
| 5. கன்னியாகுமரி .. .. | 23 | 25 | .. | .. |
| 6. சேலம் .. .. .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 25 | 27 | 2 | 5 |

1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.—

1—4—1972 முதல் 31—3—1973 வரையிலான கால அளவில், தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்த சமரச அதிகாரி 1,251 தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்தார்; தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின்கீழ் உடன்பாடுகளைச் செயற்படுத்தினர்; 518 தொழில் தகராறுகள் சென்னை, தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கும் கோயம்புத்தூர், சென்னை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்களின் தீர்ப்புக்கும் விடப்பட்டன.

வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.—

444 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இந்த வேலை நிறுத்தங்களினால் 155,812 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, 2,577,073 உழைப்பு நாட்கள் வீணாயின. ஊதியக்கொடை, ஊதிய உயர்வு அகவிலைப்படி உயர்வு, தொழிலாளர்களுக்கு வேலையின்மை, ஊதியக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தாமை முதலியவை தொடர்பான கோரிக்கைகளுக்காக இந்த வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

வழக்குகள்.—

தீர்ப்புகளையும் உடன்பாடுகளையும் செயல்படுத்தாமைக்காகத் தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 29ஆவது பிரிவின் கீழ் வழக்குகள் தொடர இவ்வாண்டு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை.

1923ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடுச் சட்டம். 1—4—1972 நிலவரப்படி 565 வழக்குகள் முடிவடையாமல் இருந்தன. அறிக்கைக்கால அளவில் 988 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த 1,553 வழக்குகளில், இக்கால அளவில் 1,033 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன.

1936ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.—இவ்வாண்டில் இந்நிறுவனங்களில் பணியாற்றும் 6,84,736 தொழிலாளர்கள் இச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர்.

1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டம்—இவ்வாண்டு தொடக்கத்தில், அதாவது, 1—4—1972 நிலவரப்படி, 85,732 தொழிலாளர்களைக் கொண்ட 323 மலைத் தோட்டங்கள் இருந்தன. இக்கால அளவில் 19 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 2 மலைத் தோட்டங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன. 31—3—1973ல் முடிவடையும் கால அளவில், 86,643 தொழிலாளர்கள் பணியாற்றும் 340 மலைத் தோட்டங்கள் இச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டன. 1—4—1972 முதல் 31—3—1973 வரையிலான கால அளவில் மலைத் தோட்ட ஆய்வாளர்கள் 531 வழக்கமான சோதனைகளையும் 168 சிறப்பு சோதனைகளையும் 132 ஞாயிற்றுக் கிழமை சோதனைகளையும் 32 திடீர்ச் சோதனைகளையும் மேற் கொண்டனர்.

தேசிய வேலை வாய்ப்பு பணி—

இவ்வாண்டு சென்னையில் ஒன்று, அண்ணாமலை நகரில் ஒன்று மதுரையில் ஒன்று ஆக மூன்று பல்கலைக்கழகம் வேலைவாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகங்கள், உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று, தொழில் நிர்வாக வாய்ப்பு அலுவலகம் ஒன்று, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, அம்பத்தூர், மண்டபம் முகாம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக ஆறு துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உட்பட தமிழ்நாட்டில் 27 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தொடர்ந்து பணியாற்றி வந்தன. அம்பத்தூரி லுள்ள துணை-வேலைவாய்ப்பு அலுவலகம் 17—4—1972 முதற் கொண்டு செயல்படத் தொடங்கியது. அத்துடன் முந்திய திட்டக்காலங்களில் செயற்படுத்தப்பட்டு வந்த வேலைவாய்ப்பு காலி இடங்கள் குறித்து தகவல் சேகரித்தல், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி, வேலைவாய்ப்பு ஆலோசனை கூறல், தொழில்வகை ஆராய்ச்சி—பகுப்பாய்வு மேற்கொள்ளல் ஆகிய பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

கைத்திறப் பணியாளர்கள் பயிற்சித் திட்டம்.— ஐந்தாண்டுத் திட்டப்பணிகளின்கீழ், இம்மாநிலத்தில், கீழ்க்காணும் பயிற்சித் திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றன :—

(1) தொழிற் பயிற்சிப் பள்ளிகள்.

(2) மாநில இயக்குநர் அலுவலகத்தில் அதிகப்படியான பணியாளர்களை நியமித்தல்.

(3) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு மாலை வகுப்புகள் நடத்துதல்.

(4) தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம் (1961ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டம்).

(5) தொழில்களைப் பல்திறப்படுத்துதல்.

# அத்தியாயம் 17

## ஊராட்சி—உள்ளாட்சி நிர்வாகம்.

ஊராட்சி :—

தமிழ்நாட்டில், ஊராட்சி நிர்வாகம் மூன்று நிலைகளில் அதாவது மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், வட்டார அளவில் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், கிராம அளவில் ஊராட்சி மன்றம் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. கீழ்க் காணும் மாவட்டங்களில் இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இரண்டு உள்ளன;

(1) வட ஆற்காடு, (2) தென் ஆற்காடு, (3) கோயம் புத்தூர், (4) செங்கற்பட்டு, (5) மதுரை, (6) இராமநாத புரம், (7) சேலம், (8) திருச்சிராப்பள்ளி, (9) தஞ்சாவூர், (10) திருநெல்வேலி.

கீழ்க்காணும் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒன்று மட்டுமே செயல் பட்டுவருகிறது—

(1) தருமபுரி, (2) கன்னியாகுமரி. (3) நீலகிரி.

இவ்வாண்டில் 374 ஊராட்சி ஒன்றியங்களில், 600 பேரு ராட்சிகளும், 12,642 ஊராட்சிகளும், 12 நகரியங்களும் இருந்தன.

### ஊராட்சி ஒன்றியங்கள்—வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீனளம்.

தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத் தைச் சேர்ந்த 65 ஆவது பிரிவின்படி, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் உட்பட்டபகுதியில் வேளாண்மை வளர்ச்சிப் பொறுப்பு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தாகும்.

1972–73 ஆம் ஆண்டில், இம் மாநிலத்திலுள்ள ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் வேளாண்மைக்கென ரூ. 22,667 வழங் கப்பட்டது. கால்நடை வளர்ப்புத் திட்டத்துக்கென ரூ. 6.200 மானியமாக தனியே ஒதுக்கப்பட்டது; இணைமானிய பங்குத் தொகையாக ரூ. 3,000 வழங்கப்பட்டது. மீனளத் திட்டத்திற் கென ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## ஊராட்சி ஒன்றியங்களும் தொடக்கக் கல்வியும்.

1972–73 ஆம் ஆண்டில் தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்களின் செலவில் பெரும் பகுதியை, அதாவது, ரூ. 32 கோடியை மானியங்கள் வடிவில் இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. எஞ்சிய ரூ. 5·70 கோடியை ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய நிதிவாயில்களைக்கொண்டு திரட்டின.

## பள்ளிக் கட்டிடங்கள்.

21,900 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 14,930 பள்ளிகள் தங்கள் சொந்தக் கட்டிடங்களிலேயே இயங்கிவந்தன. ஆண்டு தோறும் சுமார் 900 முதல் 1,000 வரை பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## கிராமியக் கலைகள், கைத்திறப் பொருட்கள்—தொழில்கள் திட்டம்.

இத் திட்டத்தின்கீழ் தற்போது 322 பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளின் செயல்முறை, இதற்கென்றே மாவட்ட வளர்ச்சி அதிகாரியைத் தலைவராகக் கொண்ட மாவட்ட நிலை தனி ஆலோசனைக் குழுக்களினால் ஆய்வு செய்யப்படுகிறது.

மேற்காணும் திட்டங்கள் குறித்த செலவு, உற்பத்தி விற்பனை மதிப்பு ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கால அளவு. | செலவு. | உற்பத்தி மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | விற்பனை மதிப்பு. |
|---|---|---|---|
| 1—4—1972 முதல் 31—3—1973 வரை. | 13·34 | 49·93 | 86·85 |

31—3—1973 நிலவரப்படி, மொத்தம் 13,224 ஊராட்சிகளில் மொத்தம் 33,729 வானொலிப் பெட்டிகள் இருந்தன.

கிராமத் தொழில்கள் திட்டப்பணி.— இது கீழ்க்காணும் பகுதிகளில் செயற்படுத்தப்படுகிறது.

(1) செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் வட்டங்கள், பென்னலூர்ப் பேட்டை துணை வட்டம்.

(2) சேலம் மாவட்டத்தில் ஓமலூர், மேட்டூர் வட்டங்கள்.

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி வட்டம்.

இவ்வாண்டில், இந்திய அரசு ரூ. 8·26 இலட்சத்தை மானியமாகவும் ரூ. 8·25 இலட்சத்தைக் கடனாகவும் வழங்கியுள்ளது.

கிராமப்புற ஆட்படை ஊற்றத் திட்டம்.

இம் மாநிலத்தில் மொத்தமுள்ள 374 வட்டாரங்களிலே 72 வட்டாரங்களில் இத் திட்டம் செயலில் உள்ளது. 1972–73 ஆம் ஆண்டில் ஆறு வட்டாரங்கள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக வேறு ஆறு வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் ரூ. 49·75 இலட்சம் செலவாயிற்று.

சிரணிப் படை.

தமிழ்நாட்டில் தற்போது 44,524 தொண்டர்கள் உள்ளனர். சிரணிப்படைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென இவ்வாண்டில் ரூ. 12,37,800 செலவிடப்பட்டது.

1972–73ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றி முடிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பணி இனங்கள். | செய்து முடித்த பணிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் .. .. | 170 |
| 2. அரிசனக் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலைகள். | 216 |
| 3. கால்வாய்கள், ஏரிகள் ஆகியவற்றில் தூர் வாருதலும் அவற்றை ஆழப்படுத்தலும். | 205 |
| 4. திறந்தவெளி அரங்குகள் .. .. .. | 68 |
| 5. வானொலி அறைகள், நூலக அறைகள், மனமகிழ் மன்றங்கள். | 441 |
| 6. சமுதாயக் கூடமும், விளையாட்டு அரங்குகளும். | 53 |
| 7. கதிரடி களம், குடிநீர், நிலத்தடி நீர்த் தேக்கங்கள். | 12 |
| 8. பள்ளிக்கூடங்களுக்கு வெள்ளை அடித்தல், காய்கறித் தோட்டங்கள் முதலிய பிற பணிகள். | 102 |
| மொத்தம் .. | 1,267 |

பயிற்சித் திட்டம்.

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் இடங்களில் நான்கு கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையங்களும் ஒரு மாநில சமுதாய வளர்ச்சி நிறுவனமும் உள்ளன :—

1. கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையம், எஸ். வி. நகரம், வட ஆற்காடு மாவட்டம்.
2. கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையம், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்.
3. கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
4. கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையம், தி. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.
5. மாநில சமுதாய வளர்ச்சி நிறுவனம், பவானிசாகர், கோயம்புத்தூர் மாவட்டம்.

பவானிசாகரில் கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையம் ஒன்று இருந்தது. இளைஞர் அணிப் பயிற்சி நடத்துவதற்காக 1–6–72 அன்று இது சமுதாய நலத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும், கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட வகுப்புகள் பவானிசாகரிலுள்ள மாநில சமுதாய வளர்ச்சி நிறுவனத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது மொத்தம் ஐந்து பயிற்சி நிலையங்கள் உள்ளன.

சமுதாய நல வளர்ச்சித் திட்டம்.

1973 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாளோடு முடிவடைந்த ஆண்டில், இம் மாநிலத்தில் IIஆம் நிலை வளர்ச்சி வட்டாரங்கள் 88-ம் IIஆம் நிலைக்கு மேற்பட்ட வளர்ச்சி வட்டாரங்கள் 286-ம் இருந்தன. 323 இலட்சம் மக்கள் தொகையும் 1,26.610 சதுர கிலோமீட்டர் பரப்பும் கொண்ட இந்த வட்டாரங்கள் 17,043 கிராமங்களைக் கொண்டு அமைந்துள்ளன. இம் மாநிலம் 375 வளர்ச்சி வட்டாரங்களாக எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் வட்டாரத்தில் சமுதாய நல வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டதின் விளைவாக, இம் மாநிலத்தில் 374 வளர்ச்சி வட்டாரங்களே இருந்தன. இந்த வளர்ச்சி வட்டாரங்களில் தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயல் படுத்தப்பட்டுள்ளது ; இதன் காரணமாக ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் வளர்ச்சி வட்டாரம் பரந்துள்ள அளவுக்கு ஆட்சியெல்லை பரந்துள்ள ஊராட்சி ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை.

இந்த வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள உழவர்களுக்கு 13,697 மெட்ரிக் டன் தரம்மேம்படுத்தப்பட்ட நெல் விதைகளும், 3,061 மெட்ரிக் டன் புன்செய் தினை விதைகளும் வழங்கப்பட்டன. சுமார் 57,820 மெட்ரிக் டன் அம்மோனியம் சல்பேட்டும், சுமார் 3,34,000 மெட்ரிக் டன் அளவுள்ள ஏனைய இரசாயன உரங்களும் வழங்கப்பட்டன.

மீனளம்.

24 இலட்சம் மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

கால்நடை வளர்ப்பு.

இந்த ஆண்டில், 120,553 வெளிநாட்டுப் பறவைகள் (கோழிகள்) வழங்கப்பட்டன. 6,85,000 எருதுகளுக்குக் காயடிக்கப்பட்டது. 77·91 இலட்சம் கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசியும் அம்மைப்பாலும் குத்தப்பட்டன.

சமூகக் கல்வி.

இந்த ஆண்டில் 38,600 முதியோர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கப்பட்டது.

கூட்டுறவு.—இந்த ஆண்டின் இறுதியில் 10,600 சங்கங்கள் செயல்பட்டன.

செயல்முறைச் சத்துணவுத் திட்டம்.—1971–72-ல் 16 வளர்ச்சி வட்டாரங்கள் மட்டும் இத் திட்டம் செயலில் இருந்ததற்கு மாறாக, இவ்வாண்டு இம்மாநிலத்தில் 22 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் செயலில் இருந்தது.

உள்ளாட்சி.—இந்த ஆண்டின் தொடக்கத்தில் இம் மாநிலத்தில் 89 நகராட்சிகளும் 8 நகரியங்களும் இருந்தன. இந்த ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சீர்காழி பேரூராட்சியும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொன்மலை பேரூராட்சியும் 1972 அக்டோபர் 1-ஆம் நாளிலிருந்து நகராட்சிகளாக அமைக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 91 நகராட்சிகளும் 8 நகரியங்களும் இருந்தன.

சென்னை மாநகராட்சி.—இந்த ஆண்டில் இம் மாநகராட்சி மன்றத்தில் (1) 1972 ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் மே 5 ஆம் நாள் வரை உள்ள கால அளவில் 119 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்ட 11 உறுப்பினர்களும் இருந்தனர். (2) 1972 மே 6-ம் நாள் முதல் டிசம்பர் 16-ம் நாள் வரை உள்ள கால அளவில் 120 தேர்ந்

தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்ட 11 உறுப்பினர்களும் இருந்தனர். (3) 1972 டிசம்பர் 17 ஆம் நாள் முதல் 1973 மார்ச்சு 31 ஆம் நாள் வரை உள்ள கால அளவில் 119 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், சேர்த்துக் கொள்ளப்பட்ட 11 உறுப்பினர்களும் இருந்தனர்.

இந்த ஆண்டில், மாநகராட்சி மன்றம், 12 சாதாரணக் கூட்டங்களையும், ஒத்தி வைக்கப்பட்ட 30 கூட்டங்களையும், 17 சிறப்புக் கூட்டங்களையும் ஒரு அவசர கூட்டத்தையும் நடத்தியது. இம்மன்றம் தன் முன் வைக்கப்பட்ட 1,430 பிரச்சினைகளில் 1,254 பிரச்சினைகள் குறித்து முடிவு எடுத்தது.

நிதி.— சொத்து வரிதான் மாநகராட்சிக்கு முக்கிய வருவாய் இனமாகத் தொடர்ந்து இருந்தது. இவ்வாண்டில் " சொத்து வரி " இனத்தின் கீழ் மொத்தம் ரூ. 6,69,63,195 வசூலானது; கடந்த ஆண்டு இத்தொகை ரூ. 6,62,58,319 ஆக இருந்தது. இவ்வாண்டு ரூ. 7,04,876 அதிகமாக வசூலாகி உள்ளது. விளம்பர வரி, கேளிக்கை வரி மற்றும் கேளிக்கை வரி, காட்சி வரி ஆகியவற்றின் மீதான மேல்வரி, சொத்து மாற்றங்கள் மீதான தீர்வை ஆகியவகையிலும் வசூல் உயர்ந்தது.

இவ்வாண்டுத் தொடக்கத்தில், தொகுப்பு இருப்பாக ரூ. 829·45 இலட்சம் இருந்தது. வரி, மூலதனம், வைப்பீடு, தொடக்கக் கல்வி நிதி ஆகிய எல்லா வகைக் கணக்குகளின் கீழும் ரூ. 3,369·86 இலட்சம் வருவாய் கிட்டியது : எல்லா வகைக் கணக்குகளின் கீழும் ரூ 3,182·14 இலட்சம் செலவாயிற்று. எல்லா வகைக் கணக்குகளின் கீழும் இறுதி இருப்பு ரூ. 1,017·17 இலட்சம் இருந்தது.

இந்த ஆண்டில், ரூ. 106·24 இலட்சத்திற்குக் கடனும், ரூ. 95·90 இலட்சம் அளவுக்கு மானியங்களையும் அரசு வழங்கியது. பொது மக்களிடமிருந்து ரூ 749·12 இலட்சம் அளவிற்கு கடனையும் இம்மாநகராட்சி திரட்டியது.

மதுரை மாநகராட்சி.

1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் 1–5·1971-ல் அமைக்கப்பட்ட மதுரை மாநகராட்சி மன்றத்தில் 48 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்ட மூன்று உறுப்பினர்களும் இருந்தனர்.

இந்த ஆண்டில் இம்மன்றம் 14 சாதாரணக் கூட்டங்களையும், அவசரக் கூட்டங்களையும் கூட்டியது. மேற் சொன்ன கூட்டங்களில் இம்மன்றம் 1,153 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது. மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களில், கணக்குக் குழு ஐந்து முறை கூடி

33 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது. கல்விக்குழு ஆறு முறை கூடி 58 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது ; வரி விதிப்பு நிதிக்குழு 11 முறை கூடி 324 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது ; நகர அமைப்பு — மேம்பாட்டுக் குழு 14 முறை கூடி 983 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது; பணிக் குழு 11 முறை கூடி 302 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது ; நியமனக் குழு மூன்று முறை கூடி 421 பொருள்கள் குறித்து முடிவு எடுத்தது.

வரவும், செலவும்.—

வருவாய், வைப்பீட்டுத் தொகை, மூலதனக் கணக்கு, தொடக்கக் கல்வி நிதி முதலிய எல்லா வகைக் கணக்குகளின் கீழ் ரூ. 273·23 இலட்சம் வருவாய் கிடைத்தது ; எல்லா வகைக் கணக்குகளின் கீழ் ரூ. 233·71 இலட்சம் செலவாகியது

இந்த ஆண்டில், நகர அமைப்புத் திட்டப் பணி, வடிகால்—குடிநீர் திட்டங்களை நிறைவேற்ற மதுரை மாநகராட்சிக்கு அரசு ரூ. 24·53 இலட்சம் கடன் அளித்தது.

தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம்.

ஒன்பது குடிநீர் வழங்கு திட்டங்களுக்கும் (புதிய திட்டங்கள், மேம்பாட்டுப் பணித் திட்டங்கள்) புதிய சாக்கடைத் திட்டங்களுக்கும் இந்த ஆய்வாண்டில் அரசு நிர்வாக அனுமதி வழங்கியது; 37 குடிநீர் வழங்கு திட்டங்களுக்கும், இரண்டு சாக்கடைத் திட்டங்களுக்குமான விரிவான வரை படங்களுக்கும், மதிப்பீடுகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் படிப்படியாக தொழில் நுட்ப அனுமதி வழங்கினர். 104 குடிநீர் வழங்கு திட்டங்கள், 12 வடிகால் திட்டங்கள் (புதிய, மேம்பாடுத் திட்டங்கள்) நிறைவேற்றப்பட்டு வந்தன. 121 குடிநீர் வழங்கு திட்டங்கள், 28 சாக்கடை திட்டங்கள் ஆகியவற்றிற்கான ஆய்வு நடந்தேறி வந்தது. 49 குடிநீர் வழங்கு திட்டங்கள், 7 சாக்கடைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான விரிவான மதிப்பீடுகளும் வரைப்படங்களும் தயாரிக்கப்பட்டு வந்தன.

1972–73 இறுதியில் (ஆய்வாண்டில்) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காம் ஆண்டில், சென்னை, மதுரை மாநகராட்சிகளிலும், 99 நகராட்சிகளில் 80 நகராட்சிகளிலும், 13 நகரியங்களில் 8 நகரியங்களிலும், 626 பேரூராட்சிகளில் 62 பேரூராட்சிகளிலும் குடிநீர் வழங்குதிட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. சென்னை, மதுரை மாநகராட்சிகளிலும், 5 நகராட்சிகளிலும் (மொத்தம் 93 நகராட்சிகள்), 2 நகரியங்களிலும்

(மொத்தம் 13 நகரியங்கள்) ஒரு பேரூராட்சியிலும் (மொத்தம் 626 பேரூராட்சிகள்) சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வந்தன. குடிநீர் வழங்கு திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்களினால் முறையே 50 இலட்சம், 9·5 இலட்சம் நகர்புற மக்கள் பயனடைந்தனர்.

தூத்துக்குடி தொழிற்சாலைத் தொகுதிக்கான (90 திட்டம்) குடிநீர் வழங்கு திட்டத்தை ரூ. 470 இலட்சம் செலவில் நிறை வேற்றும் பணியும் தமிழ்நாடு குடிநீர் வழங்குவடிகால் வாரி யத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

நகர்ப்புற குடிநீர் வழங்கு—வடிகால் திட்டங்களின் கீழ் 1972–73 நிதியாண்டில் ரூ. 6·85 கோடி செலவிடப்பட்டது.

இந்த ஆண்டில், 11 குடிநீர் வழங்கு திட்டங்கள் (7 புதிய திட்டங்கள், 4 மேம்பாட்டுத் திட்டங்கள்) பயனுக்குக் கொண்டு வரப்பட்டன.

உள்ளாட்சி நிதித் தணிக்கை.

உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆய்வாளர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தலைவராவார். அறக் கட்டளைகளின் பொருளாளரும் அவரே. அறக் கட்டளைகளின் பொருளாளர் என்ற முறையில் இவர் 6,436 மத்திய அரசு, மாநில அரசைச் சேர்ந்த அறக்கட்டளைகளை நிர்வகிக்கிறார். இவற்றின் மொத்த மதிப்பு ஒரு கோடிக்கு மேற்பட்டதாகும்.

இந்த ஆண்டில் 2,912 நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. இவற்றின் பணப் புழக்கம் மொத்தம் ரூ. 309·15 கோடியாகும். 11,68,630 ரூபாய் மேல்வரி வசூலிக் காதவை ஈடு செய்யக் கோரி பல்வேறு உள்ளூர் சட்டங்களின் அபராத விதித்துறைகளின்கீழ் உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாக அலுவலர்களுக்குக்கெதிராக 1,118 அறிக்கைகள் பிறப்பிக்கப் பட்டன.

அரசு வாணிபத் திட்டங்களின் தணிக்கை.

இத்துறை ஏறத்தாழ 1,367 நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்கிறது. இவற்றில், 617 நிறுவனங்களின் கணக்கு கள் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. 13 நிறுவனங்களின் கணக்குகள் ஆறு மாதத்திற்கொரு முறை தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. 737 நிறுவனங்களின் கணக்குகள் மூன்று மாதத்திற்கொரு முறை தணிக்கை

செய்யப்படுகின்றன. 1971–72 ஆம் ஆண்டுக்குரிய 2,948 காலாண்டு தணிக்கை அறிக்கையில் 2,754 காலாண்டு அறிக்கைகளும் 26 அரையாண்டு தணிக்கை அறிக்கைகளில் 26 அறிக்கைகளும், 617 ஆண்டுத் தணிக்கை அறிக்கைகளில் 559 ஆண்டுத் தணிக்கை அறிக்கைகளும் முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, 800 நிறுவனங்களின் 1972–73 ஆம் ஆண்டுக்குரிய சணக்குத் தணிக்கையும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 1972–73 ஆம் ஆண்டின் முதல் பாதி வரை வைத்து வரும் இரசாயன உரக் கணக்குகளின் தணிக்கையும் முடிவடைந்துள்ளன.

இந்த ஆண்டில், இருப்பு சரிபார்க்கும் நிறுவனம் 216 அரசு நிறுவனங்களிலும், 10 நகராட்சி மன்றங்களிலும் இருப்பு சரி பார்க்கும் பணியை மேற்கொண்டது ; அவ்வாறு சரி பார்க்கப் பட்ட இருப்புகளின் மதிப்பு முறையே ரூ. 5,90,62,000, ரூ. 4,83,50,000 ஆகும்.

இந்த ஆண்டில் இந்த நிறுவனம் அரசு நிறுவனங்களில் நடத்திய சரிபார்த்தல பணியில், 5,269 இனங்களில் ரூ. 14·27 இலட்சம் மதிப்பு பற்றுக்குறையும், 1486 இனங்களில் ரூ. 1·00 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் அதிகப்படியாகவும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

நகராட்சிகளில் இந்த நிறுவனம் நடத்திய சரிபார்த்தல்பணியில் 3,484 இனங்களில் ரூ. 1·19 இலட்சம் மதிப்பு பற்றுக் குறையும், மதிப்புள்ள இனங்கள் 1,033 இனங்களில் ரூ. 0·45 இலட்சம் மதிப் புள்ள பொருள்கள் அதிகப்படியாகவும் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

# அத்தியாயம் 18.

## சமூக நலப் பணிகள்.

**மகளிர் நலன்.**

மைய சமூகநலக் குழு, சென்னை, மாநிலச் சமூக நலக் குழுவின் மூலமாக பல்வேறு வகைத் தொண்டு நிறுவனங்களுக்கு 1972–73ஆம் ஆண்டுக்கான மானியங்களுக்கு அனுமதி வழங்கியது. விவரம் பின்வருமாறு :—

| தொடர் எண். | மானியத்தின் வகை. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அனுமதி வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ஆண்டு மானியம் | 172 | 1,63,000 |
| 2 | மகளிர் மன்றங்கள் | 17 | 65,000 |
| 3 | நகர்ப்புற முன்னோடித் திட்டங்கள். | 2 | 13,800 |
| 4 | விடுமுறை முகாம்கள் | 11 முகாம்கள். | 30,000 |
| 5 | குறுகிய காலப் பாடமுறை | 2 | 70,000 |
| 6 | பணிபுரியும் மகளிர் இல்லங்கள். | 6 | 13,700 |
| 7 | திட்டக்கால மானியம் | 63 | 2,11,580 |
| 8 | குடும்ப, சிறுர்நலத் திட்டங்கள். | 4 | 2,64,600 |
| 9 | அன்பு இல்லம் | 1 | 24,000 |
| 10 | சத்துணவுத் திட்டம் | 137 | 2,26,000 |

மூன்ருவது திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட சமூக பொருளாதாரப் பிரிவுகள் வழக்கமாகச் செயல்பட்டு வந்தன.

**அரிசன நலன் :**

மாவட்ட அளவில் அரிசனங்கள், பழங்குடியினர் குற்றப் பட்டியலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பாவார்கள். இவர்களுக்கு மாவட்ட நல அதிகாரிகள் உதவி புரிகிறார்கள்.

**வீட்டு மனை வழங்குதல் :**

வீட்டுமனை இல்லாத ஏழை அரிசனங்களுக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. 2,911 வீட்டு மனைகள் வழங்கு வதற்காக இந்த ஆண்டில் 365·11 ஏக்கர்கள் நிலம் கையகப் படுத்தப்பட்டது. 21,377 வீட்டு மனைகள் கொண்ட 1,179·12 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டது.

**அரிசன நலப் பள்ளிகள் :**

இம்மாநிலத்தில் அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோரின் பயனுக்காக இந்த ஆண்டில் 839 அரிசன நலப் பள்ளிகள் செயல் பட்டன. இந்தப் பள்ளிகள் அனைத்திலும் 1,22,147 மாணவர்கள் பயின்றனர்.

| | |
|---|---|
| அரிசன நலப் பள்ளிகள் | 839 |
| தொடக்கப் பள்ளிகள் | 740 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 88 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 11 |
| | 839 |

**பழங்குடியினரின் நலனுக்கான பள்ளிகள் :**

பழங்குடியினரின் நலனுக்காக 74 அரசுப் பள்ளிகள் இருந்தன. அவை பின்வருமாறு :—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தங்கிப் பயிலுவோர் | 72 | 4,380 |
| வெளியிலிருந்து பயிலுவோர் | 2 | 85 |
| | 74 | 4,465 |

கல்வி. (1) மாநில அரசுப் படிப்புதவித் தொகை :

இந்த ஆண்டில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகையினுல் பயனடைந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை இனம் வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு—

| | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப் பட்டவை. | அனுமதிக்க பட்ட தொகை. ரூ. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| அரிசனங்கள் | 5,27,870 | 4,74,308 | 73,63,664 |
| பழங்குடியினர் | 2,332 | 1,692 | 20,149 |
| மொத்தம் | 5,30.202 | 4,76,000 | 73,83,813 |

மெட்ரிக் படிப்புக்குப் பிந்திய படிப்பு—

| | | | |
|---|---|---|---|
| அரிசனங்கள் .. | 9,430 | 7,604 | 25,14,846 |
| பழங்குடியினர் .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 9,430 | 7,604 | 25,14,846 |

மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கும், மெட்ரிக் படிப்புக்கு மேற்பட்ட படிப்புக்கும் சேர்த்து ரூ. 98,98,659 படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டது.

## இந்திய அரசு ஓரளவு நிதி உதவி அளிக்கும் படிப்புதவித் தொகை.

இந்த ஆண்டில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள். | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| அரிசனங்கள்.— | | | |
| புதுப்பிக்கப்பட்டவை. | 22,396 | 8,866 | 40,72,957 |
| புதியவை .. | .. | 8,720 | 38,42,816 |
| மொத்தம் .. | 22,396 | 17,586 | 79,15,773 |
| பழங்குடியினர்.— | | | |
| புதுப்பிக்கப்பட்டவை. | 279 | 99 | 45,281 |
| புதியவை .. | .. | 67 | 45,234 |
| மொத்தம் .. | 279 | 166 | 90,515 |

**பிற்பட்ட வகுப்பினர் நலன் :**

ஐ.ஏ.எஸ். பதவித் தரத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் இம்மாநிலத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினரின் நலனைக் கவனிக்கின்றார். மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவரின் செயலாட்சிப் பொறுப்பின்கீழ் பணி புரியும் நல அதிகாரிகளும் மதுரையிலுள்ள மாவட்ட தனித்துணை ஆட்சித் தலைவரும் (கள்ளர் மேம்பாட்டுத் திட்டம்) பிற்பட்ட வகுப்பினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் ஆகியோர் நலனைக் கவனிக்கின்றார்கள்.—

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்கான பள்ளிகள்,, விடுதிகள், பிற்பட்ட வகுப்பினரின் விடுதிகள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | | |
|---|---|---|
| பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை .. | 277 | கள்ளர் பள்ளிகள் உட்பட |
| (அ) தொடக்கப்பள்ளிகள் .. | 235 | |
| (இ) உயர் தொடக்கப் பள்ளிகள். | 32 | |
| (உ) உயர்நிலைப் பள்ளிகள் .. | 10 | |
| பள்ளியில் படிப்பவரின் எண்ணிக்கை. | 42,836 | |
| (சிறுவர்) .. .. | 25,617 | |
| (சிறுமியர்) .. .. | 17,219 | |

| | பிற்பட்ட வகுப்பினர். | குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங் குடியினர். |
|---|---|---|
| விடுதிகளின் மொத்த எண்ணிக்கை .. | 123 | 46 |
| விடுதியில் சேர்ப்பதற்குரியோரின் மொத்த எண்ணிக்கை. | 7,608 | 4,369 |

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் உணவு விலை தலைக்கு 15 காசு என்ற வீதத்தில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் உள்ள குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினரின் பள்ளி நீங்கலாக, குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் பள்ளிகள், உணவு விடுதிகள் ஆகியவற்றில் உள்ள மாணவர்களுக்குக் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் ஒரு தொகுதியும் பொங்கல் விழாவின்போது ஒரு தொகுதியும் சீருடுப்புகள் வழங்கப்பட்டன. கள்ளர் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்புகளில் மாணவர்களுக்கு சீருடுப்பு தொகுதி ஒன்று வழங்கப்பட்டது.

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்புக்காகவும் மெட்ரிக் படிப்புக்கு பிந்திய படிப்புக்காகவும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இவ்வாண்டில் படிப்புதவித் தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டது

இவ்வாண்டில் அனுமதி வழங்கப்பட்ட படிப்புதவித் தொகைகளின் எண்ணிக்கை, செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | அனுமதி வழங்கப் பட்ட படிப்புதவித் தொகையின் எண்ணிக்கை. | செலவிடப் பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணிகள்.— | | |
| பிற்பட்ட வகுப்பினர் .. .. | 1,53,476 | 237·01 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர். | 34,795 | 20·45 |
| திட்டத்தில் சேர்க்கப்படாத பணிகள்.— | | |
| பிற்பட்ட வகுப்பினர் .. .. | 34,799 | 87·89 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர். | 39,126 | 14·39 |

கள்ளர் புதுவாழ்வுத் திட்டம் :—

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத் தனித் துணை ஆட்சித் தலைவர் (கள்ளர் புதுவாழ்வுத் திட்டம்) இவ்வாண்டில் கள்ளர் புதுவாழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து கவனித்து வருகின்றார்.

பள்ளிகள், உணவு—விடுதிகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை .. | 248 |
| தொடக்கப்பள்ளிகள் .. .. | 209 |
| இடைநிலைப்பள்ளிகள் .. .. .. | 30 |
| உயர்நிலைப்பள்ளிகள் .. .. .. | 9 |
| மொத்தம் .. | 248 |

| | | |
|---|---|---|
| (2) இப்பள்ளிகளில் பயில்பவர்களின் மொத்த எண்ணிக்கை. | | 39,047 |
| சிறுவர் | .. .. | 23,483 |
| சிறுமியர் | .. .. | 15,564 |
| (3) அரசினர் உணவு விடுதிகள் | .. .. | 18 |
| (4 விடுதியில் சேர்ப்பதற்குரிய மாணவர் எண்ணிக்கை. | | 2,665 |
| (5 அரசு உதவி பெறும் விடுதிகளில் தங்குபவர்களின் எண்ணிக்கை. | | 70 |
| (6 அரசு உதவி பெறும் விடுதிகளின் எண்ணிக்கை. | | 3 |
| (7) இவ்வாண்டில் செய்யப்பட்ட செலவுகளின் விவரங்கள்:— | | |
| (அ) பணிகள் | .. .. .. .. | ரூ.74,000 |
| (இ) குடிநீர்க் கிணறுகள் | .. .. | .. |
| (உ) பாசனக் கிணறுகளுக்காக கடனாகவும் உதவித் தொகையாகவும் அளிக்கப்பட்ட தொகை. | | .. |
| (எ) கள்ளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. | | 1 |

அஜீஸ் நகர் குடியேற்றம்—

இங்குக் குடியேறியவர்களின் முதன்மையான தொழில் பயிரிடுதலாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற நிபந்தனையுடனும் அவர்களின் வாழ்க்கையைச் செம்மையுடன் அமைத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்குடியேற்றத்தில் வசிப்பவர்களுக்கு மாற்று வேலை தரும் பொருட்டு (1) தச்சுவேலை (2) நெசவு வேலை ஆகிய இரு தொழில்கள் நடத்தப்படுகின்றன.

இவ்வாண்டில் செய்யப்பட்ட நிதியொதுக்கம், மற்றும் செலவு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொழிலின் பெயர். | நிதி ஒதுக்கம் | செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1 தச்சுத் தொழில் .. .. | 20,000 | 19,997.54 |
| 2 நெசவுத் தொழில் .. | 20,000 | 19,963.85 |

பூதானம்—

இந்த ஆண்டில் நிர்வாகப் பணியாளர் ஆற்றிய பணியின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | நேர்வுகளின் எண்ணிக்கை. | பரப்பளவு ஏக்கரில். |
|---|---|---|
| (1) நன்கொடையாகக் கொடுக்கப் பட்ட பூதான நிலங்கள். | 15,833 | 23,472 |
| (2) மாநில நிலக்கொடை வாரியத்தின் பெயருக்கு மாற்றப்பட்ட நிலக்கொடை பட்டா நிலங்கள். | 13,210 | 18,335 |
| (3) பிரித்துக் கொடுக்கப்பட்ட நிலக் கொடை நிலங்கள். | 2,623 | 5,137 |
| (4) வழங்கப்பட்ட நிலக்கொடை நிலங்கள். | 13,266 | 18,226 |
| (5) இதுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள். | 14,102 | 23,113 |

திருநெல்வேலி மாவட்டத்தில் நிலக்கொடை வழங்கப் பெற்றவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கடன்கள் குறித்து ரூ. 5·25 இலட்சத்தை மத்திய அரசு ஒதுக்கியது. இத்தொகை முழுவதும் 1973ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் செலவிடப்பட்டுள்ளது. அதே போல, மதுரை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 5·38 இலட்சம் 1973ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பதின்மூன்று நிலக்கொடைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு ரூ. 3,01,200 நிதி உதவி அனுமதித்தது. (இதில் கடன் ரூ. 2,30,267 ; உதவித் தொகை ரூ. 70,933) அனுமதிக்கப்பட்ட நிதி உதவி முழுவதும் முன்னரே அவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. இச்சங்கங்களிலிருந்து அரசுக்கு 98,093 ரூபாய் சேர வேண்டியுள்ளது.

முப்படைவாரிய அமைப்பு—

1968 ஆம் ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்ட தமிழ்நாடு முப்படை வாரியம், அறநிலைய அமைச்சர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இதில் அரசுச் சார்புள்ள 16 பேர்களும்—அரசு சார்பற்ற 22 பேர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரிய உறுப்பினர்களின் பதவிக் கால அளவு மூன்று ஆண்டுகளாகும்.

இம்மாநிலத்தில் மாவட்ட முப்படை வாரியம் இந்த ஆண்டு ஆற்றிய பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) முன்னாள் இராணுவத்தினர் முதலியவர்களிடமிருந்து வரப் பெற்ற முறையீடுகளின் எண்ணிக்கை. | 1,23,532 |
| (2) செயலாளர்களால் பேட்டி காணப்பட்ட முன்னாள் இராணுவத்தினரின் எண்ணிக்கை. | 89,309 |
| (3) முன்னாள் இராணுவத்தினர் முதலியோருக்கு நிலம் ஒதுக்கீடு செய்வது குறித்து வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 5,940 |
| (4) முன்னாள் இராணுவத்தினரைச் சார்ந்துள்ளாருக்கு வழங்கப்பட்ட கல்விச்சலுகைகளுக்கான தகுதிச் சான்றுகளின் எண்ணிக்கை. | 6,989 |

இந்த ஆண்டு ஓய்வூதிய ஒப்பளிப்பு அதிகாரிகளால் ஓய்வூதியம் வழங்கப் பெற்றவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| பணி ஓய்வூதியம் பெற்றவர் .. .. | 716 |
| குடும்ப ஓய்வூதியம் பெற்றவர் .. .. | 448 |
| இயலாமை ஓய்வூதியம் பெற்றவர் .. | 476 |

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் :—

இந்த ஆண்டில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் குடிசைப் பகுதி மாற்றுப் பணிகளை பரந்த அளவில் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. கீழ்க்கண்ட பணிகளை வாரியம் மேற்கொண்டுள்ளது :—

(1) குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாடு ;

(2) உரிய ஆதாயம் அளிக்கும் திட்டங்கள் ;

(3) தவணைக் கொள்முதல்.

வெளியூர்களில் குடிசைப் பகுதி மாற்றுவாரியம்:

வெளியூர்களில் குடிசை மாற்றுப் பணியை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கவனிக்கிறது. வெளியூர்களில் குடிசை மாற்றுப் பணித் திட்டங்களுக்காக 1972–73 ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

# அத்தியாயம் 19.

## தேர்தல்கள்

திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 23 தொகுதிகளில் அடங்கியுள்ள 6 பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள், அதாவது 133 திருமங்கலம், 134 உசிலம்பட்டி, 135 நிலக்கோட்டை, 136 சோழவந்தான், 144 திண்டுக்கல், 145 ஆத்தூர் ஆகியவற்றின் வாக்காளர் பட்டியல்கள் இடைத் தேர்தல் நடத்துவதற்குரிய நாளான 1—1—1973 ஆம் நாளன்றுள்ளவாறு தீவிர மறு ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

வீடு தோறும் சென்று கணக்கெடுக்கும் பணி திட்டமிட்டபடி 1972 நவம்பர் 15 ஆம் நாளன்று தொடங்கி 1972 நவம்பர் 30–ம் நாள் அன்று முடிவடைந்தது. கணக்கெடுப்பின்போது சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல்கள், முடிவு செய்தபடி, 3—1—1973 அன்று முதலில் வெளியிடப்பட்டன. இறுதியான வாக்காளர் பட்டியல்கள் 1973 மார்ச் 23–ல் வெளியிடப்பட்டன. வாக்காளர் பட்டியல்கள் குறித்த தீவிர மறு ஆய்வின்போது '' தேர்தல்'' அட்டை வழங்கும் நடைமுறை இம்மாநிலத்தில் முதன் முதலாகச் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. மேற்கு கோயம்புத்தூர் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இறந்து விட்டதால் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப 105 மேற்கு கோயம்புத்தூர் பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியல்கள் 1—1—1973யைத் தகுதியளிக்கும் தேதியாகக் கொண்டு பட்டியல்கள் திருத்தியமைக்கப்பட்டன.

### இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் தேர்தல்கள்
### மாநிலங்கள் அவை (ராஜ்ய சபை).

கீழ்க்காணும் ஆறு உறுப்பினர்களின் பதவிக் கால அளவு 1972 ஏப்ரல் 2ஆம் நாளன்று முடிவடைந்தது.

1. திரு. கே. சுந்தரம்.
2. திரு. டி. செங்கல்வராயன்.
3. திரு. எம். கமலநாதன்.
4. திரு. என். இராமகிருஷ்ண ஐயர்.
5. திரு. ஆர். டி. பார்த்தசாரதி.
6. திரு. என். ஆர். முனுசாமி.

1972 ஏப்ரல் 1ஆம் நாளன்று தேர்தல் ஒன்றை நடத்தி கீழ்க்கண்ட ஆறு பேர்களை தேர்ந்தெடுத்ததன் மூலம் மேற் சொன்ன காலியிடங்கள் நிரப்பப்பட்டன :

1. திரு. எம். எஸ். அப்துல்காதர்.
2. திரு. எம். கமலநாதன்,
3. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
4. திரு. வி. வி. சுவாமிநாதன்.
5. திரு. ஏ. சி. பாலன்.
6. திரு ஏ. கே. ரிபாயி.

நகராட்சி தேர்தல்கள் :

இம்மாநிலத்தில் உள்ள 91 நகராட்சி மன்றங்களில் 2 மன்றங் கள், அதாவது, திருச்சி மாவட்டத்தில் உள்ள பொன்மலையும், தஞ்சாவூர்மாவட்டத்தில் உள்ள சீர்காழியும் 1972 அக்டோபர் முதல் புதிதாக அமைக்கப்பட்டன. நகராட்சி மன்றங்கள் அனைத் திற்குமான தேர்தல்கள் 1972 ஏப்ரலில் நடைபெறவிருக்கின்றன. இந்நாள் வரை அரிசன உறுப்பினர், பெண்கள் ஆகியோருக்கு இரட்டை உறுப்பினர் வார்டுகளில் மட்டும் இடங்கள் ஒதுக்கப் பட்டன. இரட்டை உறுப்பினர் வார்டுகளை எடுத்துவிட்டு ஓர் உறுப்பினர் வார்டுகளில் இடங்களை ஒதுக்குவதற்காக தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டது. ஆகவே, நகராட்சி மன்றங்களுக்கு நடைபெறும் அடுத்த சாதாரண தேர்தல்கள் முதற் கொண்டு அரிசன உறுப்பினர், பெண்கள் ஆகியோருக்கு ஒரு உறுப்பினர் வார்டுகளில் மட்டுமே இடங்கள் ஒதுக்கப்படும்.

சென்னை மாநகராட்சிக்கும், மதுரை மாநகராட்சிக்கும் முறையே 1973 அக்டோபரிலும் 1974 ஏப்ரலிலும் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியபடி 1919-ஆம் ஆண்டு சென்னை மாநராட்சிச் சட்டத்தில் தக்க திருத் தம் செய்ததன் மூலம் தற்போதுள்ள 120 வட்டங்கள் 150 வட்டங் களாக ஆக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 20

## பல்வகை

**1932-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டு வணிகச் சட்டம்.**—பத்திரப் பதிவுத்துறையைச் சேர்ந்த மாவட்டப்பதிவாளர்கள் அனைவரும் 1932-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டு வணிகச் சட்டத்தின் கீழ் தொழில் நிறுவனங்களின் பதிவாளர்களாகத் தொடர்ந்து நீடித்தனர். 1908-ஆம் ஆண்டு இந்திய பத்திரப் பதிவுச் சட்டத்தின்கீழ் அவரவர்களது பதிவு மாவட்டங்களின்மீது அவர்கள் அதிகார வரம்புடையவர்களாக இருந்தனர்.

இந்த ஆண்டில், 6,220 தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன ; தொழில் நிறுவனங்களைக் கலைத்தது குறித்து 523 அறிவிப்புகள் தாக்கல் செய்யப்பட்டன.

நடப்பாண்டில் இச்சட்டத்தின்கீழ் ரூ. 83,690.30 வருவாய் கிடைத்தது ; ரூ. 18,139·45 செலவாகியது.

**தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.**—தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் தமிழ்நாடு முழுவதிலும் ஆய்வாண்டில் செயலிலிருந்தது. எனினும், 8—7—1964 ஆம் நாளன்று தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னர் திருவாங்கூர் சீட்டுகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சீட்டுகள் இச்சட்டத்தின் விதித்துறைகளினால் தொடர்ந்து முறைப்படுத்தப்பட்டன.

ஆய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை, ஆய்வாண்டு முடிவில் செயல்பட்டு வந்த சீட்டுக்களின் எண்ணிக்கை, மற்றும் பிற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| (1) | (2) | (3) |
|---|---|---|
| தொடர் எண்ணும் விவரங்களும். | 1972—73 தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம். | திருவாங்கூர் சீட்டு நிதிகள் சட்டம். |
| 1 ஆய்வாண்டில் பதிவுச் செய்யப்பட்ட சீட்டுகளின் எண்ணிக்கை. | 11,714 | |

| தொடர் எண்ணும் விவரங்களும் | 1972-73 தமிழ் நாடு சீட்டு நிதிகள் சட்டம் | திருவாங்கூர் சீட்டு நிதிகள் சட்டம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2 ஆய்வாண்டு முடிவில் செய லிலிருந்து சீட்டுகளின் எண்ணிக்கை. | 21,285 | 3 |
| 3 ஆய்வாண்டு முடிவில் செயலிலிருந்த சீட்டு களின் சீட்டுத் தொகை. | 9,60,95,150 | 12,145 |
| 4 வரவு (ரூபாய்) .. | 6,01,049 | |
| 5 செலவு (ரூபாய்) .. | 4,37,308 | |

தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டம்.—1973 மார்ச் 31-ம் ஆம் நாளன்றுள்ளபடி, தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் உள்ள பிச்சைக்காரர்கள், அவை அமைந்துள்ள இடம், அதில் தங்கக்கூடிய பிச்சைக்காரர்கள் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாவட்டம். | அமைந்துள்ள இடம். | எவ்வளவு பேர் இருக்கலாம் என்பது. | பிச்சைக் காரர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| செங்கற்பட்டு | பரனூர் | 425 | 515 |
| தென்னார்க்காடு | உளுந்தூர் பேட்டை. | 425 | 391 |
| தருமபுரி | பர்கூர் | 425 | 134 |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 425 | 333 |
| தஞ்சாவூர் | மனையேறிப் பட்டி. | 425 | 109 |
| கோயம்புத்தூர் | விண்ணபள்ளி | 425 | 36 |
| | | | 1,518 |

இந்த ஆண்டில், தமிழ்நாடு 1945-ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் தடுப்புச் சட்டத்தை காவல்துறையினர் மும்முரமாகச் செயல்படுத்தினர். 1971-72-ல் 7,308 பிச்சைக்காரர்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க, 1972-73ல் இச்சட்டத்தின் விதித்துறைகளின்கீழ் 8,282 பிச்சைக்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இடவசதிக் கட்டுப்பாடு :

குடியிருப்புக்கான கட்டிடங்களையும், குடியிருப்புக்கல்லாத பிற கட்டிடங்களையும் வாடகைக்கு விடுவதை முறைப்படுத்துதல், அந்தக் கட்டிடங்களில் குடியிருப்போரை தக்க காரணமின்றி வெளியேற்றுவதைத் தடுத்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதே தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் நோக்கமாகும்.

1972–73-ல் கவனிக்கப்பட்ட கட்டிடங்களின் விவரங்கள்கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) அறிக்கையிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 474 |
| (2) ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 334 |
| (3) சொந்தக்காரர்களின் குடியிருப்புக்காக விடுவிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 140 |
| (4) வாடகை ஏற்காட்டின் கீழ் அரசு புதிதாக எடுத்துக்கொண்ட வீடுகளின் எண்ணிக்கை. | 194 |
| (5) வாடகை ஏற்பாட்டின் கீழ் இந்த ஆண்டு இறுதியில் அரசிடம் உள்ள வீடுகள். | 1,787 |

எடைகளும் அளவைகளும்

எடைகள், அளவைகள் தரங்களைச் செயல்படுத்த தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயல்படுத்தல்) சட்டம் வகை செய்கிறது. இந்த ஆண்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தினர், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தியதுடன் இச்சட்டம். அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றையும் தொடர்ந்து செயல்படுத்தி வந்தனர்.

இந்த ஆண்டில், 70 தயாரிப்பாளர்கள், 430 வணிகர்கள், 172 எடைகள்-அளவைகள் பழுது பார்ப்போர் ஆகியோருக்கு எடைகள்-அளவைகள் சட்டத்தின்கீழ் எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியால் உரிமங்கள் வழங்கப்பட்டன. இதில் புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட உரிமங்கள் அடங்கும். இந்த ஆண்டில் 18 நேர்வுகளில் ஏற்றுமதி வாணிகம் தொடர்பாக இரு அளவுக் கூறுகள் குறிப்பிடப்பட்ட எடை போடும் இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. இத்துறையின் எடைகள்-அளவைகள் பிரிவு ரூ. 21,66,194·09 வருவாய் ஈட்டியது.

இந்து சமய-அறக் கட்டளைகள்.

இந்த ஆண்டில் இந்து சமய-அறக்கட்டளைகள் 'சட்டம் இம் மாநிலத்தில் தொடர்ந்து செயலில் இருந்து வந்தது.

இத்துறையின் பொறுப்பில் 13,027 சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் வருமாறு :—

| நிறுவனத்தின் பெயர். | நிறுவனங்களின் எண்ணிக்கை. |
| --- | --- |
| கோவில்கள் .. .. .. .. .. | 12,038 |
| மடங்கள் .. .. .. .. .. .. | 157 |
| தனிவகை அறக்கட்டளைகள் .. .. .. | 832 |
| | 13,027 |

இந்த ஆண்டில் மேற்சொன்ன நிறுவனங்களின் மூலம் 6·75 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது.

வஃபுகள்.

1954 ஆம் ஆண்டு வஃபு சட்டம் தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. இந்த ஆண்டின் வரவு-செலவு விவரங்கள் வருமாறு :—

| | |
| --- | --- |
| வருவாய் .. .. .. .. | ரூ. 10,97,073·09 |
| செலவு .. .. .. .. | ரூ. 11,26,300·45 |

இந்த ஆண்டில் சட்டத்திற்கு முரணாக அனுபோகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட வஃபு சொத்துக்களை மீட்க 1,324 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. சொத்து மாற்ற வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான கால வரையறையை 1975 ஆம் ஆண்டு இறுதி வரை மேலும் மூன்றாண்டுக்கால அளவிற்கு அரசு நீட்டித்துள்ளது.

தகவல்-விளம்பரம்.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் மூன்று தகவல் நிலையங்கள் செயல்பட்டன. கூட்டங்கள் நடத்துவதற்காகவும், சிறுவர்களுக்கான திரைப்படங்களைக் காட்டவும் (சென்னையில் கலைவாணர் அரங்கம், வேலூரில் அண்ணா கலை அரங்கம்) இரண்டு கலை அரங்குகள் உள்ளன.

வெளியீடுகள்.

இத்துறை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு வரும் தமிழரசு பத்திரிகை, தமிழ்நாடு அரசின் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றிய தகவலை அளிக்கும் மாநில அரசின் ஒரே பத்திரிகை ஆகும். திரைப் படத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் நிர்வாகத்தை இத்துறை 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ஆம் நாள் முதல் மேற்கொண்டது. திரைப்பட நடிப்பு, டைரக்ஷன், திரைப்படக்கதை எழுதுதல், எடிட்டிங் போன்ற பிரிவுகளில் தகுதிப் பட்டயப் பாடமுறைப் பயிற்சியை அது அளிக்கிறது.

சுற்றுலா.

1972–73-ல், இராமேஸ்வரத்தில் சுற்றுலாப் பயணிகள் மாளிகை ஒன்றைக்கட்ட இந்திய அரசு ரூ. 6 இலட்சம் அளித்தது. இதற்கான நிலத்தை மாநில அரசு இலவசமாகக் கொடுத்தது; இதற்குரிய அணுகு சாலையை அமைக்க ரூ. 1·72 இலட்சம் அனுமதித்தது.

உதகமண்டலம் ஏரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டை சுற்றுலாத் துறை மீனளத்துறையிடமிருந்து எடுத்துக் கொண்டு, அதன் மேம்பாட்டிற்காக சுமார் ரூ. 5 இலட்சம் செலவிட்டது.

எழுது பொருள்–அச்சுத் துறை.

எழுது பொருள்–அச்சுத் துறையில் கீழ்க்கண்ட பிரிவுகள் உள்ளன :—

எழுது பொருள் பிரிவு
தங்கசாலையில் உள்ள மைய அச்சகம்
வெளியீட்டு நிலையம் (விற்பனைப் பிரிவு)
அண்ணசாலையில் உள்ள கிளை அச்சகம்
மத்திய சிறைச்சாலையில் உள்ள கிளை அச்சகம்
உயர்நீதி மன்றத்தில் உள்ள கிளை அச்சகம்
புதுக்கோட்டையில் உள்ள கிளை அச்சகம்

சேலம், திருச்சிராப்பள்ளி, விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள வட்டார அச்சகங்கள்.

ஏனைய கிளை அச்சகங்களும், வட்டார அச்சகங்களும் தொடர்ந்து துறைப் பணியைச் செய்கின்றன.

எழுது பொருள் பிரிவு.—அரசுத் துறைகளின் பயனுக்காக எழுது பொருள், துணி, தட்டச்சு இயந்திரங்கள், நகல் எடுக்கும்

இயந்திரம் ஆகியவற்றை வாங்கி இருப்பு வைத்துப் பங்கீடு செய்யும் ஒரு மைய அமைப்பாக இத்துறையின் எழுது, பொருள் பிரிவு செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள அரசு அலுவலகங்கள் அனைத்திற்கும் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டில் அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட தட்டச்சு இயந்திரங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்கள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| தட்டச்சு இயந்திரங்கள் (ஆங்கிலம்) .. .. | 665 |
| தட்டச்சு இயந்திரங்கள் (தமிழ்) .. .. .. | 204 |
| நகல் எடுக்கும் இயந்திரங்கள் (மின்சக்தியால் இயக்கப்படுபவை). | 36 |
| கணக்கிடும் பொறிகள் .. .. .. .. | 37 |
| நகல் எடுக்கும் இயந்திரங்கள் (கையால் இயக்கப்படுபவை). | 146 |

1972 ம் ஆண்டு, துணைத் தேவைப்பட்டியல்களுக்கு இப்பிரிவு பொருள்களை வழங்கியது.

கர்நாடகக் குடும்பத்தாருக்கு உதவித் தொகை.

கர்நாடகக் குடும்பத்தாருக்கு அலுவல் முறையில் உதவித் தொகை கொடுப்பவர் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராவார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் கர்நாடகக் குடும்பத்தாருக்கு உதவித் தொகை கொடுக்கும் உதவி அதிகாரியாவார்.

ஆர்க்காடு இளவரசருக்கும், ஆர்க்காடு நவாபின் வாரிசுதாரர்களுக்கும் இந்த உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. நிலையாகவே உதவிப் பணம் பெறுபவர் 111 பேரும் தற்காலிகமாக உதவிப் பணம் பெறுபவர்கள் 9 பேரும் இருக்கின்றனர். இச் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. மேலாளர் ஒருவர், பதிவேட்டெழுத்தர் ஒருவர், கடை நிலை ஊழியர் ஒருவர் ஆகியோரடங்கிய அரசிதழ்ப் பதிவு பெறாத ஊழியர்களுக்கான ஊதியம் மாநில அரசு வருவாயிலிருந்து கொடுக்கப்படுகிறது.

திரு. குலாம் மொகைதீன் கான் சாகிப்புக்கு திரு. G.M. அப்துல் காதர் சட்டப்படிக்கான வாரிசு என்று இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. சென்னை, இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து மாத

மொன்றுக்கு ரூ. 6,096·17 ஒய்வூதியமும், படியும் அவர் பெறுகிருர். 1972 ஏப்ரல் 1ஆம் நாளிலிருந்து 1973 மார்ச் 31 ஆம் நாள் வரை உள்ள கால அளவில் ரூ. 1,45,154·50 செலவிடப்பட்டது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிறுவனம்.

1972–73 ஆண்டுகளில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அட்டவணைகளையும், அறிக்கைகளையும் அச்சிட்டு வெளியிடும் பணியில் இந்த நிறுவனம் முக்கியமாக ஈடுபட்டது. அடிப்படை மக்கள் தொகைக் கணக்கெடுப்பும், தொடர்பான நாளும் (பகுதி X-A X -B) அடங்கிய மாவட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரச் சுவடிகள் மாவட்டங்கள் அனைத்திற்கும் வெளியிடப்பட்டுள்ளன. மற்றொரு மக்கள் தொகை கணக்கெடுப்பு வெளியீடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வெளியீடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு-அட்டவணைப் படுத்துதல் குறித்த நிர்வாக அறிக்கையாகும். வீட்டு வசதி அறிக்கை, அட்டவணைகள் பணியாளரமைப்பு குறித்த அறிக்கை, பொதுவான மக்கள் தொகை அட்டவணைகள் (தமிழ் நாடு, புதுச்சேரி) ஆகிய தொகுப்புகள் முடிவாக்கப்பட்டு அச்சிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவை 1973–74 முதல் காலாண்டில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்சொன்ன பணிகள் தவிர, 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு துணைத் திட்டத்தின் ஒரு பகுதியாக சிதம்பரம் நகரத்தின் ஆய்வுப் பணியை இந்நிறுவனம் முடித்துள்ளது. கிராம மறு ஆய்வுத் திட்டத்தின் கீழ் அய்யங்கார் குளம் கிராம ஆய்வுப் பணியை மேற் கொள்வதற்கான தொடக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

உள்நாட்டுப் பாதுகாப்பு.

தமிழ்நாடு ஊர்க்காவல் படையாளர் உள்நாட்டுப் பாதுகாப்புப் படையினராவார்கள். உள்நாட்டுப் பாதுகாப்பு இயக்குநர் அலுவலகம் அமைதிக் காலத்து அலுவல்களைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

(அ) முக்கியமான மாவட்ட நகரங்களின் உள்நாட்டுப் பாதுகாப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

(ஆ) ஊர்க்காவல் படையினருக்கும் பிற தொண்டு நிறுவனங்களுக்குமிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தும் இணைப்பாகச் செயல்படுதல்.

1973ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆம் நாளன்றுள்ளபடி தமிழ்நாட்டில் ஊர்க்காவல் படையில் உள்ள காலியிடங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | .. | 12,430 (113 கம்பெனிகள். |
| (2) உள்ளவர்கள் | .. .. .. | 10,644 |
| (3) காலியிடங்கள் | .. .. .. .. | 1,786 |

தேசிய மாணவர் படை.

1972–73-ல், 159 கல்லூரிகளிலும், 676 உயர்நிலைப் பள்ளிகளிலும் தேசிய மாணவர் படை தொடர்ந்து செயல்பட்டு வந்தது. 1973 மார்ச் 31 ஆம் நாளன்றுள்ளபடி, தமிழ்நாட்டில் மாணவர் தேசியப்படையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை. | உள்ளவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| முதுநிலைப் பிரிவு— | | |
| (இராணுவப் பிரிவு) மாணவர்கள். | 24,000 | 25,205 |
| (கடற்படைப் பிரிவு) மாணவர்கள். | 1,000 | 1,105 |
| (விமானப்படைப் பிரிவு) மாணவர்கள். | 800 | 799 |
| மாணவியர் | 2,400 | 5,854 |
| | 28,200 | 32,963 |
| இளநிலைப் பிரிவு— | | |
| (இராணுவப் பிரிவு) மாணவர்கள். | 52,300 | 52,976 |
| (கடற்படைப் பிரிவு) மாணவர்கள். | 5,700 | 5,391 |
| (விமானப்படைப் பிரிவு) மாணவர்கள். | 6,800 | 5,062 |
| மாணவியர் | 5,000 | 5,301 |
| | 69,800 | 68,730 |

மொழிபெயர்ப்பு.

தலைமைச் செயலகத் துறைகளில் தமிழை முழு அளவில் ஆட்சி மொழியாகச் செயல்படுத்தியதன் பயனாக, இந்த ஆண்டில் இத்துறையின் பணிச்சுமை கணிசமான அளவுக்குப் பெருகியுள்ளது. வழக்கம்போல், அமைச்சர்கள் உரை, அமைச்சர்களின் வானொலி உரை, சட்டமன்றத்தில் அவர்கள் அளிக்கும் அறிக்கைகள் முதலியவற்றை மொழிபெயர்க்கும் பணிக்கு பிற பணிகளைவிட அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருந்தது. சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது, குறிப்பாக, வரவு-செலவுத் திட்டக் கூட்டுத் தொடரின்போது இத்துறையின் பணிச் சுமை மிகையாக இருந்தது. இந்த ஆண்டில் தலைமைச் செயலக நிர்வாகத்தில் இத்துறை ஆற்றிய பணி குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ் வளர்ச்சி.

அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் இந்த ஆண்டில் மும்முரமாகச் செயல்படுத்தப் பட்டது. தமிழை முழுஅளவில் ஆட்சிமொழியாக்கும் திட்டத்தின் நான்காவது நிலை இந்த ஆண்டில் தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைவர்கள் அலுவலகங்கள் வட்டார அலுவலகங்கள் ஆகியவற்றில் மட்டுமின்றி ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிலும் நீட்டிக்கப்பட்டது.

## 1972–73-ல் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகள்.

| நாள். | நிகழ்ச்சிகள். |
|---|---|
| 1972 மே 21 ஆம் நாள் .. | தேசியப் பாதுகாப்பு நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக 6 கோடி ரூபாய் இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தியிடம் கொடுக்கப்பட்டது. |
| 1972 ஜூன் 30 ஆம் நாள் .. | ராஜாஜி மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் ஆகியோரின் ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. |
| 1972 ஆகஸ்டு 14 ஆம் நாள் .. | தமிழ்நாடு சட்டமன்றத்தின் நள்ளிரவுக் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் உரையாற்றினார். |

| | |
|---|---|
| 1972 ஆகஸ்டு 15 ஆம் நாள் .. | இந்தியா சுதந்திரம் அடைந்த 25-வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள். |
| 1972 செப்டம்பர் 1 ஆம் நாள்.. | சென்னையில் நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் செய்யும் பொருட்டு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி.வி. கிரி வந்தார். |
| 1972 செப்டம்பர் 2 ஆம் நாள்.. | கிண்டி, ராஜ்பவனில் திரு. அன்பில் தர்மலிங்கம் அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். |
| 1972 செப்டம்பர் 5 ஆம் நாள்.. | தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் சிலையைத் திறந்து வைக்க தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி வந்தார். |
| 1972 செப்டம்பர் 6 ஆம் நாள்.. | கன்னியாகுமரி-திருநெல்வேலி — திருவனந்தபுரம் ரயில் பாதைக்கான அடிக்கல்லை தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி நாட்டினார். |
| 1972 செப்டம்பர் 13 ஆம் நாள்.. | வீரச் செயலுக்கான தன்னிகரற்ற பணிக்கான காவல் துறையின் விருதினை முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி காஞ்சீபுரத்தில் வழங்கினார். |
| 1972 செப்டம்பர் 29ஆம் நாள்.. | தமிழ்நாட்டில் வறட்சி நிலைமைபற்றி விவாதிக்க சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு நடைபெற்றது. |
| 1972 அக்படாபர் 2 ஆம் நாள்.. | மகாத்மா காந்தியின் 104-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. |

| | |
|---|---|
| 1972 அக்டோபர் 3 ஆம் நாள்.. | முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி திரு. இராஜகோபாலாச்சாரியை அவரது இல்லத்தில் சந்தித்து தாமிரப்பத்திரத்தைக் கொடுத்தார். |
| 1972 அக்டோபர் 5 ஆம் நாள்.. | இந்தியாவில் உள்ள சட்டமன்றத் தலைவர்களின் பொன்விழா மாநாடு தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் சட்ட மன்றப் பேரவையில் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். லோக்சபைத் தலைவர் திரு. தில்லான் தலைமை தாங்கினார். |
| 1972 நவம்பர் 14 ஆம் நாள் .. | அகில இந்திய கூட்டுறவு வங்கி நாள் ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள். |
| 1972 டிசம்பர் 20 ஆம் நாள் முதல் 24 ஆம் நாள் முடிய. | இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி.வி. கிரி சென்னைக்கு வருகை. |
| 1972 டிசம்பர் 25 ஆம் நாள்.. | முன்னாள் இந்தியக் கவர்னர் ஜெனரலும் சென்னையின் முன்னாள் முதலமைச்சருமான திரு. இராஜகோபாலாச்சாரி மரணம் அடைந்தார். |
| 1973 ஜனவரி 5 ஆம் நாள் .. | காந்தி கிராமத்தின் வெள்ளி விழா கொண்டாட்டம் தொடர்பாக மதுரை மாவட்டத்தில் காந்தி கிராமத்தில் திருமதி இந்திரா காந்தி ''காந்திஸ்தூபியை'' திறந்து வைத்தார். |
| 1973 ஜனவரி 10 ஆம் நாள் .. | திரு. கே. பிரம்மானந்த ரெட்டி தலைமையிலான ஆறுவது நிதிக்குழு ராஜாஜி மண்டபத்தில் கூடியது. தமிழ்நாடு முதலமைச்சரும் பிற அமைச்சர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். |

| | |
|---|---|
| 1973 ஜனவரி 26 ஆம் நாள் .. | குடியரசு நாள் கொண்டாட்டம். வண்ண அலங்கார வண்டிகள் ஊர்வலம். |
| 1973 பிப்ரவரி 2 ஆம் நாள் .. | தமிழ் நாடு சட்டமன்றத்தின் கூட்டு அவைக் கூட்டத்தில் ஆளுநர் திரு. கே. கே. ஷா உரையாற்றினர். |
| 1973 பிப்ரவரி 15-ஆம் நாள் முதல் 1973 பிப்ரவரி 17 ஆம் நாள் முடிய. | இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி சென்னை வருகை. |
| 1973 பிப்ரவரி 26 ஆம் நாள் .. | தமிழ் நாடு முதலமைச்சர் 1973–74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்தார். |

வெளிநாட்டுப் பிரமுகர்கள் தமிழ் நாட்டுக்கு வருகை.

கீழ்க்கண்ட வெளிநாட்டுப்பிரமுகர்கள் சென்னை மாநகருக்கும் இம்மாநிலத்தில் உள்ள ஏனைய இடங்களுக்கும் வருகை தந்தனர். அவர்கள் வருகை தந்த இடங்கள் குறித்த விவரங்கள், அவர்கள் எப்போது வந்தனர் என்பது பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| தொடர் எண்ணும் வெளி நாட்டுப் பெருந்தகையாளரின் பெயரும். | வருகை தந்த நாள். | வருகை தந்த இடங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 திருமதி. ஜே.பி. ஒப்ஸி கேரே சுகாதாரத் துறை துணை அமைச்சர், ஸ்ரீலங்கா. | 1973 ஜனவரி 2 ஆம் நாளிலிருந்து 6 ஆம் நாள் முடிய. | சென்னை. |
| 2 ராணி பிரடெரிக்கா, கிரீஸ் நாட்டு அரசரின் தாயார். | 1973 ஜனவரி 11-ஆம் நாளிலிருந்து மூன்று வாரங்கள். | சென்னை. |

| தொடர் எண்ணும் வெளிநாட்டு பெருந்தகையாளரின் பெயரும். (1) | வருகை தந்த நாள். (2) | வருகை தந்த இடங்கள் (3) |
|---|---|---|
| 3 மேதகு தலாய்லாமாவும் அவர் குழுவினரும். | 1973 ஜனவரி 17 ஆம் நாள், 19 ஆம் நாள் 1973 ஜனவரி 18 ஆம் நாள். | சென்னை. புதுச்சேரி. |
| 4 திரு. ஜே. பி. வைசாரா, கல்வி அமைச்சர், பிஜி அரசு. | 1973 ஜனவரி 21-ஆம் நாள். | சென்னை. |
| 5 திரு. ஹெர்பர்ட்ஃபிஷர், ஜெர்மனி ஜனநாயகக் குடியரசின் தூதர். | 1973 ஜனவரி 27 ஆம் நாள் முதல் 31- ஆம் நாள் முடிய. | சென்னை. |
| 6 மேதகு மைத்திரிபாலா சேனநாயகா பாசன அமைச்சர், ஸ்ரீலங்கா. | 1973 ஜனவரி 29-ஆம் நாள் முதல் பிப்ரவரி 1-ஆம் நாள் முடிய. | சென்னை. |
| 7 காண்டர்பரி ஆர்ச் பிஷப். 60 RC | 1973 மார்ச் 1 ஆம் நாள் முதல் மார்ச் 5 ஆம் நாள் முடிய. | சென்னை. |
| 8 கென்யா நாட்டு ஹைகமிஷனர் திரு. எஸ். கே. கிமலேல். | 1973 பிப்ரவரி 2 ஆம் நாள். | சென்னை. |
| 9 திரு. ஆர். ஆர். கன்னிங்ஹாம், நியூஜிலாந்து ஹைகமிஷனர். | 1973 மார்ச் 5 ஆம் நாள். | சென்னை. |
| 10 திரு. பெர்னண்டா நவாஸ் டி பூகார்டு, கொலம்பியா நாட்டு தூதர். | 1973 மார்ச் 17 ஆம் நாள் முதல் 20 ஆம் நாள் முடிய. | சென்னை. |

தமிழ்நாடு அரசு அச்சகம்.

31 MAY 1977 PIV 6/158